OLIARAZI

மாத சஞ்சிகை

# ஒளிஅரசி

இல்லத்தரசிகளின் தோழி

நல்லதொரு குடும்பம்

ஒளி - 02 இதழ் - 03
பெப்ரவரி 2015
பக்கங்கள் : 72

ரூபா 75

PUBLIC LIBRARY
JAFFNA.



வேலியே பயிரை மேய்வதா?

விவாத மேடை

காதலர் தினம்

குழந்தைத் தொழிலாளர்

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

BSN
TRADERS

## Sole Agent For

**TECHNOVA IMAGING SYSTEM (P) Ltd - INDIA,**
TechNova PS Plates, CTP Plates, CTCP Plates, Web Offset Ink and Chemicals

O/M/M
HAMMONDS CHEMICALS

**PRESSROOM CHEMICALS**
Hammond Services - UK,
OMM Graphics - Malaysia,
Printers Planet Ltd. - Hong Kong,

DONGWU OFFSET INK

**OFFSET PRINTING INKS**
Suzhou Kings Wood Printing Ink Co Ltd-China

PCS GRAPHIC ART PRODUCTS SL

**CUTTING STICKS**
PCS Graphic Art Products - Spain

SCHOELLERSHAMMER

**TRACING PAPERS**
Sehoellers Shammer - Germany

FUJIKURA GRAPHICS

**BLANKETS**
Fujikura Rubber Ltd. - Japan

abezeta

**BLACK COVERING SPRAY**
Abezeta - Spain

# Be Es En Traders

**Suppliers of Offset Plates, Chemicals, Printing Ink, Machinary & All Other Printing Requisites**

No. EG1, Central Road, Colombo 12, Sri Lanka.
Tel : +94 11 2348418, 2348419, 2387924, 2330297
Fax : +94 11 2449809
E-mail : bees@sltnet.lk

Design by : Devan

PUBLIC LIBRARY
JAFFNA

# நுழைவாயில்



| | |
|---|---|
| ரொமான்ஸ் | 08 |
| எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே! | 10 |
| கல்வியியலாளருடன் | 12 |
| மனைவி | 27 |
| ஊடல் இன்பம் | 29 |
| அசரவைக்கும் அணிகலன்கள் | 30 |
| சிரிப்பில் ஒரு நெருப்பு | 48 |
| ஆம்பள - சினிமா விமர்சனம் | 54 |
| ஐந்து முட்டாள்கள் | 55 |

# "ஒளி அரசி"

இல்லத்தரசிகளின் தோழி

**மாதம் ஒரு முறை**
**பெப்ரவரி 1 - 28, 2015**

நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு:**
எஸ். கஜரூபன்

**ஆசிரிய பீடம்**
**தொலைபேசி:** 071 8628369, 011 5738003

தொலைநகல்: 011 5517945
E-mail: oliarazi33@gmail.com
editoroliarazi@gmail.com

**விளம்பரப் பிரிவு :**
கொழும்பு : 078 8864730, 071 4114997
வட மாகாணம் : 021 5671111

**விநியோகப் பிரிவு :**
கொழும்பு : 011 5737592, 071 8628379
வட மாகாணம்:
021567222, 0776569617, 071 6182182
**சந்தா விபரம்:** ( ஒரு வருடம்) 900/= (தபால் செலவு தவிர்ந்த)

**கடித தொடர்புகளுக்கு :**
ஆசிரியர், 'ஒளிஅரசி'
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



**வாசகர் விழிப்பு:**
**விளம்பரங்களின் உண்மைத்தன்மை தொடர்பாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும்போது ஆவணங்களை சரியாக பரிசோதித்து பார்ப்பது வாசகர்களின் கடமையாகும்.**


**வாசகர் கவனத்திற்கு**

**பல வாசகர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றிய 130000/= க்கான சமய, அறிவு போட்டிக்கான முடிவுகள் அடுத்த மாத சஞ்சிகையில் வெளிவரும்.**
**- ஆசிரியர் குழு -**

**அன்பான வாசகர்களுக்கு,**

ஒளிஅரசியின் மற்றுமோர் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். காலம் தவறாது - இதழ்கள் தப்பாது ஒவ்வொரு மாதமும் ஒளிஅரசியின் இதழினை உங்களிடத்து சமர்ப்பிப்பதில் ஏற்படுகின்ற மகிழ்வு சொல்லில் அடங்காது. வாசகர்கள் ஆகிய நீங்கள் தொடர்ச்சியாக தந்துகொண்டிருக்கின்ற எல்லை கடந்த அன்பும் ஆதரவுமே நாம் ஒளிஅரசியினை மென்மேலும் சிறப்பாக வெளியிடுவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

அந்த வகையில் இந்த இதழில் புதிதாக இரண்டு போட்டித் தொடரினை ஆரம்பித்துள்ளோம். முதலாவது ''விவாத மேடை'' என்னும் போட்டித் தொடராகும். வாசகர்களாகிய உங்களிடத்து சமூகம் தொடர்பில் இருக்கக்கூடிய அபிப்பிராயங்களை தர்க்கரீதியாக வெளிக்கொணர்வதற்கு இந்தப் போட்டித் தொடர் உதவும் என நம்புகின்றோம். ஒரு விடயத்தை வெறுமனே ஏற்றுக்கொள்கின்ற அல்லது மற்றவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி ஏற்றுக்கொள்கின்ற ஓர் சமூகமாக அல்லாமல் எந்த ஓர் விடயத்தையும் ஏன், ஏதற்கு, எப்படி என தர்க்கரீதியாக சிந்தித்து செயலாற்றுகின்ற ஓர் ஆரோக்கியமான சமூகம் உருவாக வேண்டும். அதற்கு இவ்வாறன விவாத மேடைகள் உதவும் என்கின்ற நம்பிக்கையில் ஒரு சமூக நோக்குடனேயே இவ்விவாத மேடை போட்டித் தொடரினை ஆரம்பித்துள்ளோம். வழமைபோல் வாசகர்களாகிய உங்களது ஆதரவு இதற்கு கிடைக்குமென நம்புகின்றோம்.

இரண்டாவது, ''பொதுஅறிவுப் போட்டித் தொடர்.'' இன்று எமது சமூகத்தில் பொது அறிவு என்பது குறைந்து வருகின்றதோ என எண்ணத் தோன்றும் அளவிற்கு சம்பவங்கள் நிகழ்கின்றன. மாணவர்கள் என்று மாத்திரமல்ல பெரியவர்கள் கூட பொது அறிவு உடையவர்களாக விளங்குகின்ற போது அச்சமூகம் உயர் சமூகமாக மாற்றமுறும். அந்த வகையில் இப்பொது அறிவுப் போட்டித் தொடர் வாசகர்களாகிய உங்களிடத்து பொது விடயங்களை தேடி அறிந்துகொள்ளும் ஆவலினை தூண்டும் என நம்புகின்றோம்.

இவ்விடயங்கள் தவிர மேலும் பல புதுமைகளைத் தாங்கிவரும் ஒளிஅரசிக்கு உங்களது ஆதரவு தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றோம்.

- ஆசிரியர் குழு -

# வலிமையில்தான் பூக்கின்றன இனிமைகள்

அடுக்களைக்குள் ஒரு அழகுப் பொருளாய் பெண்களும் அடுக்கப்பட்ட காலம் என ஒன்று உண்டு. ஆனால், இன்று அவ்வாறில்லை. தட்டித்தட்டிச் செதுக்கிய பாரதியின் புதுமைப் பெண்களாய் நிமிர்ந்து நிற்கும் காலம் இது. உயர்ந்த உன்னதமான வாழ்வுக்கு உரமூட்டுவது பெண்களின் தன்நம்பிக்கையும், விடாமுயற்சியும்தான். தன்நம்பிக்கைதான் பெண்களுக்கு அழகான தோற்றத்தைக் கொடுக்கிறது. செயற்கை அழகுசாதனப்பொருட்கள் எல்லாம் வெறும் உடல் அழகுக்குத்தான். உண்மையான அழகு என்பது ஒவ்வொரு பெண்ணினதும் தன்னம்பிக்கையில்தான் பிறக்கிறது. கடந்த காலத்தின் உதாரணங்களைத் தட்டிப் பார்த்தால் நிச்சயம் வெற்றிகளுக்குப் பின்னால் வலிகளே இருக்கின்றன. அந்த வெற்றிகளின் அடித்தளமாய் அமைவது துணிவும் திடமான மனமும்தான்.

அம்மையார் புளோறன்ஸ் நைற்றிங்கேல், மேரிபியூரி அம்மையார், பெனசீர் பூட்டோ, ஜெயலலிதா, யூசுப் போன்றவர்கள் பல கடினங்களைக் கடந்தே வெற்றிகளைச் சாதித்தனர். இவர்களின் வெற்றிகள் கையில் வந்து விழுந்த கனிகள் அல்ல. கரடு முரடான பாதைகளில் வலிக்க வலிக்க பயணம் செய்தபின் கிடைத்த அருங்கனிகள். அதனால்தான் இவர்களின் வெற்றிகள் சிகரமாய் நோக்கப்படுகிறது. உலகம் உவகையுடன் கொண்டாடுகிறது.

அம்மையார் புளோற்றன்ஸ் நைற்றிங்கேல் அவர்களை எடுத்துக்கொண்டால் இத்தாலியின் புளோறன்ஸ் நகரில் வில்லியம் எட்வார்ட் நைற்றிங்கேல் - பிரான்சிஸ் நைற்றிங்கேல் என்போருக்கு மகளாகப் பிறந்தார். இவர் உயர் செல்வச் சீமான்களின் பரம்பரையில் அவதரித்தவர். ஆனாலும் எளியவர், திக்கற்றவர், வறியவர் போன்றோருக்குப் பணியாற்றுவதிலேயே அவரது மனம் இலகித்தது. தாதித் தொழில் மிக மிக இழிவாக கருதப்பட்ட அக்காலத்தில் குடும்பத்தினரின் வெறுப்புகளுக்கும், மறுப்புகளுக்கும் மத்தியில் துணிவுடன் இத்தொழிலை பலருக்குக் கற்றுக்கொடுத்தார்.

இன்றைய தாதிச் சேவையின் தாயாக இருப்பவர் புளோறன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரே. ஓடர் ஓவ் மெரிட் எனும் விருது பெற்ற முதல் பெண்மணியும் இவரே. இவை மட்டுமன்றி இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளியாளருமாய் விளங்கினார்.

நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணியான மேரி பியரி அம்மையாரும் வாழ்வில் பல கஷ்டங்களை எதிர்கொண்டவர். இவரது இளமை நாட்களில் வறுமை இவரை படுபயங்கரமாக வாட்டி வதைத்துள்ளது. பல நாட்கள் பட்டினியால் மயக்கமடைந்த சம்பவங்களும் இவரது வாழ்வில் உண்டு. காலையில் கற்கையையும், மாலையில் கற்பித்தலையும் மேற்கொண்டு விருது பெற்றவர். இயற்பியலில் அவர் பெற்ற விருது தனியான அவரது விடாமுயற்சியினதும், தன்னம்பிக்கையினதும் வெற்றி என்றால் வேதியல் விருதுக்கு அவரை தயார்படுத்தியவர் அவரது கணவர்தான். இவர்கள் இருவரும் அறிவியலில் மட்டுமல்ல குடும்ப வாழ்விலும் மிக ஒற்றுமையாக ஜொலித்தவர்கள். இவர்களின் உறவில் நெருக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்திய விடயங்கள் நீண்ட தூர மிதிவண்டி பயணமும் ஒன்றாக மேற்கொண்ட வெளியூர்ப் பிரயாணங்களுமே. தன்னுடைய ஆராய்ச்சிகள் தனக்கே எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தெரிந்திருந்தும் அம்முயற்சியை கைவிடாது வெற்றி கண்டு மரணித்தவர் மேரி பியரி அம்மையார். அதனால்தான் இன்றும் அவரது பெயரை உலகம் நன்றியோடு உச்சரிக்கிறது.

இவர்களைப்போல எம்மில் எத்தனை பேர் இருக்கின்றோம். சின்ன துன்பம் கண்டதும் துவண்டு, மடிந்து, சரிந்து வாழ்வை முடித்துக்கொள்வதே யதார்த்தமாக உள்ளது. வாழ்க்கை வாழ்ந்து பார்ப்பதற்கே என்பதை புரிந்துகொள்வோம். வலிமையில்தான் இனிமைகள் பூக்கின்றன என்பதை உணர்ந்து துணிவுடன் போராடி வெற்றிபெறுவோம். அப்போதுதான் வரலாற்றின் ஒரு மூலையில் நாமும் பொறிக்கப்படுவோம். ▲

# விடியலைத் தேடி



விடியலை நோக்கி
காட்டுப் பூ ஒன்றின்
ஒற்றைவழிப் பயணமிது
கற்களும் முட்களும்
சுவர்களுமாய் கடந்து
அதன் இலக்கை நோக்கி
நகர்கிறது
அதன் எல்லைநீண்டு
விரிந்து போனபோது
அது தன் சக்தியிழந்து
சோர்ந்து போனது
பயணத்தின் முடிவிடம்
கண்ணுக்கெட்டியவரை
தெரியாத போது
அதைப்பற்றி
எப்படிச் சிந்திப்பது ?
அது சொப்பனத்தில் கூட
கண்டிருக்கவில்லை
இப்படி ஒரு பயணத்தை
காட்டெலிகளும்
மாமிச விரும்பிகளும்
அதை வழிமறித்தன.
எத்தனையோ போராட்டம்
எத்தனையோ எதிர்ப்புகள்
எத்தனை எத்தனை
காட்டுப் பூக்கள் - தம்
காட்டு வழிப்பயணத்தின்
முடிவினை எட்ட முடியாது
வீழ்ந்து போயின
இவை எல்லாவற்றுக்கும்
முற்றுப்புள்ளியாய்
அந்தக்காட்டுப்பூ
தன் இலக்கின்
முடிவினை நோக்கி
வீறுகொண்டு நடக்கிறது.



**நிருபர் :** மின்சாரம் தாக்கிய அனுபவம் உங்களுக்கு உண்டா?''


**வாசகர் :** அதெல்லாம் ஒண்ணுமில்லே.. சம்சாரம் தாக்கிய அனுபவம் வேணா உண்டு!''



**ஒருவர் :** ஆபீஸ் பியூன் கிட்டே சண்டை போட்டது தப்பாப் போச்சு...?

**மற்றவர் :** ஏன்... என்னாச்சு...?

**ஒருவர் :** சம்பள உயர்வு வந்ததை வீட்டுல போட்டுக் கொடுத்துட்டான் பரதேசி...!



**மனைவி :** ''என்னத்த ரொம்ப நேரமா தேடுறீங்க... கண்ணாடியப் போட்டுக்கிட்டுத் தேட வேண்டியதுதானே?''

**கணவன் :** அந்தக் கண்ணாடியத்தான் எங்கே வச்சேன்னு தேடிக்கிட்டுருக்கேன்!''



**மகள் :** அப்பா, நான் சாதிக்க விரும்புகிறேன்...

**அப்பா :** Very Good..., பொண்ணுங்க இப்படிதான் இருக்கணும்..., எந்தத் துறையைல சாதிக்க போற...?

**மகள் :** ஐயோ அப்பா..., நான் எதிர்வீட்டு பையன் ''சாதிக்''-ஐ விரும்புகிறேன்...



**டீச்சர் 1 :** ஏன் டீச்சர் இந்த மாணவனை இப்படி அடிக்கிறீங்க?

**டீச்சர் 2 :** நம் தாய் நாடு இலங்கை என்று சொல்லிக் கொடுத்தால், அப்படீன்னா நம் தந்தை நாடு எதுன்னு கேக்குறான் டீச்சர் இவன்.



# ரொமான்ஸ் இரகசியங்கள் – 14

புதிதாகக் கட்டப்படுகிற பெரிய பெரிய அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் - அழகுப் படுத்தப்படுகிற வீதிகளில் - தனியார் நிறுவன கட்டடங்களில் பார்த்திருக்கிறீர்களா, எங்கேயோ வேரூன்றி வளர்ந்த கிட்டத்தட்ட பாதி மரம் உயரத்தில் இருக்கிற மரக்கன்றுகளைக் கொண்டு வந்து அந்த இடங்களில் நடுவார்கள் அழகுக்காக.

புதிய இடத்தில் வேரூன்றும் வரைக்கும் அவற்றுக்கு ஒரு பிடிமானம் தேவை. அதற்காகச் சில நாட்களுக்கு அல்லது சில வாரங்களுக்கு அவற்றின் கிளைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து கட்டி வைத்திருப்பார்கள். இல்லையேல் அடிக்கிற காற்று அவற்றைச் சாய்த்துவிடும்.

தினமும் தண்ணீர் ஊற்றி, பூச்சிகள் அரிக்காமல் பராமரித்து வருவார்கள். பொதுவாக அவற்றில் பத்துக்கும் ஒன்பது புதிய இடத்தில் பிரமாதமாக வேர் பிடித்து வளர்ந்துவிடும். இலேசாகக் கருகியதுபோலத் தோற்ற மளிக்கிற கன்றுகள்கூட சில வாரங்களிலேயே பச்சைப் பசேல் மேக்கப் போட்டு சிரிக்கும். அங்கேயே வேர்விட்டு, கிளை பரப்பி, அந்த மண்ணைத் தன் சொந்தமாக்கிக்கொள்ளும்.

நம் திருமணங்களும்கூட இப்படிப் பட்டவைதான். கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கும் மேலாக இன்னொரு வீட்டில் வளர்ந்து நிற்கும் ஒரு பெண்ணை வேருடன் கொண்டுவந்து புகுந்த வீட்டில் நடுகிறோம். கொஞ்ச நாட்களுக்குப் பார்த்துப் பார்த்து நடந்துகொண்ட புகுந்த வீட்டினர் அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பிடிக்கிற அந்த மருமகள், மிகச் சில நாட்களிலேயே அந்த வீட்டைத் தன் ராஜ்ஜியமாக்கிக்கொள்கிறாள். அவளைக்

PUBLIC LIBR
JAFFN

கேட்காமல் அந்த வீட்டில் அணுவும் அசையவதில்லை.

ஆனால், நடப்படுவதற்கும் - அந்த மண்ணைத் தன் ராஜ்ஜியமாக்கிக்கொள்வதற்கும் இடைப்பட்ட அந்தச் சில நாட்களை அல்லது வாரங்களை அல்லது மாதங்களை சரியாகக் கையாளத் தெரியாத சிலர்தான் பெரும்பாலும் அபஸ்வரமாகி நிற்கிறார்கள்.

சுகிர்தாகூட அப்படி ஒரு கன்றுதான். அவளுக்குப் பிரச்சினை தன் கணவன் வருண். சரியான அம்மா பிள்ளை என்பதில்.

''காலையில் குளிக்கிறதுக்கு துவாய் எடுத்துத் தர்றதுல இருந்து ராத்திரி பால் ஆத்திக் குடுக்குற வரை எல்லாமே அவங்கம்மாதான் செய்றாங்க. கல்யாணமாகி இந்த ஒரு மாசத்துல (?!). ஒருநாள்கூட நான் சாப்பாடு போட்டதில்ல. அலுவலகத்துக்கு சாப்பாடு கட்டிக் கொடுத்ததில்லை புருஷன் பெஞ்சாதின்னா அது நாலு சுவத்துக்குள்ள மட்டும் இருந்தா போதுமா?'' நினைத்து நினைத்து மறுகினாள் சுகிர்தா.

''தான் துவாயை குளியலறைக்குள் நீட்ட கையோடு சேர்த்துப் பற்றி கணவன் தன்னை உள்ளிழுக்க ஆவி பறக்கும் அறுசுவை உணவை தான் பாசத்தோடு பரிமாற, தன் கைப்பக்குவத்தில் மயங்கி, கணவன் தன் கரம் பிடித்து முத்தங்களைப் பதிக்க'' என்று தமிழ்ச் சினிமா கனவுகளோடு புகுந்த வீட்டில் நுழைந்தவளுக்கு நிஜம் சுட்டது. காத்திருக்கும் பொறுமையும் இல்லாமல் போயிற்று.

தன் கோபம் முழுவதையும் காட்டுவதற்கான ஓர் இடமாகப் படுக்கையறையைப் பயன்படுத்தினாள். ''நீங்க ஒரு கோழை. உங்கம்மா சேலைக்குப் பின்னால ஒளிஞ்சுக்கிற அம்மா பிள்ளை. இந்த அறைக்கு வெளியிலயும் என்னை மனைவியா நடத்தணும். அப்பதான் நீங்க ஆம்பளை'' என்று வார்த்தைகளால் சுட்டாள்.

பொறுமையின் சிகரம் என்றும் அமைதி சொரூபம் என்றும் பெயரெடுத்த வருணுக்கு கோபம்வரும் அளவுக்கு அவனை அவமானப்படுத்தினாள்.

தீயால் சுட்ட புண்கூட ஆறிப்போகும். சொல்லால் அடித்த அடி நெஞ்சுக்குள்ளேயே நின்றதில் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபக்காரனானான் வருண்.

'சின்ன வயதிலிருந்து எனக்காகவே ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்கிற அம்மாவை திடீரென்று எப்படி உதாசீனம் செய்வது?' என்கிற அவனுடைய நியாயம் சுத்தமாகப் புரியவில்லை அவளுக்கு.

''நானா? உன் அம்மாவா?'' என்றொரு கேள்வியை அவனிடம் எழுப்பிவிட்டு, சுகிர்தா தன் பிறந்த வீட்டுக்குச் சென்றபோது, அவளைத் துரும்பாக மதிக்கிற மனநிலைக்கு வந்திருந்தான் வருண். அப்போதும் அவன் வாழ்க்கை பட்டமரமாகி விடக்கூடாதே என்று அவனுக்காகக் கவலைப்பட்டவள் அவன் தாய்தான்.


நெருப்பில் இட்ட புழுவைப்போல உள்ளுக்குள் துடித்தபடி, மகனைத் தனிக்குடித்தனம் வைத்தாள் அந்தத் தாய். தாயின் நிழலிலேயே வளர்ந்த வருண், ஏக்கத்தில் தவித்துப்போனான். வெளிப்பார்வைக்கு வேறு வழியின்றி சுகிர்தாவுடன் வாழ்ந்தானே தவிர, உபரியாகப் பத்து நிமிடம் கிடைத்தாலும் தன் தாயைப் பார்க்கப் பறந்தோடிப் போவான். அதுவரை பொய் சொல்லி அறியாதவன் சம்பளம் முதல் வேலை நேரம் வரை எல்லாவற்றையும் மாற்றி மாற்றிச் சொல்லி மழுப்பினான். தாய்க்கான ஏக்கம் அவன் மனதுக்குள் நிரப்பமுடியாத பெரும் பள்ளமாக விழுந்துவிட அந்தப் பள்ளம் சுகிர்தாவை விட்டு அவனைப் பிரித்துதான் வைத்தது.

வெளிப்பார்வைக்கு மனைவிக்கு நல்ல கணவனாக இருந்தானே தவிர, தாயையும், தன் பிள்ளைகளையும் நேசித்ததில் பத்தில் ஒரு பங்குகூட சுகிர்தாவை நேசிக்கவில்லை. முழு மனதோடு நேசிக்கப்படுவதின் சுகம் அறியாமலே அந்நியோன்யம் என்கிற வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் வீணாய்க் கழிகிறது சுகிர்தாவின் ஒரே ஒரு வாழ்க்கை.

நம் அருகில் எத்தனை சுகிர்தாக்கள். எத்தனை வருண்கள். சுகிர்தா மட்டும் விட்டுக்கொடுத்து வாழ்வதின் சந்தோஷம் அறிந்திருந்தால் அதே வாழ்க்கை தேனில் ஊறிய பலாவைப்போல எவ்வளவு ருசித்திருக்கும்.

அந்த ருசியின் வீரியம் பற்றி வானதியிடம் கேட்டுப் பாருங்கள். வாய் வலிக்காமல் சொல்லுவாள்.

**(தொடரும்...)**



# எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே!

**அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளின் கல்லூரிகளில் அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் படித்துப்பட்டம் பெறுகிறவர்களைவிட, வளர்முக நாடுகளில் பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம். ஆனால், மேலைநாடுகளில் தொடர்ச்சியாகப் பல்துறைகளில் கண்டுபிடிப்புகள் நடப்பதைப் போன்றோ, துறைசார்ந்த வல்லுநர்கள் உருவாவதைப் போன்றோ வளர்முக நாடுகளில் நிகழ்வதில்லை. காரணம், இங்கே பள்ளிப்பருவத்தில் திறமைகள், அடையாளம் காணப்படுவதில்லை; வளர்க்கப்படுவதும் இல்லை. 'என் குழந்தை சாதிக்குமா?' என்ற பேராவல் இன்றைய பெற்றோருக்கு நிறையவே இருக்கிறது. ஆனால், தன் குழந்தையின் திறமையைக் கண்டறியும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை. எதிர்காலத்தில் விஞ்ஞானியாகவோ, ஓவியராகவோ, நடனக் கலைஞராகவோ, இயற்கை ஆர்வலராகவோ, தத்துவஞானியாகவோ உங்கள் குழந்தை ஆகலாம். அதற்கான சிறு ஒளியை இப்போதே நீங்கள் உங்கள் குழந்தையிடம் காணமுடியும். கட்டுரையைத் தொடர்ந்து படித்து அதைக் கண்டுகொள்ளுங்கள்.**

அண்மைக்காலமாக பிரபலமாகிக் கொண்டிருக்கும் பல்வகை நுண்ணறிவுகள் கோட்பாடு (Multiple Intelligences Theory), ஒன்பது வகையான நுண்ணறிவுகள் ஒவ்வொரு குழந்தைக்கும் இருப்பதாகக் கூறுகிறது. இதை முன்வைத்தவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹோவர்ட் கார்ட்னர்.

எல்லா மனிதர்களும் பல்வகை நுண்ணறிவுகளைக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பலவகை நுண்ணறிவுகளை வளர்த்து வலுப்படுத்தவும் முடியும் அல்லது அவற்றைப் புறக்கணித்து பலவீனப்படுத்தவும் முடியும்.

தனது ஃப்ரேம்ஸ் ஆஃப் மைண்ட் (1983) புத்தகத்தில், முதலில் ஏழு நுண்ணறிவு களைத்தான் இவர் வரையறுத்தார். மேலும், பல ஆய்வுகளுக்குப் பிறகு இண்டலிஜென்ஸ் ரீஃபடரேம்ட் (1999) எனும் புத்தகத்தில், கூடுதலாக இரண்டு நுண்ணறிவுகளைச் சேர்த் துக் கொள்கிறார். எல்லா மனிதர்களுக்கும் ஒன்பது நுண்ணறிவுகளும் வெவ்வேறு அளவில் இருக்கின்றன. ''ஒவ்வொருவரின் அறிவுக் கட்டமைப்பும் வேறானது. நம் குழந்தை களின் பல்வகை நுண்ணறிவுகளை அடையா ளம் கண்டு ஊக்குவிப்பதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்தலாம்'' என்கிறார் கார்ட்னர். நுண்ணறிவுத்திறன்களைக் கண்டு பிடிப்பதற்கான சரியான பருவம், குழந்தை யின் 2 - 11 வயது வரையான காலகட்டம் தான். எவ்வளவு விரைவாகக் கண்டுபிடிக்கி றோமோ அந்தளவுக்கு அவர்களின் அறிவும், திறமையும் வளர்ந்து சாதனையாளராவர்.

**கார்ட்னர் வரையறுத்த கீழ்க்காணும் 9 நுண்ணறிவுகளில், உங்கள் குழந்தை எதில் சிறந்தது எனக் கண்டறியுங்கள்.**

**இசைத்திறன் (Musical Intelligence)**

இந்தத் திறன் உள்ள குழந்தைகளுக்கு இசை மீது இயல்பான ஆர்வம் இருக்கும். ஒலிகள், தாளம், சந்தம், தொனி, சுருதி போன்ற இசை சார்ந்த உணர்வுத்திறன் அதிகமாகவும், துல்லியமாகவும் இருக்கும். பாடல்கள் பாடவும், இசைக்கருவிகள் கற்றுக்கொள்ளவும் ஆர்வமாக இருப்பார்கள். இவர்கள் தங்கள் இசைத்திறமையை பல வழிகளில் வெளிப் படுத்துவர். உதாரணமாக, வகுப்பில் எப் போதும் ஏதாவது தாளம், சத்தம் எழுப்பிக் கொண்டே இருப்பார்கள். டி.வி., வானொலி யில் ஒலிக்கும் பாடல்களுக்கு சுருதியை உணர்ந்து, கையில் கிடைக்கும் பொருட்களை வைத்து இசையை எழுப்ப முயற்சி செய்வார் கள். சில குழந்தைகளுக்கு சுலபமான பள்ளிப் பாடங்கள் மனதில் பதிவதைக் காட்டிலும், கடினமாக பாடல் வரிகள் எளிதாக மனதில் பதியும். இதனைப் புரிந்துகொள்ளாத சில பெற்றோர்களும், ஆசிரியர்களும் பாட்டு மட்டும் ஞாபகத்தில் இருக்குமா எனத் தண்டிக்கின்றனர். வளர்க்கப்பட்டால், இசைக் கலைஞர், இசை உருவாக்குநர், பாடகர், இசை ஆசிரியர், இசை நடத்துநர் என ஏதாவதொன்றில் இவர்கள் மிளிர்வார்கள்.

**காட்சி - இடவெளி நுண்ணறிவு (Verbal - linguistic intelligence)**

காட்சி - வெளி உணர்தல் நுண்ணறிவு பலமாக இருப்பவர்கள், விடயங்களைக் காட்சிப்படுத்திப் புரிந்துகொள்வதில் சிறப்பாகச் செயற்படுவார்கள். இந்த நபர்கள் பொதுவாக திசைகளைப் புரிந்துகொள்வது, கணிப்பது மட்டுமல்லாமல், வரைபடங்கள், அட்டவணைகள் மற்றும் காட்சி விளக்கங் களைப் புரிந்துகொள்வதில் சூரர்களாக இருப்பார்கள். வாசிப்பது மற்றும் எழுதுவதில் ஈடுபாடு, புதிர்களைச் சேர்ப்பது, வரைதல், வண்ணம் தீட்டுதல் மற்றும் காட்சிக் கலைகளில் (விஷுவல் ஆர்ட்ஸ்) ஈடுபாடு, அமைப்புகளை (பேட்டர்ன்) எளிதாக அடையாளம் காணுதல், மனதில் அப்படியே காட்சிப்படுத்திக் காணுதல் போன்றவற்றில் சிறப்பாகச் செயற்படுவார்கள். கட்டடக் கலை நிபுணர், ஓவியக்கலைஞர், எழுத்தாளர், பொறியியலாளர், வடிவமைப்பாளர் போன்ற பணிகளில் இவர்கள் சிறந்த விளங்குவர்.

**மொழியியல் சார்ந்த நுண்ணறிவு (Verbal - Ilnguistic intelligence)**

வாய்மொழித் திறன், வார்த்தைகளின் ஒலிகள் மற்றும் அர்த்தங்களை எளிதாகக் கிரகித்தல், வார்த்தைகளின் சந்தம் போன்ற வற்றில் இவர்கள் சிறப்பாக இருப்பார்கள். இவர்களுக்கு வாசிப்புத் திறனும், எதையும் மனதில் எளிதாகப் பதியவைக்கும் திறனும் அதிகமாக இருக்கும். பாடப் புத்தகமாகவோ, கதையாகவோ, பாடலாகவோ, மொழியியல் வடிவத்தில் இருக்கும் விடயங்களை எளிதாக மனப்பாடம் செய்யும் திறனும் சிறப்பாக இருக்கும். எழுதிய, கேட்ட விடயங்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளும் திறன், அழுத்தமான பேச்சு அல்லது விவாதிக்கும் திறன், விடயங்களை எளிதாக விளக்கிச் சொல்லும் திறன், கதைகள் சொல்லும்போது நகைச்சுவையை அவ்வப்போது பயன்படுத்து வது என தனித்துவத்துடன் இருப்பார்கள். எழுத்தாளர், பத்திரிகையாளர், வழக்குரைஞர், ஆசிரியர் போன்ற பணிகளில் இவர்கள் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயற்படுவர்.

(தொடரும்...)

# கல்வியியலாளருடன்...

## நட்சத்திர இல்லத்தரசி

தாயாய், மனைவியாய், சகோதரியாய், ஆலோசகராய், கல்வியாளராய் இச் சமூகத்தில் பல்வேறு வகிப்பாங்களை, வகித்துக் கொண்டிருக்கும் பெருமை மிகு பெண்மணிகளை நேர்கண்டு அவர்களின் அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஓர் சிறப்பு பகுதியாக இவ் நட்சத்திர இல்லத்தரசி எனும் பகுதி விளங்குகிறது. அந்தவகையில் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் அவர்களைத் தெரிவுசெய்து அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டோம். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் என்றும் வெற்றிதரும் என்னும் சிந்தனையை கொண்டுள்ள அவர் எம்மோடு பகிர்ந்து கொண்டவை.

**இலங்கைத் திருநாட்டில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களின் பெருமைகளை சமூகத்துடன் பகிரவே இப்பகுதி. அந்தவகையில் இம் மாத நட்சத்திர இல்லத்தரசியாக வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் அவர்களுடனான அனுபவப்பகிர்வுகள்.**



**முதலில் உங்களைப் பற்றி ஓர் சிறிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காக கூறுவீர்களா என கேட்டபோது...**

யாழ் மாவட்டத்தில் வடமராச்சி பகுதியில் அமைந்துள்ள துன்னாலை என்ற கிராமத்தில் ஏழு பிள்ளைகளைக் கொண்ட பெரிய மகிழ்ச்சியான குடும்பத்தில் நான் ஆறாவது பிள்ளை, எனது ஆரம்பக்கல்வியை துன்னாலை காசி நாதர் வித்தியாலயம். அதன் பின்னர் உயர் தரம் வரை ஞானசாரியார் கல்லூரியில் கல்வி கற்றேன்.

**ஆளுமை மிக்க உங்கள் பணிபற்றி?**

எனது தகப்பனார் சிறை இலாகா அதிகாரியாக இருந்தவர் எனது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவர்கள் பெற்றோரே. பத்து வயதிலேயே தாயை இழந்து விட்ட நான் தகப்பனாரின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். இறுக்கமான கட்டுக்கோப்பான எனது தகப்பனாரின் வளர்ப்பு முறையும் நற்குணங்களுமே இவ்வாறான ஒரு ஆற்றலுள்ள பெண்ணாக மாற்றியது என எண்ணுகிறேன்.

**ஆசிரிய அதிபர் பணி பற்றிய உங்கள் எண்ணப்போக்கு யாது?**

சிறுவயதில் ஆசிரியப் பணி எனது இலட்சியமாக இல்லாவிட்டாலும் அப்பணி கிடைத்தபோது மிகவும் விருப்புடன் அதனை ஏற்றுக்கொண்டேன். 'செய்யும் தொழிலே தெய்வம்' எனும் வாக்கிற்கமைய அப்பணியை செவ்வனே செய்தேன். முதல் நியமனம் 1985ல் புத்தளம் கற்பிட்டி அன்லக்சா மகா வித்தியாலயத்தில் ஆரம்பமானது. ஆறு வருடங்கள் அங்கு பணிபுரிந்தேன். ஆசிரியராக இருந்த காலப்பகுதியில் ஆரம்பக்கல்வி வளவாளராக பத்து வருடங்கள் சேவையாற்றினேன். 2009 இல் அதிபராக நியமனம் பெற்று வல்வை மகளிர் கல்லூரியில் தொடங்கிய எனது பணி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இன்று தொடர்கிறது. இக் கல்லூரியானது வடமராட்சிப் பகுதியில் சைவம் தமிழ் வளர்ப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும்.

**நீங்கள் உங்கள் பணியில் எதிர்கொண்ட சவால்கள்?**

சவால்கள் என்பதை விட அனுபவங்கள்தான் அதிகம். ஆசிரியராக இருந்தபோது நான் பெற்ற அனுபவங்களே அதிபர் பதவியை திறம்பட நடத்த உதவுகின்றன எனலாம்.

**நீங்கள் பணியேற்ற பின்னர் பாடசாலையின் வளர்ச்சி பற்றி?**

நான் பொறுப்பேற்ற பின்னர் கல்வி மட்டம், பௌதீக வளம் இரண்டிலுமே சிறப்புற உள்ளமை கண்கூடாகத் தெரிகின்றது. வறுமை என்பது கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது என்பதிலும் மகிழ்ச்சியான செயற்பாடுகளினூடே கற்றலை வளர்க்க வேண்டும் என்பதிலும், மாணவர்கள் வெறும் புத்தகப்பூச்சிகளாக மட்டும் அல்லாது பல்துறைசார் விற்பன்னர்களாக வளரவேண்டும் என்பதிலும் நான் அதீத அக்கறை கொண்டுள்ளேன். பல்வேறு போட்டிகளின் மூலம் மாணவர்களை ஊக்குவித்து அதனூடாக கல்வியை முன்னேற்றவும் வழிசெய்துள்ளேன்.

**பாடசாலைக்கான தேவை பற்றி?**

எமது பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தினுள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மகிந்தோதைய ஆய்வு கூடமும் நிறைவடையும் நிலையில் உள்ளது. வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகின்றது என்னும் வாக்கிற்கமைய நூலகத்தினை சிறப்புற விருத்திசெய்து பலவகை நூல்களை வாசிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்துள்ளேன். பற்சிகிச்சை நிலையமும் சிறப்புற இயங்குகின்றது. நிகழ்வுகளை நடாத்துவதற்குரிய கட்டடம் ஒன்று எமக்கு இல்லை. பிரார்த்தனை மண்டபமும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளது. வசதிகள் குறைவாக இருப்பினும் எமது மாணவர்கள் பல வெற்றிகளைக் குவித்த பல சாதனைகளை நிலைநிறுத்தியுள்ளனர்.

**தற்போது உங்கள் வளர்ச்சிக்கான துணையாக யாரை கருதுகிறீர்கள்?**

சைவப் பாரம்பரிய கட்டுக்கோப்பு ஆச்சாரங்கள் பேணிக்காத்து பின்பற்றி வருபவரான எமது கணவர் சைவநெறிப்பாட ஆசிரிய ஆலோசகராக உள்ளார். தற்போது எனது முன்னெடுப்புகளுக்கு அவரே துணையாக வழிகாட்டியாக உள்ளார்.

**ஒளி அரசி சஞ்சிகை பற்றி உங்களத கருத்து யாது?**

ஒளி அரசி ஆசிரியர், மாணவர்கள், இல்லத்தரசிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்பினருக்கும் மிகவும் தேவையான பிரயோசனமான பல அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒளி அரசியின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள் என்றார். ▲

# ஆட்கொல்லி பூதம்

சித்தர்களும் ஞானிகளும் தாம் ஞான நிலை எய்தும்போது இந்த பிரபஞ்ச இரகசியத்தைப் புரிந்துகொள்கின்றனர். அவர்களுக்கு மனதின் அகக்கண் திறக்கும்போது புறக்கண்ணுக்கு புலனாகாததெல்லாம் புலப்படுகிறது. இவ்வுலகிலுள்ள புறப்பொருட்களில் ஆசைகொள்ளாது பரம்பொருள் ஒன்றை நோக்கியே சிந்தித்த வண்ணம் இருப்பர். இவ்வாறு வாழ்ந்துஇறைவனடி சேர்ந்த சித்தர் பற்றிய கதைகள் எமது வாழ்வுக்குத் தேவையான பல்வேறு படிப்பினைகளை தருகின்றன. அவ்வாறு வாழ்ந்த சித்தர்களில் ஒருவரே சிவவாக்கியர்.

இவர் ஒருநாள் காலை காட்டிற்குள் சென்று ஒருவர் அங்கு பருத்து உயரமாக வளர்ந்திருந்த மூங்கிலை வெட்டினார். அப்போது ஒரு அதிசயம் நடந்தது. மூங்கில் வெட்டப்பட்ட இடத்திலிருந்து பொடிப் பொடியாக சின்ன சின்னதாக தங்கத்துகள் கொட்டிக்கொண்டே இருந்தது. அதனைக் கண்டு சிவவாக்கியர் திகைத்து போனார்.

இறைவா இது என்ன சோதனை? பற்றற்ற எனக்கு தங்கத்தைக் காட்டி சோதிக்கிறாயா? இறைவனே? நான் உன்னிடம் முக்தி மட்டும் தானே கேட்டேன். புத்தியை பேதலிக்க வைக்கும் இந்த யுக்தி எனக்கு தேவைதானா? சித்தி தரும் சிவனே உன்னால் முடியாவிட்டால் பேசாமல் இருக்கவேண்டியதுதானே. என்னை ஏன் பயம்கொள்ள வைக்கிறாய்? என்றபடி அங்கிருந்து வேகமாக ஓடினார்.

அப்போது அந்த வழியாக மூங்கில் காட்டுக்குள் வந்து கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் தலைதெறிக்க ஓடிவந்த சிவவாக்கியரை நிறுத்தி ''சுவாமி எதற்காக இப்படி பயந்து ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''நான் ஒரு மூங்கிலை வெட்டினேன். அதற்குள் இருந்து ஆட்கொல்லி பூதம் வெளிவந்தது. அதைப் பார்த்து தான் பயந்து ஓடிவந்தேன்'' என்று சிவவாக்கியர் தங்கமாக குவிந்து கிடந்த மூங்கிலை காட்டினார்.

தங்கத்தைப் பார்த்து பரவசப்பட்டுப்போன அந்த இளைஞர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். தங்கத்தின் அருமை தெரியாத பைத்தியக்காரன். இந்த தங்கத்தை வைத்து ராஜவாழ்க்கை வாழலாமே என்று கூறிய அந்த இளைஞர்கள் கொட்டிக்கிடந்த தங்கத்தை மூட்டையாகக் கட்டினார்கள்.

பொழுதும் போனது... இரவும் வந்தது...

பசி அனைவரின் காதை அடைத்தது. இனி சாப்பிடாமல் தங்க மூடைகளை சுமந்து போக முடியாது என்ற நிலை. இளைஞர்கள் பக்கத்து ஊரில் உணவு வாங்கி வருவதென நினைத்தனர். இருவர் உணவு வாங்கச் சென்றனர். இருவர் தங்கத்துக்கு பாதுகாப்பாக காவல் இருந்தனர்.

உணவு வாங்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த இருவருக்கும் ஒரு கொடூர எண்ணம் தோன்றியது. அதன்படி அவர்கள் இருவருமே மற்ற இருவர்களை உணவில் விஷம் வைத்து கொன்றுவிட்டு, முழு தங்கத்தையும் தாங்களே பங்கிட்டு கொள்வதாகத் தீர்மானித்தனர். அதற்காக வாங்கிச் செல்லும் உணவில் விஷத்தைக் கலந்தனர்.

அவர்கள் கொண்டுவந்த உணவை காத்துக் கொண்டிருந்த இருவரிடமும் கொடுத்தனர். சாப்பிடுவதற்கு முன் ''எங்களுக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. நீங்கள் அந்த கிணற்றில் நீர் இருக்கிறதா?'' என்று பாருங்கள் என்றனர்.


உணவு கொண்டுவந்தவர்கள் கிணற்றின் மேல் நின்று பார்த்தனர். தங்கத்துக்கு காவல் இருந்த இரண்டு பேரும் அவர்களை பின்னால் இருந்து கிணற்றுக்குள் தள்ளிவிட்டனர். சிறிது நேரம் தண்ணீரில் தத்தளித்த இருவரும் மூச்சு திணறி இறந்தனர்.

அதன் பிறகு தள்ளிவிட்ட இருவரும் விஷம் கலந்த உணவை உண்டனர். சிறிது நேரத்தில் அவர்களும் இறந்தனர்.

காலையில் மூங்கில் வெட்ட வந்தார் சிவவாக்கியர். நான்கு இளைஞர்களும் இறந்துகிடப்பதை பார்த்த அவர் 'அட! அந்த ஆட்கொல்லி அதற்குள் நான்கு பேரையும் அநியாயமாகக் கொன்று போட்டுவிட்டதே!' என்று மனம் வருந்தி, அங்கிருந்து சென்றுவிட்டார். சிவவாக்கியர் முற்றிலும் ஆசையைத் துறந்து ஞானியாகவே இறுதிவரை இருந்தார்.

''சித்தர்கள் சாதாரணமாக தென்பட மாட்டார்கள். பற்றற்றப் பார்வையிலே சித்தர்கள் தெரிவார்கள். தங்கத்தை ஆட்கொல்லி என்று வெறுத்த ஞானி என்பதால்தான், பற்றற்றுப் போவதுதான் ஆன்மிகத்திற்கான முதற்படி என்பதை இதன் மூலம் சிவவாக்கியர் சீடர்களுக்கு உணர்த்தியுள்ளார். ▲

# விக்ரம் - முருகதாஸ் கூட்டணி



'கத்தி' படத்தை இயக்கிய பிறகு ஏ. ஆர். முருகதாஸ் அடுத்து யாரை வைத்துப் படம் இயக்கப்போகிறார் என்ற கேள்விக்குத் தற்போது விடை கிடைத்திருக்கிறது. 'கத்தி' வெற்றியடைந்ததை வைத்து மீண்டும் விஜய்யை வைத்துப் படம் இயக்கினால் மிகப்பெரிய தொகைக்கு அந்தப் படத்தை விற்கலாம் என்று கணக்குப்போட்டார் ஏ.ஆர். முருகதாஸ். இந்தக் கணக்கின் அடிப்படையில், விஜய்யிடம் திகதிகள் கேட்ட ஏ. ஆர். முருகதாஸ், அந்தப் படத்தைத் தானே தயாரிக்க விரும்புவதாகவும் சொன்னார். ஏ. ஆர். முருகதாஸ் தயாரிப்பில் நடித்தால் தான் விரும்பும் சம்பளத்தைக் கேட்க முடியாது. அப்படியே கேட்டாலும் வெற்றிப்படம் கொடுத்த என்னிடமே இவ்வளவு கேட்கலாமா என்ற கேள்வி எழும் என்பதால் உஷாராகிவிட்டார் விஜய்.

அதனால் ஏற்கெனவே சில தயாரிப்பாளர்களிடம் முன்பணம் வாங்கி இருப்பதாகவும் அதனால் உடனடியாய் உங்களுக்குத் தேதிகள் கொடுத்தால் அனாவசியமான பிரச்சினைகள் வரும், என்று காரணம் சொல்லி ஏ. ஆர். முருகதாஸை கழட்டி விட்டுவிட்டார் விஜய். அதனால் 'மௌனகுரு' படத்தை இந்தியில் மறுபதிப்பு செய்யும் வேலையில் இறங்கினார் ஏ. ஆர். முருகதாஸ். சோனாக்ஷியின் திகதிகளில் குளறுபடி ஏற்பட்டதால் அந்தப் படமும் திட்டமிட்டபடி நடக்கவில்லை. சரி நமக்குத் தமிழ்ப் படம்தான் ஒத்துவரும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார் ஏ. ஆர். முருகதாஸ். அதனால் விக்ரம்மை வைத்து படம் இயக்கலாம் என்ற எண்ணத்தில் ஏ. ஆர். முருகதாஸ், விக்ரமிடம் திகதிகள் வாங்கிவிட்டார். விக்ரம் '10 எண்றதுக்குள்ளே' என்ற படம் முடிந்ததும் ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார்.

# தத்துவம் பேசும் சுருதி



தமன்னா, சமந்தா, காஜல் அகர்வால், ஹன்சிகா எனப் பல இளம் நாயகிகளுடன் சுருதி ஹாசன் நல்ல நட்பு வைத்திருக்கிறார். அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவது இல்லையாம். ஏன்? யார் யாருக்கு என்ன வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்று விதி இருக்கிறதோ, அதுதான் கிடைக்கும். வீணாக அலையக்கூடாது. நான் நடித்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்று ஒரு இயக்குநர் நினைத்தால், கண்டிப்பாக அந்தக் கதாபாத்திரம் எனக்குத்தான் கிடைக்கும்.

ஒருவேளை இன்னொருவருக்கு அந்த வாய்ப்பு கிடைத்தால், அவர்தான் அதற்குப் பொருத்தமானவர் என நினைத்துக்கொள்ள வேண்டும். மாறாக மற்றவர்களுடன் சண்டைபிடிப்பதால் நமக்கு சாதகமாக எதுவும் நடந்துவிடப் போவதில்லை என்று தத்துவம் பேசுகிறார் சுருதி.



நெடுந்தொடர்

# உறவுகள் சுகமானது

04

எதையோ இழந்துவிட்டது போன்ற சோகத்துடன் காரில் அமர்ந்திருந்த அஸ்வந், கண்களில் மெலிதாய் துளிர்த்த நீரை சுண்டி விட்டுக்கொண்டான். ''காதல் தன்னை கோழையாக்கிவிடுமோ'' என எண்ணியபடி நிமிர்ந்து அமர்ந்தபோது அவனது செல்போன் மெலிதாய் ஒலித்தது.

காதுக்கு கொடுத்துவிட்டு ''ஹலோ, தீபக்'' என்றான்.

''டேய் அஸ்வந், என்னடா, ஏன் நேற்று போன் பண்ணல; ஏதாவது பிரச்சினையா?'' எனக்கேட்ட நண்பனிடம், ''பட்சி வலையில் விழுந்தாச்சு'' என்றான்.

எதிர்முனையில் மௌனம் நிலவியது.

''தீபக், என்ன பேச்சையே காணல அதிர்ச்சி ஆயிட்டியா?'' என்ற அஸ்வந்திடம்

''இ...இல்ல அஸ்வந்,வேணாம். அந்த பெண் பாவம்டா. பேசாம திரும்பி வந்திடு'' என்றான் தீபக்.

''சட்அப் தீபக்'' என்ற அஸ்வந் ''சொறிடா'' என்றான் உடனே தணிந்து.

''ஓ.கே, உன்னோட இஷ்டம், எப்ப வீட்டுக்குப் போறது? அப்பா தனியாவே எல்லாம் பாக்கமாட்டார், நான் போயிடவா, இல்ல நீயும் என்னோட வாறியா? எதுவுமே சொல்லலை'' எனப் பேச்சை மாற்றிய தீபக்கிற்கு.

''டேய், லூசா உனக்கு நீ மட்டும் போனா விட்ல என்னைக் கேட்கமாட்டாங்களா? இன்னொரு கிழமை காத்திடு, அதுக்குள்ள அலுவலை முடிச்சிட்டு ரெண்டு பேருமா போகலாம். நீ போன அலுவல் முடிஞ்சா, உடனே இங்க வந்திடு. நீ இல்லாம போர் அடிக்கிது?

''டேய் அஸ்வந், நான் இல்லாம போர் அடிக்கிதா, பொய்தானே.

''தீபக், ஒரு வாரம் நானும் நீயும் பாக்காம இருக்கிறம், மனசுக்கு கஷ்டமா இல்லையாடா, நான் பொய் சொல்றேனா...'' சொல்லும்போதே குரல் உடைந்தது.

''அஸ்வந், எனக்கும்தாண்டா, சும்மா சொல்லிப் பாத்தன், இங்க எல்லா போம்லயும் கையெழுத்து போட்டு குடுத்திட்டேன்.

இண்டைக்கே, இப்பவே புறப்பட்டு இரவுச் சாப்பிட அங்க வந்திடுவன்.''

''சரி வைக்கிறன்...''

''சரிடா.''

தீபக்கைப் பற்றி உங்களோடு.

தீபக், அஸ்வந்தின் உயிர் நண்பன், சிறுவயதிலேயே ஒரு விபத்தில் பெற்றோரை இழந்துவிட்ட அவனிடம் அஸ்வந் எல்லையில்லா நட்புகொண்டிருந்தான். தீபக் படிக்கும் விடுதியிலேயே தானும் படிக்கவேண்டும் என அடம்பிடித்து விடுதி வாழ்க்கையை ஏற்றுக்கொண்டான். அவ்வளவு பிரியம் கொண்ட தீபக், தன் மைத்துனன் ஆகப்போவது பேரின்பம் அஸ்வந்திற்கு. அஸ்வந் எது செய்தாலும் சரியாகவே இருக்கும் என உறுதியாக நம்பும் தீபக், இப்போது மட்டும் ஏனோ சற்று விலகினான். தனது பெற்றோரின் பரம்பரைச் சொத்துகளின் வருவாயை அக்கிராமத்திலுள்ள ஏழைச் சிறாருக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஒன்றைச் செய்வதற்காகவே இப்போது சொந்த ஊருக்கு வந்திருந்தான். அதையே காரணமாக சொல்லி தீபக்கோடு புறப்பட்டான் அஸ்வந். ஆனாலும், நண்பனோடு செல்லாது மதுவிழிக்காக இங்கே வந்துவிட்டான். நட்பால் வந்த உறவை உன்னதமாக எண்ணிய தீபக், அஸ்வந் மீதும் அவனது குடும்பத்தின் மீதும் அளவில்லா அன்பு கொண்டிருந்தான்.

வண்ணத்துப் பூச்சிகள் படையெடுத்து வருவது போல கல்லூரி முடிந்து மாணவிகள் வந்துகொண்டிருந்தனர். அத்தனை பெண்களிலும் சூரியனின் பிரகாசத்துடன் அழகோவியமாய் வந்துகொண்டிருந்த மதுவிழியின் அருகில் அவளது ஆருயிர்த் தோழி சம்யுக்தா.

"ஏய் மது, வா, பக்கத்தில இருக்கிறதேனீர்க்கடைக்கு போயிற்று அப்பிடியே வீட்டுக்குப் போகலாம்'' என்ற தோழியை இடைமறித்த மதுவிழி,

''இல்ல, வேணாம், நான் வரல்ல நீ வேணா போயிட்டு வா. அத்தைக்கு சொல்லாம நான் வரமாட்டன்...''

''என்னடி இது, இதுக்குமா அனுமதி கேக்கிறது. ஏன் இப்பிடி நத்தை மாதிரி சுருண்டுக்கிறாய்? வா, நா அத்தைக்கு சொல்றேன்'' எனக்கூறி கைகளைப் பற்றி இழுத்தாள்.

''விடு, நான் வரல்ல..'' என்ற மதுவிழியை முறைத்துப் பார்த்த சம்யுக்தா, தனது மொபைலை எடுத்து ஸ்வேதாவின் எண்களை டயல் செய்தாள்.

''என்னம்மா சம்யூ, என்னாச்சு?'' என சிறு தவிப்புடன் கேட்ட ஸ்வேதாவிடம்,

''அத்தை, பக்கத்தில இருக்கிற நெஸ்ரோறன்ற் போகலாம் வான்னா உங்களை கேக்காம வரமாட்டேன்னு அடம்பிடிக்கிறா, நீங்க சொல்லுங்க'' என்ற சம்யுக்தாவிடம் ''ம்' போனை மதுகிட்ட குடும்மா, நான் சொல்றேன்'' என்றார்.

''அத்தை...'' மதுவிழியின் குரல் கேட்டதும்

''என்னம்மா மது, நீ என்ன குழந்தையா, வளர்ந்திட்டாய், எது சரி, எது கூடாது என்றதை நீதான் முடிவுசெய்யணும். எல்லாத்துக்கும் அத்தை சொல்லணும்னு நினைக்கக்கூடாது. எனக்குத் தெரியும். எதுவும் சரியாதான் முடிவு பண்ணுவே. சுயமா சிந்திக்க தெரிஞ்சால்தான் பல சவால்களை ஜெயிக்க முடியும். வாழ்க்கை ஒரு போராட்டம், வெல்லுறதுக்கு நிறைய பயிற்சிவேணும். ஓ.கே. சம்யுவோட போயிற்று கெதியா வாம்மா'' என்றார்.

''சரி அத்தை,'' என்றபடி போனை எடுத்து தோழியிடம் கொடுத்துவிட்டு,

''ஏய், சம்யூ நீ பொல்லாத ஆள்தான். சரி வா போகலாம்'' என்றபடி கூட நடந்தாள்.

தோழிகள் சேர்ந்து ஹோட்டலுக்குப் போவதென்பது எவ்வளவு இன்பமானது. கேலிப்பேச்சுகளும் கூத்தும் கும்மாளமுமாய் கழித்த அந்த நாட்கள், அப்பப்பா... எண்ணியதும் புன்னகை அரும்பியது ஸ்வேதாவின் முகத்தில். புன்னகை தந்த அந்த நட்பே கண்ணீரையும் தந்துவிட்டதே, எண்ணியதும் கண்கள் நீரினால் நிறைந்துவிட தலையை தாழ்த்திக்கொண்டார்.

வண்ணத்துப் பூச்சிகள் படையெடுத்து வருவதுபோல கல்லூரி முடிந்து மாணவிகள் வந்து கொண்டிருந்தனர்.

மதுவிழியையும் சம்யுக்தாவையும் தூரத்தில் வரும்போதே கண்டுவிட்ட அஸ்வந் வேறு பக்கமாக நடக்கத் தொடங்கினனான். மதுவிழி யின் கண்களில் இருந்த மலையைசட சுமந்த வலி மட்டும் மாறவேயில்லை என்பது அவ னுக்கு நன்றாகவே தெரிந்தது. இதயத்தின் ஒரு மூலையில் வலிப்பதுபோல இருந்தது. அவனது உணர்வுகள் அவனுக்கே புரியவில்லை.

''மதுவிழி, என்ன ஒரு மாதிரி இருக்கே?'' எனக் கேட்ட சம்யுக்தாவிடம், ''உனக்கென்ன பைத்தியமா? நான் நல்லதான் இருக்கேன். சரி என்ன சாப்பிடலாம்?'' என்றாள். ஐஸ்கிறீம் சாப்பிடு. எனக்கு கோஃபி மட்டும் போதும்'' என்ற தோழியை வியப்பாய் பார்த்த சம்யுக்தா ''என்னடி ஐஸ்கிறீம் சாப்பிடுவே இதென்ன புதுசா கோஃபி கேக்கிறே?'' என்றபோது கவுனியாததுபோல வண் கோஃபி, வண் ஐஸ்கிறீம்'' என்றுவிட்டு தோழியிடம் திரும்பி 'பிடிக்கலேன்னா' விசித்திரமாய் பார்த்துவிட்டு தோளைக் குலுக்கினாள் சம்யுக்தா.

எல்லாவற்றையும் கேட்டபடி நின்ற அஸ்வந்திற்கு துக்கமும், மகிழ்ச்சியும் ஒன் றாய் தாக்கியது. சத்தமில்லாமல் அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

''ஹாய் தீபக்'' என்றபடிஅவனைக் கட்டிக் கொண்ட அஸ்வந், தோள்களில் கைபோட்டு நடனமாடினான். கைகோர்த்தபடி சிறுவனைப் போல வட்டமடித்தான்.

சின்னப்புன்னகையோடு நண்பனையே பார்த்துக்கொண்டிருந்த தீபக், ''பார்த்துடா விழுந்திடப்போறே'' என்றான். ''யார் நானா பார்க்கலாம்'' என்றான் அஸ்வந்.

''தீபக் நீ போன வேலை என்னாச்சு?''

''ம். எல்லாம் ஓ.கே. கடைல இருந்து வாற வருமானத்தில பாதியை ஏழைச்சிறாருக்கும் மீதியை ஆதரவற்றோர் இல்லத்துக்கும் கொடுக்கணும்னு சொல்லியிருக்கேன்''

''அது சரி. வண் வீக் பாக்காம உன் லவ்வர் ரொம்ப ரென்சனாகி இருப்பாங்களே? என்ன சொன்னா? கெட்ட வார்த்தையா திட்டி னாங்களா... இல்ல?''

''திட்டுறதா? இப்பவே புறப்பட்டு வாங் கன்னு ஓடர் போட்டாச்சு''

''நானா வரமாட்டேன்றன். உங்கண்ணா தானே தானும் வராம என்னையும் இழுத்து வைச்சிருக்கான்'' அப்பிடீன்னேன். அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா?''

''என்ன சொன்னா?''

''அண்ணா என்ன பெரிய கொம்பா? நீங்க உடனே வரலைன்னா உங்க காதலன் பதவி டீஸ்மிஸ்தான்'' அப்படின்னுட்டா.

''அப்புறம்''

''அப்புறம் என்ன அவ'கோல்' வந்தாலே கட்பண்ணிடுறேன். வேற என்ன பண்ண?'' எனச் சாதுவாய்க் கேட்ட தீபக்கின் குரலின் ஏற்ற இறக்கங்களையும் அங்க அசைவுகளையும் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான் அஸ்வந்.

''சரி சரி எல்லாம் ஓ.கே. மதுவிழி எந்தள வில் இருக்கா?'' என்ற தீபக்கிடம்,

''என்னைப் பாக்கிறதுக்கு அவ கண்கள் துடியா துடிக்கிது. என்னோட பேசுறதுக்கு தவியா தவிக்கிறா. என்றது நல்லா புரியுது. ரொம்ப பாவமாவும் இருக்கு.

''இனி என்ன? உன்னை சரணடைந்தேன்னு முன்னாலபோய் நிக்கவேண்டியதுதானே.

''கூம் இனிமே நாம போகக்கூடாது. அவங் களா வரணும். அப்பதான் கிக் சரி வர ரெண்டு பேரும் வெளியபோய் வரலாம்'' என்றபடி உள்ளே விரைந்தான் அஸ்வந்.

நேரம் ஆறுமணியைத் தொட்டுக்கொண்டி ருந்தது. அஸ்வந்தின் செல்போன் செல்லமாய் சிணுங்கியது. எண் திரையில் அவன் எதிர் பார்த்த அதே இலக்கங்கள். எதிர்முனையில் மௌனம். சில நொடிகள் பேசாமல் இருந்த வன், ''துவி'' என்றான்.

சின்னச் சின்ன விம்மல்கள் கேவலமாய் உடைப்பெடுத்தது. ''ஏய், என்னாச்சு? என் னடா?'' என்றான் கரிசனையாய். முதல்ல அழுவதை நிறுத்துங்க. அவனுக்கு உயிருக் குள் வலித்ததை எவருக்குச் சொல்லுவான்.

அஸ்வந்... அஸ்வந்... எனக்கு எனக்கு உங் களை உடனே பாக்கணும் ப்ளீஸ் தழுதழுத்தது வார்த்தைகள்.

''இப்ப என்ன? என்னைப் பாக்கணும் அவ் வளவு தானே. சரி நான் வீட்டுக்கே வறேன் சந்தோஷமா?''


''ம்''

''கண்ணைத் துடைங்க'' என்றான்.

விசித்திரமாய் பார்த்த நண்பனிடம் ''என் னடா தீபக்'' என்றான். ''இல்ல உன்னை நீயே கண்ணாடில பார் தெரியும். சட்டென்று கண்ணா டிக்குத் திரும்பிய அஸ்வந் சற்றே அதிர்ந்து போனான்.

**(தொடரும்...)**

# வீட்டுப் பாதுகாப்பில் நவீன தொழில்நுட்பம்!



கட்டுமானத்துறையில் நாளுக்கு நாள் பல்வேறு நவீன தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன. விதவிதமான கட்டுமானங்கள், மரவேலைப்பாடுகள், கண்ணாடி இழை தொழில்நுட்பம் எனப் புதுமைகள் பல நுழைந்துவிட்டன.

தற்போது வீட்டினை பாதுகாப்பாக பராமரிக்கும் புதுமையான தொழில்நுட்பம் கட்டுமானத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'ஹோம் ஆட்டோமேசன்' என்று அழைக்கப்படும் இந்த புதிய தொழில் நுட்பத்தில் வீட்டின் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் ஸ்மார்ட் போன்களின் மூலம் பார்த்துக்கொள்ள முடியும்.

வீட்டில் வசிக்கும் காலங்களிலும், வீட்டை பூட்டிவிட்டு வெளியில் செல்லும் காலங்களிலும் இந்த தொழில்நுட்பம் பயனுள்ளதாக இருக்கும் என்கின்றனர் கட்டுமான வல்லுநர்கள்.

ஹோம் ஆட்டோமேஷன் என்ற இந்தத் தொழில்நுட்பமுறையில் வீட்டின் பாதுகாப்பு முறை, தட்பவெப்ப நிலைகள், வீட்டை கண்காணிக்கும் வீடியோ கேமரா போன்றவற்றின் நிலைகளை நமது கைகளில் இருக்கும் ஸ்மார்ட் போன் மூலம் கண்காணிக்க முடியும்.

இந்தத் தொழில்நுட்பமானது கம்ப்யூட்டரில் இருக்கும் ஈமெயில், பேஸ்புக், டுவிட்டர் போன்றவைகளை ஸ்மார்ட் போன்களில் இணைத்துக்கொள்வது போல தான் இந்தத் தொழில்நுட்பமும். வீட்டில் நாம் விளக்குகளை எரிய விட்டுவிட்டு அணைக்காமல் வெளியே செல்ல நேரிடலாம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் டி.வி. மற்றும் விளக்குகள் போன்றவை இயங்கிக் கொண்டே இருக்கும்.

இந்த நவீன தொழில்நுட்பம் மூலமாக வீட்டின் விளக்குகளை அணைத்தல், வீட்டினை பூட்டுதல், வீட்டை வீடியோ கேமராக்கள் மூலமாக கண்காணித்தல் போன்ற பணிகளை வெளியில் இருந்துகொண்டே செயற்படுத்த முடியும்.

பூட்டிய வீட்டிற்குள் யாராவது உள்ளே செல்ல முயன்றாலோ அல்லது வீட்டில் வேறு யாராவது நுழைந்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபட முயன்றாலோ சென்சார் உதவியுடன் கண்டறிந்து உடனடியாக நமது ஸ்மார்ட் போனுக்கு தகவல் வந்துவிடும்.

இதேபோல தீ விபத்து தடுப்பு சென்சார், தொலைக்காட்சி சவுண்ட் சிஸ்டம் இயக்கத்திற்கான சென்சார், நீச்சல் குளத்தின் தகவல்களை வழங்கும் சென்சார், சமையல் அறையில் சென்சார் போன்றவற்றை பொருத்தி அவைகளை கண்காணித்துக்கொள்ளலாம். வீட்டின் சூழ்நிலையை உணர்த்துவதுடன் பயன்பாட்டாளர் வழங்கும் கட்டளைகளை ஏற்று அதன்படி செயற்படவைக்க முடியும். இதேபோல வீட்டின் உள்ளே இருக்கும் தட்பவெப்பநிலையை அறிந்து அதற்கேற்ப காற்று வசதியை உருவாக்கிட முடியும்.

வீட்டின் உள்ளே இருக்கும் காற்றை வெளியேற்றவும், வெளியில் இருந்து நல்ல காற்றை உள்ளே கொண்டு வருவதற்கான எக்ஸாஸ்ட் பேன் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் நம் கைகளில் உள்ள ஸ்மார்ட்போன்கள் மூலமாக இயக்கிவைக்க முடியும் என்று கூறும் கட்டுமான வல்லுநர்கள் தற்போது இந்த தொழில்நுட்பம் சென்னை, பெங்களூர், டெல்லி, மும்பை போன்ற பெரு நகரங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இதற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளதால் விரைவில் அனைத்து நகரங்களிலும் பயன்பாட்டிற்கு வந்துவிடும் என்கின்றனர். ▲



# யார் மன்னிக்கப்படமாட்டார்கள்?

கடுமையான மழை. புயல்காற்று ஒருவார மாக அந்த சிறு கிராமத்தை மிகவும் அலைக் கழித்தது.

பல ஆலமரங்கள் வேரோடு சாய்ந்தன. ஏரி உடைந்து கிராமத்திற்குள் நீர் புகுந்தது வெள்ளம் வரப்போவதை உணர்ந்த கிராம மக்கள் தங்களிடமிருந்த கொஞ்சநஞ்ச உடைமைகளுடன் பாதுகாப்பான இடத்துக்கு செல்ல தயாரானார்கள். ஒருவர் மட்டும் ''நான் பயந்து ஓடமாட்டேன்; கடவுளை நான் நம்புகிறேன். அவர் என்னை நிச்சயம் காப்பற்றுவார்'' என்று கூறி அங்கேயே தங்கினார்.

இரவு வந்தது. கிராமத்தில் வெள்ளம் புகுந்தது. கடவுளை நம்பியவர் வீட்டைச்சுற்றிலும் முழுவதும் தண்ணீர். அவர் வீட்டுக்கூரை மீது நின்றுகொண்டு கடவுளின் கருணைக்காக வேண்டினார். பக்கத்துக்கிராம மக்கள் அவர் வீட்டைத்தாண்டி படகில் சென்றனர். அவர்களும் வெள்ளத்திலிருந்து தப்பித்து கொள்ளத்தான் சென்றுகொண்டிருந்தனர். கடவுளின் பக்தர் கூரையிலிருப்பதை பார்த்து விட்டு ஒருவர் ''வாருங்கள் எங்களுடன் இங்கிருந்து நாமெல்லாம் தப்பித்து செல் வோம்'' என்றார்.

அவரோ அதை மறுத்து ''இல்லை நான் வரமாட்டேன்; கடவுள் என்னைக்காப்பாற்று வார்'' என்றார். ஏரிக்கரையில் உடைப்பு இன்னும் பெரியதானது. மழையும் தொடர்ந்து பெய்தது. இதனால் நீரின் மட்டம் அதிகமாகி வீடு முழுவதும் நீர் புகுந்து அதை மூழ்கடித்தது. பக்தர் இருந்த கூரை நீரில் மூழ்கியது. அங்கிருந்து ஒரே தாவாக தாவி பக்கத்தி



லிருந்த மரக்கிளை ஒன்றை பிடித்துக்கொண்டார். பின்னர் மரத்தின் உச்சியில் ஏறி. தன்னைக் காப்பாற்றும்படி இறைவனிடம் வேண்டினார்.

உதவி செய்ய வந்த கடைசிப் படகும் சென்றது. மரத்தின் கிளையில் அபாயகரமாக தொங்கிக்கொண்டிருந்த பக்தரை படகிலிருந்த மக்கள் பார்த்தனர். நண்பரே படகில் குதியுங்கள் நாங்கள் உங்களை காப்பாற்றுகின்றோம் என்று ஓங்கிக் குரல்கொடுத்து அழைத்தார்கள். என்னை கடவுள் வந்து நிச்சயம் காப்பாற்றுவார் என்று சொல்லி படகில் ஏற மறுத்துவிட்டு அவர் தன் பிரார்த்தனையைத் தொடர்ந்தார். சிறிது நேரத்தில் பொங்கிவந்த வெள்ளம் மரத்தையும் அடித்துச் சென்றது. பக்தர் வெள்ளத்தில் மூழ்கி இறந்தார். இறந்த பிறகு கடவுளை சொர்க்கத்தில் சந்தித்தார். உங்கள் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால், நீங்கள் வெள்ளத்தின் நடுவில் தவித்த என்னை கைவிட்டு விட்டீர்கள். வாழ்க்கை முழுவதும் உங்கள் பக்தன் நான்.

"உங்கள் செயலில் நீங்கள் தோற்றுவிட்டால் உலகம் மன்னிக்கும். ஆனால், சோம்பேறித்தனத்தால் சந்தர்ப்பத்தை தவறவிடுவீர்களானால் அதை உலகம் மன்னிக்காது."

அப்பிடியிருந்தும் என்னைக் காப்பாற்றவில்லை நீங்கள். இதைப்பற்றி எனக்கு வருத்தமில்லை. ஆனால், உங்களின் இந்தச் செயல் கடவுள் இல்லை எனச்சொல்லித் திரிபவர்களின் நம்பிக்கையை உறுதிப் படுத்துவதுபோல இருக்கிறதே அதுதான் எனக்கு கவலையளிக்கிறது - என்றார்.

கடவுள் அர்த்தம் பொதிந்த புன்னகையுடன் சொன்னார் உன்னுடைய பக்திக்கு ஈடு இணையே இல்லை. அதனால்தான் உன்னைக்காப்பாற்ற படகுகளை இரண்டு முறை அனுப்பினேன். இரண்டு முறையும் வாய்ப்பை தவறவிட்டது நீதான் என்றார். எல்லோரும் அவரவர் எண்ணங்களிலேயே பிணைந்து கிடக்கிறார்கள். வாழ்க்கை என்னும் மந்திர ஜாலம் கண்முன்னே நடனமாடுவதை அவர்கள் கவனிப்பதே இல்லை. நீங்கள் செய்ய முயன்ற செயலில் தோற்றுவிட்டால் இந்த உலகம் மன்னிக்கும். ஆனால், சோம்பேறித்தனமாக எதுவும் முயற்சி செய்யாமல் உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை உபயோகிக்காமல் இருந்தால் உலகம் நிச்சயம் மன்னிக்காது. உங்களை மதிக்கவும் செய்யாது.

ஒரு அழகான படித்த இளைஞன் நல்ல வேலையில் இருந்தான். பல பெண்கள் அவனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள். அவன் எல்லோரையும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி நிராகரித்தான். என் அளவுக்கு நீ அழகில்லை என்னைபோல் படிக்கவில்லை. உன்னிடமுள்ள செல்வம் என்னை மணந்துகொள்ளப் போதுமானதல்ல என்று இருபது வருடங்கள் கழித்து அவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற பெண் ஒருத்தி கிடைத்தாள். அவளை அணுகி தன்னுடய கல்வி, தன் சொத்து விபரம் தான் செய்யும் வேலை பற்றியெல்லாம் சொன்னான், "நீதான் எனக்கு சரியான பொருத்தம். உன்னை மணம் செய்துகொள்ள விரும்பிகின்றேன்" என்றான். அந்தப் பெண் அவனை ஏளனப்புன்னகையோடு பார்த்தாள். உன்னுடைய கோணத்தில் பார்த்தால் எல்லாம் மிகச்சரியாக இருக்கிறது. ஆனால், நான் உன்னை மணம்செய்துகொள்ள முடியாது. நீ என்னுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றமாதிரி இல்லை. நீ எனக்கு சரியான ஜோடிப்பொருத்தம் இல்லை என்றாள்.

வாய்ப்பு என்பது புராண புத்தகங்களில் இருந்தோ. அடுத்த கிராமத்திலிருந்தோ வருவதல்ல. பல சமயங்களில் வாய்ப்பு உருவாக்கக்கூடிய சூழ்நிலையை நாமே உண்டாக்க வேண்டியிருக்கலாம். மிகப்பெரும் வெற்றியை சாதித்தவர்கள் எல்லாம் வாய்ப்புகள் வரும்போது அதை உபயோகித்துக் கொள்ளத் தேவையான எச்சரிக்கையுடன் இருந்தவர்கள்.

இப்போது சொல்லுங்கள். நீங்கள் எந்தவிதமானவர்? வாய்ப்புகளுக்காக காத்திருப்பவரா?

அல்லது வாய்ப்புகள் கதவை தட்டும்போது போர்த்திப் படுத்து தூங்குபவரா? அல்லது வாய்ப்புகளை உருவாக்கும் சூழ்நிலைகளை உண்டாக்குபவரா?... ▲

# பொது அறிவுப் போட்டித் தொடர் - 01

அறிவுத் தேடலில் ஆர்வமுடைய வாசகர்களது அறிவுப் பசியை தீர்க்கும் ஒரு களமாக ஒளிஅரசி **சைப்பீ ரெடிங் கம்பனியினது** அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டித் தொடரினை அறிமுகப்படுத்தியுள்ளது. இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு சரியாக விடை எழுதி அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு முறையே ரூபா 750, ரூபா 500 மற்றும் ரூபா 250 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

## வினாக்கள்

01. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் (2015) எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தார்கள்?

02. ஐக்கிய நாடுகள் சபை (UNO) எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?

03. இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுனரின் பெயர் என்ன?

04. ஒருநாள் உலகக் கிரிக்கெட் போட்டி (2015) இல் இறுதிப்போட்டி எந்த நாட்டில் நடைபெற உள்ளது?

05. இலங்கையில் இலவச கல்வியை நடைமுறைப்படுத்த காரணமாக இருந்தவர் யார்?

06. ''போக்லாண்ட் யுத்தம்'' எந்த இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்றது?

07. 2014 ஆம் ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?

08. இலங்கையின் தற்போதைய வெளிவிவகார அமைச்சின் பெயர் என்ன?

09. இலங்கை எத்தனையாம் ஆண்டு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது?

10. உலகில் பாலூட்டி விலங்கினங்களில் மிகப் பெரிய விலங்கினம் யாது?

அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

IMPORTERS OF PAPER & BOARD

No. 96, New Moor Street, Colombo - 12.

உங்களது விடைகளை ''ஆசிரியர் ஒளிஅரசி, இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14'' என்ற முகவரிக்கு 20.02.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

### பொது அறிவு தொடர் - 01

முழுப்பெயர் : ..................................

..................................

முகவரி : ..................................

..................................

..................................

தொலைபேசி இல.: ..................................

ஒப்பம் : ..................................

# இது ஒரு உண்மைச் சம்பவம்

பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளை இரசித்த படி சென்றுகொண்டிருந்த பேருந்து பயணத்தில் மனம் உல்லாசத்தில் மெல்ல ஊஞ்சலாடியது. மண் வீதியில் தரித்து நின்றது பேருந்து. அப்போது இருந்த மனநிலை மாறப்போவது புரியாமல் பாதம் பதித் தேன் அந்த மண் வீதியில்.

என் பின்னால் குழந்தையொன்றின் முனகல் ஒலி கேட்டு மெல்லத் திரும்பினேன். ஒட்டி உலர்ந்த கண்களும் எண்ணை காணாத பரட்டைத் தலையும் அழுக்கான ஆடையுமாய் என் பின்னால் இறங்கிய அந்தப் பெண், பல மாதங்களுக்கு முன் எனது வீட்டின் அயல்வீட்டில் வசித்த சிறுமி. இப்பொழுது அவளுக்கு பதினைந்து வயதுதான் இருக்கும். அவளது கையில் குழந்தை நான்கு ஐந்து மாதங்கள் தான் இருக்கும் மிகவும் அழுக்கான துணிக்குள் கண்ணயர்ந்து விட்டது.

என்னை கண்டதும் அப்படியே நின்றுவிட்டாள், இவள் எப்படி இங்கே; அதுவும் குழந்தையுடன் என பல வினாக்களுடன் எனது கண்கள் அவளை நோக்கி யது. என்ன...? என்றேன் வார்தையாய். கண்களில் நீர் நிறைந்து சின்னதாய் ஒரு கேவல் அவளிடம் இருந்து வெளிப்பட்டது. பல நாட்கள் பழகிய பரிச்ச யத்தில் அவள் வாழ்வில் அரங்கேறிவிட்ட அவலத்தை என்னோடு பகிரத் தொடங்கினாள். எனது பெயர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) சுகித்தா. எனது குடும்பத் தில் அப்பா அம்மாவுடன் எட்டு அங்கத்தவர். என்னை விட மூத்தவராய் அக்கா மட்டுமே உள்ளார். அக்கா விற்கு திருமணமாகி விட்டது. கூலி வேலைக்கு செல்லும் எனது அப்பாவின் ஊதியத்தில் அரைவா சிக்கு மேல் அவரது அன்றாட போதைக்கே செலவாகும். அளவற்ற போதையுடன் வீட்டிற்கு வரும் அப்பாவிடம் இருந்து அசிங்கமான வார்தைகளே வெளிவரும். நிசப்தமான இரவுப் பொழுதில் என் தாயின் கதறல் ஒலி ஊரையே அதிர வைக்கும்.

சில நாட்களில் எனது தாய்க்கும் எங்களுக்கும் கூட வித்தியாசம் தெரிவதில்லை. சொந்த வீட்டிலேயே அப்பாவிடமே பயந்து வாழவேண்டிய நிர்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டது. எந்தப் பிள்ளைகளுக்குமே இப்படி ஒரு கொடுமை ஏற்படக்கூடாது. வறுமை ஒரு புறமும் வலி சுமந்த வாழ்க்கை ஒரு புறமுமாய் நகர்ந்து வாழ்வில் இருந்து எப்படியாவது விடுதலை பெறவேண்டும் என மனம் துடித்த அந்த வேலையில் தான் தொலைபேசி மூலம் ஆணின் தொடர்பு கிடைத் தது. இனிக்க இனிக்க பேசிய அவனது வார்தைகள் ஓய்ந்து போன எனது மனதிற்கு ஒத்தடமாய் இருந் தது. தனக்கு திருமணமாகவில்லை என்றும் தான் திருமணம் செய்தால் வறுமையும் வெகுளித் தன்மை யும் கொண்ட பெண்ணைதான் திருமணம் செய்ய இருப்பதாகவும் கூறினான்.

சில நாட்களுக்கு பின் என்னை திருமணம் செய்ய விரும்புவதாக கூறியபோது ஒரு புறம் மகிழ்ச்சியாக வும் ஒரு புறம் பயமாகவும் இருந்த போதும். நெருக்கடியான இந்த வாழ்வில் விடுதலை பெறப்போவ தாகவே மனம் எண்ணியது. தேனிக் கூட்டில் இருந்து தப்பி குளவிக் கூட்டிற்குள் விழப்போவதாக அப் பொழுது எனக்கு புரியவில்லை.

கர்ப்பமாய் இருப்பது கூட புரியா மல் நாட்கள் நகர்ந்து விட மூன்று மாதங்களின் பின் தான் உண்மை உறைத்தது. அப்போது என்னுடன் ஒரு குழந்தை எனது வீட்டில் பாரமாய் இருக்கின்றேன். அம்மாவின் சுடு சொற்கள் அப்பாவின் வசை வார்த்தை கள், சகோதரிகள் வெறுமையான பார்வைகள், வறுமையின் கொடுமை யோடு நகர்கிறது வாழ்வு, சொல்லி முடித்துவிட்டு குலுங்கி அழத் தொடங்கி விட்டாடல்.

அவள் கைகளை ஆதரவாய் பற்றி விட்டு கனத்த மனதுடன் விழி நீரைத்து டைத்த நடக்கிறேன். யார் மீது தவறு சொல்வது. தலைகீழாக மாறிவிட்ட இந்த சமூதாயத்தின்மீதா? பொறுப் புணர்ச்சியை தொலைத்துவிட்ட இந்த சமூதாயத்தின்மீதா? குடும்பம் என் பதை சரியாக நெறிப்படுத்தாத தாயின் மீதா? அன்புக்காய் ஏங்கித் தவித்தது அருகதையற்ற ஒருவனிடம் அதனை எதிர்பார்த இந்தப் போதைப் பெண்ணின்மீதா? ▲

# கன்னங்கள் அழகாக ஜொலிக்க

உடல் எடையை குறைக்க முயலும்போது, தொப்பை, தொடை, இடுப்பு போன்றவற்றில் உள்ள கொழுப்புக்களை மட்டும் தான் கரைக்க முயல்கிறோம். ஆனால், பெரிய கன்னங்கள் மற்றும் இரட்டை தாடைகள் போன்றவற்றை குறைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப் பதில்லை. கன்னங்களை அழகாக வைத்துக் கொள்வதற்கு ஒருசில உடற்பயிற்சிகள் உள்ளன. அதனைப் பின்பற்றி வந்தால், நிச்சயம் கன் னங்களில் உள்ள அதிகப்படியான கொழுப்புக் களை கரைக்கலாம். அதுமட்டுமின்றி, இந்த பயிற்சிகளில் சில ஒட்டியுள்ள கன்னங்களை சரியான அளவில் வைத்துக்கொள்ளவும் முடியும்.

கன்னங்களை அழகாக வைத்துக்கொள்ள செய்யவேண்டிய பயிற்சிகளில் முதன்மை யானதுதான் வாயை குவித்தல். உதடுகளை இறுக்கமாக மூடி, 1 நிமிடம் குவித்து, பின் சாதாரண நிலைக்கு திரும்ப வேண்டும். இந்த மாதிரி ஒரு நாளைக்கு குறைந்தது 3 வேளை, 10 நிமிடம் செய்யவேண்டும். முகத்தில் உள்ள தசைகளுக்கான சிறந்த பயிற்சிதான் சிரிப்பு. இவ்வாறு வாய்விட்டு நன்கு சிரிக்கும் போது, முகத்தில் உள்ள தசைகள் நீட்சிய டைவதால், அது கன்னங்கள் அழகாக வைத்துக் கொள்ள உதவும். எனவே, தினமும் 15 நிமிடம் சிரிப்பு பயிற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பொதுவாக சூயிங்கம் சுவைப்பதால், வாய் புத்துணர்ச்சியுடன் இருக்கும். இந்த சூயிங்கம் மெல்லுவது என்பது முகத்திற்கான ஒரு நல்ல பயிற்சியாகும். இதனால் இரட்டை தாடைகளை தவிர்க்கலாம். நன்கு பெரியதாக இருக்கும் கன்னங்களை குறைக்க இருக்கும் சிறந்த வழிகளுள் கன்னங்களை தூக்குதலும் ஒன்று. அதற்கு முடிந்த அளவில் கன்னங்களை தூக்குங் கள். அதற்காக கையை கொண்டு தூக்காதீர்கள். சிரிப்பதன் மூலம் கன்னங்களை நன்கு தூக்குங்கள்.

மீன் போன்று உதடுகளை குவித்து, 20 நொடி கள் வைத்து, பின் சாதாரண நிலைக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு ஒரு நாளைக்கு 10, 20 முறை செய்துவந்தால், கன்னங்களை குறைக் கலாம். வாயில் காற்றினை நிரப்பி 2 நிமிடம் கழித்து, பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்துவந்தால், கன்னங் களை குறைப்பதோடு, கன்னங்கள் சரியாக இல்லாதவர்களுக்கு கன்னங்கள் சரியான அளவில் இருக்கும். ▲



# வலைக் கீச்சுக்கள்

**மிருதுளா@mrithulaM**

அம்மா பிள்ளைகளுக்காகவோ, பிள்ளைகள் அம்மாவுக்காகவோ அப்பாவிடம் தூது செல்ல வேண்டியிராத வீடுகள் அப்பா நுழைந்ததும் அமைதியாவதில்லை.

**புத்திகாலி@Tottodaing**

மஞ்சள் பையை கேவலமாக நினைக்கும் வரை, நம்மால் பிளாஸ்டிக், பாலித்தீன்களை ஒழிக்க முடியாது!

**ஆல்தோட்டபூபதி@thoatta**


ஈகோ இல்லாமல் இருப்பது உங்களை மற்றவர்களுக்கு பிடிக்கவைக்கும். ஈகோவோடு இருப்பது உங்களை உங்களுக்கு பிடிக்கவைக்கும்.

**பொன் குழந்தை@ponkulanthai**

பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளை இயந்திரம் செய்கிறது. பெண்கள் இயந்திரங்களுக்கு வேலை செய்கிறார்கள் உடற்பயிற்சி மையத்தில்!!

**அடஆச்சரியக்குறி @tamilFacts**

இரட்டை சக்கர வாகன அமைப்புடன் 1817 பரோன் வான் டிரைஸ் என்பவர் உருவாக்கிய உலகின் முதல் சைக்கிளுக்கு பெடல் இருக்காது!!




**DineshAkshaya@DinuAkshi**

உன்னை அறிந்தால் அஜித்!



**மறுக்காலத்து கள்ளன் @kalvankallan**

தனிமையில் ஒரு பெண் அருகில் இருக்கும்போது அவளைப் பாதுகாப்பாய் உணரச்செய்வதற்கு பெயர் தான் ஆண்மை!!!

**Sushima Shekar þ@amas32**

பார்வை எப்பொழுதும் வெளியேவே அலைபாய்ந்து கொண்டிருந்தால் நம் உள்ளே பார்க்க நேரம் இருக்காது, அதனால் தன்னை அறிந்து முன்னேறும் வாய்ப்பை இழப்போம்.

**Lionபாலாஜி@BalajiG19**

கொடுமையின் உச்சம்... தான் காதலித்த பெண்ணை இன்னொருவனின் மனைவியாய் காண்பதென்பது.

**கார்பன்கரடி@CarbonKaradi**

தெருவிளக்குகள் பரிசுத்தமான அந்த இருளை கலங்கடித்து கடந்துகொண்டிருந்தது.

# வேலியே பயிரை மேய்வதா?


ஒளி அரசி மாத இதழானது வெறுமனே விளம்பரங்கள், சுவாரஸ்யங்கள், வியாபார நோக்கங்கள், அரசியல் என்றில்லாமல் சமூதாயத்துக்கு பயன்படத்தக்க பல்வேறு விடயங்களையும் தாங்கிவரும் ஓர் இதழ். அந்தவகையிலேதான் வீட்டின் விளக்குகளாக இருக்கும் இல்லத்தரசிகளுக்கு சிற்சில அவதானங்களை தருவதற்காக இக்கட்டுரை வரையப்படுகின்றது.

சிறு வயதிலேயே தனது தந்தையை இழந்த பெண் பிள்ளையொன்று தனது தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்து வருகின்றது. தனது பிள்ளையின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தாயும் வேறொரு திருமணம் செய்துகொள்ளாமல் தன் மகளுக்காகவே தன்னை அர்ப்பணித்து தனது வாழ்க்கையை தியாகம் செய்கின்றாள். தந்தை இல்லை என்ற குறை இல்லாமல் தனது மகளுக்கு தேவைப்படுகின்ற அனைத்தையும் வாங்கிக் கொடுத்து மிகவும் சந்தோசமாக தனது மகளை வளர்த்தெடுக்கின்றாள் அந்தத் தாய்.

தகப்பன் இல்லாத பெண்தானே என்று தனது குடும்பத்தினர் அனைவருமே அந்தப் பெண் பிள்ளைக்கு தங்களால் ஆன உதவிகளை செய்வது வழமை. இதற்கிடையில் அந்தத் தாயின் சகோதரி திருமணம் செய்கின்றாள். அவளின் கணவரும் இந்தத் தந்தையை இழந்த பெண் பிள்ளையிடம் மிகவும் பாசமாக நடந்துகொள்கின்றார். குழந்தையைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லல் என்று ஒரு தந்தையினுடைய ஸ்தானத்திலே இருந்து தனது உதவிகளை அக்குடும்பத்திற்கு அவர் செய்து வந்தார்.

நாட்கள் நகர்ந்தன. அந்தப் பெண் பிள்ளை பருவ வயதை அடைந்தும் சில ஆண்டுகள் போய்விட்டன. பிள்ளையின் முகத்தில் சில சோகங்களைக் கண்டுகொண்டாள் தாய். அது என்னவென்று கண்டுகொள்ள ஆசைப்பட்ட தாய் மகளிடம் பல தடவைகள் விசாரித்தபோது அந்தத் தாயின் நெஞ்சில் பாரியதொரு இடியை வைத்தாள் அந்தப் பெண்பிள்ளை. கடந்த சில வருடங்களாக தனது சித்தியின் கணவர் தன்னை அவரது அற்ப சுகத்திற்காக பயன்படுத்துகின்றார். அது தவறு என்பது தெரிந்தும் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றேன் என்றாள்.

செய்வதறியாது திணறிய தாய் தனது குடும்பத்தினரை அழைத்து விடயத்தைக் கூறினாள். நீண்ட நேரம் குடும்பத்தினரிடையே நடந்த கலந்துரையாடலின் பின்பு இந்த விடயத்தை வெளியே சொன்னாலோ அல்லது நீதிமன்றம் சென்றாலோ அப்பெண் பிள்ளைக்கும் தமது குடும்பத்தினருக்கும்தான் அவமானம். எனவே, அப்படியே விட்டுவிட்டு பிள்ளையைப் பாதுகாப்போம் என்று முடிவு செய்தனர். எதுவுமே செய்யாதவர் போன்று அந்தச் சித்தியின் கணவரும் சமுதாயத்திலே அழகாக நடமாடுகின்றார்.



சமூகத்திலே பெண் எழுச்சியும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் சட்டங்களும் மலிந்து காணப்படும் இந்தக் காலத்திலே இப்படியானதொரு சம்பவம் மிகவும் கவலை தருவதாகவுள்ளது. அன்பான இல்லத்தரசிகளே தனது சொந்தத் தம்பியாக இருந்தாலும் சரி பெண் பிள்ளைகள் விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். வெளியே சொன்னால் பெண் பிள்ளைகளுக்கு அவமானம் என்ற பழமொழியை பயன்படுத்தி பெண்களின் வாழ்க்கையை நாசம் செய்யும் இவ்வாறான சதிகாரர்களுக்கு வைப்போம் முற்றுப் புள்ளி. ▲

# மனைவி

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய கணவன் கணேஷ்சை இருக்கக் கூட விடாமல் சண்டைக்கு இழுத்தாள் மஞ்சுளா.

''எனக்கு இப்பவே தெரிஞ்சாகனும்! யார் அந்த ஆசைநாயகி?'' என்றாள் உயர்ந்த குரலில்.

ஆடிப்போனவாறே கணேஷ் ''நீ என்ன சொல்லவர்றாய்?''

''அப்பா இன்றைக்கு உங்கள் அலுவலகத்திற்கு வந்தாரா?''

''ஆமாம், ஊருக்குப் போகும்போது சொல்லிவிட்டுப் போகவந்தார். அப்ப நான் மனேஜரின் அறையில் இருந்தேன்.''

''அப்ப உங்களின் கபினில் மொபைல் போன் அடிச்சிருக்கு எடுத்துப் பார்த்ததனாலே அப்பாவிற்கு உண்மை தெரிஞ்சது?

வைப் 2 என்று ஸ்க்ரீனில் பார்த்ததும் ஆடிப்போய் உட்கார்ந்து இருக்கிறார். நீங்கள் என்னடா என்றால் வந்ததும் மிஸ்கோலைப் பார்த்திட்டு அவகிட்டப் கதைக்கிற ஆசையில அப்பாவை துறத்தாத குறையா அனுப்பி வைத்திருக்கிங்க.''

''ஓ அவளா? இரு, நீயே பேசு; அவளை என்ன வேண்டுமேன்றாலும் திட்டிக்கொள்'' என்று கைபேசியை எடுத்தான். வைப் 2வை அழுத்தி அவள் கையில்க் கொடுத்தான்.

மேசை மேல் இருந்த இவளின் கைபேசி அலறியது.

''இப்போது திருப்திதானே? போன மாதம் நீ இரண்டாவது சிம்மை வாங்கினாய்தானே அந்த நம்பரைத்தான் வைப் 2 என்று கைபேசியில் பதிந்து வைத்திருந்தேன். ஆக உன் கோல் வந்ததைத்தான் உங்க அப்பா பார்த்திருக்கிறார். அதுதான் இத்தனை குழப்பத்திற்கும் காரணம்'' என்றவனை...


காதலுடன் பார்த்தாள் மஞ்சுளா. ▲





# மீண்டும் டெங்கு! தப்புவது எப்படி?





மழை வந்தாலே விதவிதமான காய்ச்சல்கள் பரவத் தொடங்கி, படுக்கவைத்துவிடுகிறது. ''வேகமாகப் பரவுகிறது டெங்கு'', ''டெங்குவால் அட்மிட் ஆனவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு'' என்கிற செய்திகள் கதிகலங்கவைக்கின்றன. மழைக்காலத்தின் அடையாளமாகிவரும் இந்த டெங்கு காய்ச்சலைத் தவிர்க்க முடியுமா? டெங்கு பற்றிய முழுவிவரத்தையும், வருமுன் காப்பதற்கான தகவல்களையும் தருகிறார் தொற்றுநோய்த்துறை மருத்துவர் சுரேஷ்குமார்.

''ஏடிஸ் எஜிப்டி என்ற கொசுவால் டெங்கு காய்ச்சல் பரவுகிறது. மற்ற காய்ச்சலைப் போல அல்லாமல், மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை தொடர்ந்து காய்ச்சல் இருக்கும்போது இரத்தத்தில் உள்ள, பிளேட் லெட்ஸ் (Platelets) என்ற இரத்தத் தட்டுகளின் எண்ணிக்கை குறையும். மருத்துவர் ஆலோசனையை முழுமையாகப் பின்பற்றுவதன் மூலம் நோயிலிருந்து விரைவில் குணமாகிவிடலாம்.

நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள், அதிகம் உடல் எடை கொண்டவர்கள் மற்றும் குழந்தைகள் இந்த நோயால் அதிகம் பாதிப்படைகிறார்கள். நீர்ச்சத்து அதிகம் நிறைந்த பழவகைகள், மோர், கஞ்சி, நீர் போன்றவற்றை அதிக அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

மழைக்காலத்தில் அதிகரிக்கும் கொசுக்கள் டெங்கு உட்பட இன்னும் பல காய்ச்சல்களைத் தந்துவிட்டே செல்கின்றன. கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால், இந்த நோய்களில் இருந்து தப்பிக்கலாம்.

**டெங்கு காய்ச்சல் அறிகுறிகள்:**

- ★ தொடர்ந்து 3 முதல் 5 நாட்கள் வரை காய்ச்சல்.
- ★ திடீரென காய்ச்சல் அதிகமாகுதல்.
- ★ தலைவலி, கழுத்து வலி, உடம்பு வலி.
- ★ பித்தப்பை வீங்கி மூச்சுவிட கஷ்டப்படுதல்.
- ★ வயிறு உப்புசம், தோல் தடிப்பு.
- ★ தோலில் எரிச்சல், வாந்தி.
- ★ உடலில் சிவப்புப் புள்ளிகள் தோன்றுவது.
- ★ மூக்கு மற்றும் பல், ஈறுகளில் இரத்தக் கசிவு.

**டெங்குவை தடுக்க செய்ய வேண்டியவை...**

டெங்கு கொசுவின் வாழ்விடமே, சுத்தமான நீர் தேங்கும் இடம்தான். எனவே, வீட்டுக்குப் பயன்படுத்தும் நல்ல நீர் நிரம்பிய பாத்திரங்களை நன்றாக மூடிவைக்கவும்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை, கொசு புகாதவாறு பாதுகாப்பாக மூடி வைக்கவும். அதோடு, வாரம் ஒருமுறை சுத்தமாகக் கழுவிவிட வேண்டும்.

வீட்டைச் சுற்றி நீர் தேங்கியுள்ள இடங்களில் 30 மி.லி பெட்ரோல் அல்லது மண்ணெண்ணெயை 100 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க, கொசுவின் லார்வாக்கள் இறந்துவிடும்.

கிணறுகளில், சிறுசிறு மீன்களை விடலாம். அது கொசுவின் லார்வாக்களைத் தின்றுவிடும்.

தேவையற்ற பொருட்களை, வீட்டின் உள்ளே அல்லது வெளியே சேமித்து வைத்து, கொசுவை விருந்தாளியாக அழைப்பதை விட, ஒரேயடியாக அதனைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுங்கள்.

செப்டிக் டேங்க், வென்டிலேஷன் குழாய் போன்ற இடங்களில் நைலான் வலைகளைக் கட்டி, கொசு உள்ளே புகாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

வீட்டின் தோட்டம், ஜன்னல், பழைய பொருட்கள் இருக்கும் இடம், டயர் இருக்கும் இடம் போன்ற பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். ▲

# ஊடல் இன்பம்

காதலில் ஊடலும் அதனைத் தொடர்ந்து கூடலும் சகஜமாக நிகழ்வதொன்று. உப்பு இல்லாத உணவு சுவைத்தாலும் ஊடல் இல்லாத காதல் சுவைக்காது என்பார்கள் ஆனால் இந்த கூடல் அளவுக்கு அதிகமாகின் அது துன்பத்தைத் தருவதாக அமைந்துவிடும். இங்கும் அப்படி ஓர் ஊடல்தான் காட்டப்படுகிறது.

தலைவியைக் காணச் சென்ற தோழி அவள் நிலைமை கண்டு வருந்தினாள். தலைவியின் முகத்தில் தெளிவு என்பதே இல்லை; ஒரு அமைதியற்ற நிலையைத்தான் கண்டாள். என்ன காரணமாக இருக்கும் என்று அறியவேண்டும் என்ற எண்ணமுடன் தோழி தலைவியிடம் கேட்டாள். அப்போது அவளுடைய தலைவன் அங்கு இல்லாதது தோழிக்கு வசதியாகப் போயிற்று.

''அவர்தான் இல்லையே, என்ன ஆயிற்று என்று சொல். முகம் வாடிப்போயிருப்பதால்தான் கேட்கின்றேன்'' என்று கவலையுடன் கேட்டாள்.

''வாடித்தான் போயிருக்கிறது; அவருடைய செயல் இப்போதெல்லாம் உண்மையில் வாட்டம் அடையத்தான் வைக்கிறது'' என்று மிகவும் வெறுப்புடன் கூறினாள்.

தோழி எதுவும் பேசாது சிறிது நேரம் இருந்தாள். பின்னர் தலைவி என்ன நடைபெற்றது என்பதைக் கூற ஆரம்பித்தாள்.

''நான் வேண்டுமென்றே தான் ஊடல் கொண்டேன். அவர் அந்த ஊடலைப் போக்க ஏதாவது சமாதானம் கூறுவார் என்று எதிர்பார்த்தேன். என்னுடைய எதிர்பார்ப்பு வீணாயிற்று. அவர் அமைதியாகவே இருந்தார். பின்னர் சிறிது நேரம் பொறுத்து அவர் தம் பணியில் ஈடுபட்டார்'' என்று கூறி நிறுத்தினாள் தலைவி.

தோழியும் எதுவும் பேசவில்லை.

தலைவி பின்னர் பேச ஆரம்பித்தாள்.

''தலைவரின் போக்கு உண்மையில் எனக்கு ஆத்திரத்தையே வரவழைத்தது. மனிதன் இப்படி இருப்பாரா என்று எண்ணி எண்ணிக் குமைத்தேன்'' என்று கூறி வருந்தினாள்.

''ஒன்று நினைக்க இன்னொன்று நடந்து விட்டதே'' என்று எண்ணி வருந்தினாள் தோழி.

மனைவி இவ்விதம் ஊடல் கொண்டாலும் கணவனுடைய கடமை என்ன என்பதை அறியாமல் நடந்திருக்கிறாரே, ஊடல் நடந்தால் இப்படியாகவா இருப்பார்கள்! சிறிது பொறுத்து அன்புடன் பேசியும், ஆரத் தழுவியும் கோபத்தைத் தணித்து இன்பமடைவதுதானே ஆண்மகனின் செயல்!'' என்றாள் தோழி.

எதற்காக கணவன் - மனைவியிடையே ஊடல் நடக்கிறது? அவன் - அவள் இவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்தி நல்ல முறையில் வாழவேண்டும் என்பதற்காகத்தானே! இவ்விதம் தலைவன் இருந்து வந்தால் எப்படி? ஊடல் கொண்டால் கொள்ளட்டும் என்று நினைத்து அவன் அமைதியாக இருந்தான்.

''தம்மிடம் ஊடல் செய்தவரை அதன் காரணம் அறிந்து உடலை நீக்காது பிரிதலானது துன்பத்தால் முன்னே வருந்தினவரை மேலும் துன்பப்படுத்துவது போல ஆகும்.'' இதனையே வள்ளுவர்,

**''அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.''**

என்றார்.



# அசரவைக்கும் அணிகலன்கள்

ஆடைகள் நம்முடைய அழகை அதிகமாக்கிக் காட்டுகின்றன. அதேநேரத்தில் ஆடைகளுக்கு பொருத்தமான அணிகலன்களை அணிந்துகொண்டால் அவ்அழகு மேலும் பிரகாசிக்கிறது. பெண்கள் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளின் கலருக்கும், வடிவமைப்புக்கும் பொருத்தமான அணிகலன்களைத் தேர்வு செய்து அணியும்போது பார்ப்பவர்கள் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப் படுவர். எனவே, உடைகளுக்கு பொருத்தமானதாக இருக்கும் அணிகலன்களை தேர்வு செய்வதில் கவனம் எடுத்துகொள்ள வேண்டும். அணிகலன்கள் என்றாலே ஒருவிதமான சந்தோஷத்தையும், அழகின்மேல் ஈர்ப்பையும் ஏற்படுத்துகின்றன.


நகைகளை மட்டும் அணிகலன்கள் எனக் கருத கூடாது. நகைகளோடு சேர்த்து காலணிகள், கைப்பைகள், கண்ணாடி, மணிக்கூடு, வாசனை திரவியங்கள், போன்றவையும் அந்த பட்டியலில் இடம்பெறும். இதில் அதிக



முக்கியத்துவம் வாய்ந்தவை நகைகள். இன்றைக்கு நகைகளை விரும்பாதவர்கள் என்று யாரும் இல்லை. ஆண்கள், பெண்கள் என இருவருக்கும் நகைகள் மீது பிரியம் இருந்தாலும், பெண்களின் பிரியமே அதிகமாக இருக்கிறது. பெண்களின் வாழ்க்கையோடு பின்னி பிணைந்த அவர்களுடைய உணர்வுகளில் கலந்த ஒன்றாக நகைகள் மாறி விட்டன. பெண்கள் எங்கு சென்றாலும், அது திருமண விழாவாக இருந்தாலும், அல்லது விருந்து நிகழ்ச்சியாக இருந்தாலும் அல்லது வேலை செய்யும் இடமாக இருந்தாலும் உடைகளோடு சேர்ந்து நகைகளும் பிறரால் கவனிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வரும் தங்களுக்கு பிடித்த விதவிதமான நகைகளை அணிந்து பிறரை கவர்கின்றனர். சிலருக்கு பாரம்பரிய நகைகள் பிடிக்கும்; சிலருக்கு பேஷன் நகைகள் பிடிக்கும்; இன்னும் சிலருக்கு மரம், கண்ணாடி, சணல் பேப்பர் போன்றவற்றில் தயாரான நகைகள் பிடிக்கும். இதேபோல், எந்த மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு எந்த மாதிரியான நகைகளையே அணிந்து செல்ல வேண்டும் என்றதொரு வரைமுறை உள்ளது. இந்த வரைமுறை மாறும்போது அல்லது மீறப்படும் போது அது பிறரை ரசிக்க வைப்பதற்கு மாறாக முகம் சுளிக்கவைக்கும். குறிப்பாக உடைகளுக்கு பொருந்தும் நகைகளையே அணியவேண்டும். உதாரணமாக, பட்டு புடவை கட்டினால் அதற்கு பொருத்தமான நெக்லஸ், ஆரம், முத்துமாலை, போன்றவற்றை அணியலாம்.

இந்த நேரத்திற்கு இந்த கலர் நகைகளைப் அணிந்தால் நன்றாக இருக்கும் என்ற நடைமுறையும் உண்டு. அப்படி பார்த்தால், பகல் நேரத்தில் சில்வர் கலர் நகைகளும், மாலை நேரத்துக்கு கோல்டு நகைகளும் ஏற்றவை. நகைகளை பொறுத்தவரை பார்மல், கேஷுவல், ரைடல், ஈவ்னிங், ஸ்பிரிச்சுவல் என 5 வகையாக பிரிக்கலாம். இந்த ஐந்தும் வடிவமைப்பாலும், பயன்படுத்தப் படும் நேரத்தாலும், தயாரிக்கப்படும்



பொருட்களாலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.

திருமணம், அலுவலகம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றில் அணிந்து கொள்ளக்கூடிய நகைகளை போர்மல் நகைகள் என்பர். நெக்லஸ், வளையல், பிரேஸ்லெட், மோதிரம், காது வளையம் போன்றவை அதில் குறிப்பிடத்தக்கவை, ஒயிட் மெட்டல், பிளாக் மெட்டல், களிம, சிபி, துருபிடிக்காத எக்கு போன்றவற்றால் தயாரிக்கப்படுகின்றன. ரத்தினம், கிரிஸ்டல், அலங்காரக்கல் போன்றவையும் இந்த நகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

தினமும் அணிந்துகொள்ளக்கூடிய நகைகளை வழமையான பட்டியலில் சேர்க்கலாம். இவை தண்ணீரில் நனைந்தாலும் பாதிப்படையாது. கைவேலைபாடுகள் மிகுந்த நகைகளும், இதில் அடங்கும். சணல், மரம், பேப்பர் போன்றவற்றால் இவை தயாரிக்கப்படும். செயின், வளையல், மோதிரம், போன்றவை வழமையான நகைகளில் குறிப்பிடத்தக்கவை. சிப்பிகளால் தயாரிக்கப்படும் இதுபோன்ற நகைகளை இளம்வயதினர் விரும்பி வாங்குகின்றனர்.

மாலை நேரங்களில் நடைபெறும் பார்ட்டிகள். ரிசப்ஷன் போன்றவற்றிக்கு அணிந்து செல்லக்கூடிய நகைகள். இன்னொரு வகைகளான துருபிடிக்காத எக்கு, ஒயிட் மெட்டல், பிளாக் மெட்டல், களிம கிரிஸ்டல் போன்றவற்றால் செய்யப்படும். செயின், வளையல், பெரிய காது வளையம் போன்றவை இதில் குறிப்பிடத்தக்கவை. ▲



திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய

# இருட்டில் வைத்த குறி

**6**

மார்த்தாண்டம் எழுந்துபோய்க் கதவைத் திறந்தார்.

பிரணவ் தலாலோ உள்ளே வந்தார். புன்னகைத்தார். ''சாப்பாட்டு நேரத்தில் உங்களுக்குத் தொந்தரவு தருகிறேன்.''

''தொந்தரவா... அதெல்லாம் ஒன்றுமில்லை. ப்ளீஸ்... கம்...'' கதிரையைக் காட்டினார் மார்த்தாண்டம். பிரணவ் அமர்ந்து கொண்டே கேட்டார்.

''செண்டோஸா போய் வந்தீங்களா? எப்படியிருந்தது?''

யோகேஷ் சொன்னான்.

''ஸாரி... அப்பாவுக்கு உடல் நலமில்லை. பாதி வழியிலேயே திரும்பிவிட்டோம்.''

''அடடா... அப்பாவுக்கு என்ன உடம்புக்கு?''

''அப்பாவுக்கு இரத்த அழுத்த நோய் இருக்கிறது. இன்றைக்கு காரில் போகும்போது அது தலைகாட்டியது. ரொம்பவும் சிரமப்பட்டு விட்டார். எனவே, திரும்பிவிட்டோம்.''

''ஹோட்டலில் டாக்டர் இருப்பாரே? காட்டினீர்களா?''

''தேவையில்லை. அப்பாவிடம் மாத்திரைகள் இருக்கின்றன.

''கார் எந்தத் தொந்தரவும் கொடுக்கவில்லையே?''

''நோ நோ எந்தத் தொந்தரவும் இல்லை. கார் அற்புதம். அதைவிட ரோடுகள் அற்புதம்! உங்களுக்கு ஏதாவது உணவு வகைகள் சொல்லட்டுமா?''

''வேண்டாம். ஒரு பார்ட்டியோடு இரவு உணவை முடித்துக்கொண்டுதான் வந்தேன். நான் வீடு திரும்பக் கார் வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்.''

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே - சர்க்கஸ் நிகழ்ச்சி மறைந்து டி.வி. திரையில் அந்த அழகான சீனப்பெண் தோன்றினாள். மஞ்சள் கிழங்காய் முகம். பளிச்சென்ற கண்களோடும் வரைந்த மாதிரியான உதடுகளோடும் சிநேக பாவத்தோடு புன்னகைத்து -அழகான ஆங்கிலத்தில் செய்திகளைச் சொல்ல ஆரம்பித்தாள்.

சிங்கப்பூர் பிரதமரின் வெளிநாட்டு விஜயத்தைப் பற்றியும் நாடாளுமன்றத் தொடர் கூட்டங்களைப் பற்றியும் இரண்டு நிமிட நேரம் பேசியவள், அடுத்த விடயத்தை ஆரம்பித்தபோது மார்த்தாண்டமும் யோகேஷ், புவனேஷும் அதிர்ந்துபோனார்கள்.

''மதிப்பு வாய்ந்த வைரங்களைத் திருடிச் சென்றதாக சொல்லப்படும் ஒரு பெண் - தன்னுடைய நீலக் காரில் தப்பிச்செல்ல முயன்றபோது அவளுடைய கார் விபத்துக்குள்ளாகி

யிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கார் செண்டோஸா 'காட்' ரோட்டின் வளைவில் விபத்துக்குள்ளாகியிருக்கிறது. பொலிஸார் ஸ்தலத்தை முற்றுகையிட்டபோது-

திரையில் அந்தப் பெண்ணின் உருவம் மறைந்து ஒரு மலைச்சரிவு தெரிந்தது. ரோட்டின் உச்சியில் பொலிஸ் பெற்றோல் கார் நின்றிருக்க - பொலிஸ் யூனிஃபோர்ம்கள் அசைந்தன. கமெராவின் கோணம் மாற - சிதறிய கார் பாகங்கள் மரக் கிளைகளில் தொங்கின. கமெரா நகர பொலிஸார் சரிவுகளில் டோர்ச் லைட்டுகளோடு அலைந்துகொண்டிருந்தார்கள். கூடவே பொலிஸ் நாய்கள் குரைத்தன.

மார்த்தாண்டம் டி.வி.திரையிலிருந்து கண்களைப் பெயர்த்துத் தன் இரண்டு மகன்களையும் பார்த்தார். இரண்டு பேரின் முகங்களும் இருண்டுபோயிருந்தன. பார்வை மீண்டும் டி.விக்குப் போக திரையில் கமெரா நகர்ந்து சட்டென்று அந்தப் பெண்ணின் உடம்பின் மேல் நிலைகொண்டு நின்றது. இரத்தக் கொசகொசப்பாய் உடம்பு சிதையாமல் இருந்த முகம் பூராவும் இரத்தம் கோடு கோடாய் வழிந்திருக்க அந்தப் பெண் திறந்த கண்களோடு இறந்திருந்தாள். பொலிஸார் அவளருகே மண்டியிட்டிருந்தார்கள்.

செய்தி வாசிக்கும் பெண்ணின் குரல் பின்னணியில் கேட்டது. "இந்தப் பெண் யார் என்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் மும்முரமாய் ஈடுபட்டுள்ளனர். இவள் ஏதேனும் ஒரு கள்ளக்கடத்தல் கும்பலைச் சேர்ந்தவளாய் இருக்கலாம் என்பது நகரப் பொலிஸ் கமிஷனரின் கருத்து. காரினின்றும் சிதறிய சூட்கேஸைப் பொலிஸார் கிளறிப் பார்த்தபோது அதில் களவாடப்பட்ட வைரங்கள் இல்லை என்பது புலனாயிற்று. காலையிலிருந்து மதியத்திற்குள் இந்த விபத்து நடந்திருக்கவேண்டுமென்றும், இந்த விபத்தைப் பார்த்தவர்கள் எவராவது இருந்திருக்க வேண்டுமென்றும் பொலிஸார் கருதுகிறார்கள். விபத்து ஸ்தலத்தில் வைரங்கள் கிடைக்காத பட்சத்தில் - அந்த வைரங்கள் வேறு எவரிடமாவது கொடுத்து வைக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் - பொலிஸ் கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் இது விபத்துத்தானா இல்லை மற்றவர்களால் செய்யப்பட்ட கொலை முயற்சியா? -என்பதில் பொலிஸாருக்குச் சந்தேகம் தோன்றியுள்ளது."

செய்தி வாசிக்கும் பெண் சொல்லிக்கொண்டே போக, மார்த்தாண்டம் -

யோகேஷ் -

புவனேஷ் -

மூன்று பேரின் இருதயங்களிலும் ரத்தம் பி.டி. உஷாவாய் மாறியது.

பிரணவ் தலாலோ டி.வி. நியூஸைக் கேட்டுவிட்டு மார்த்தாண்டத்திடம் திரும்பினார்.

"செண்டோஸா போகிற வழியில்தான் இந்த விபத்து நடந்திருக்கிறது மிஸ்டர் மார்த்தாண்டம்... நீங்கள் இந்த விபத்தைப் பார்த்தீங்களா?

யோகேஷ் குறுக்கிட்டுச் சொன்னான்.

"பார்க்கவில்லை..."

"இந்த வழியால்தானே நீங்கள் வந்திருக்கவேண்டும்?"

"ஆமாம்... ஆனால், நாங்கள் கடந்தபின்தான் விபத்து நடந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்."

மார்த்தாண்டம் வியர்த்த முகத்தோடு பிரணவ்விடம் திரும்பினார். எனக்கொரு சந்தேகம் மிஸ்டர் பிரணவ்"

"என்ன?"

"கார் விழுந்த இடத்தைப்பார்க்கும்போது அதலபாதாளமாய்த் தெரிகிறது. பொலிஸார் இதை எப்படிக் கண்டுபிடிப்பார்கள்?"

"சுற்றுப்புறச் சுவர்களைப் பார்த்துக்கொண்டே போயிருப்பார்கள். புதிதாக ஏதேனும் ஒரு சுவர் உடைபட்டிருந்தால் அந்த இடத்தில் இறங்கிப் பார்ப்பார்கள். சிங்கப்பூர் பொலிஸ் மிகவும் திறமையான பொலிஸ். சிங்கப்பூர் எல்லைக்குள் கார் திருட்டுப்போனால் - முறைப்பாடு செய்த ஒருமணி நேரத்திற்குள் கார் நம் வீட்டு வாசலில் நாய்க்குட்டி மாதிரிக் காத்து நிற்கும். எவ்வளவுதான் திறமையாகக் கொலை, கொள்ளைகளைச் செய்துவிட்டு ஒருவன் தப்பிவிட்டாலும் கடைசியில் எப்படியும் அவன் சிங்கப்பூர் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ளத்தான் வேண்டும். மிஸ்டர் மார்த்தாண்டம், உங்களுக்கு ஏன் இப்படி வேர்க்கிறது?"

"என்னவோ தெரியவில்லை. சாப்பிட்ட லிக்கர் ஏதோ செய்கிறது. வாந்தி வருவதுபோல் தோன்றுகிறது." சொன்னவர் பாத்ரூமை நோக்கி வேகமாக எழுந்து போனார்.

**(தொடரும்...)**

# கருத்துரிமை... காயப்படுகிறதா, காயப்படுத்துகிறதா?

**இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெருமாள் முருகன் என்ற ஓர் எழுத்தாளர் சில ஆண்டுகளுக்கு முன்னர் ''மாதொருபாகன்'' எனும் நாவலை வெளியிட்டிருந்தார். அந்நூலில் குறிப்பிட்ட கருத்துக்கள் ஒரு பகுதி மக்களை இழிவுபடுத்தும் வகையிலான சர்ச்சைக் குரிய கருத்துக்களாக இருப்பதாகக் கூறி கடந்த மாதம் அவருக்கெதிராக கடையடைப்பு, வீதிமாறியல் போராட்டம் என்பன இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அவ் எழுத் தாளர் தனது புத்தகத்தை மீளப்பெறுவதாக அறிவித்ததுடன் தனது சமூகவலைத்தளத்தில் பெருமாள் முருகன் என்கின்ற எழுத்தாளர் இறந்துவிட்டதாகவும் தற்போது இருப்பது சாதரன முருகன் மட்டுமே என கருத்து வெளியிட்டார். இவ்வாறு ஓர் எழுத்தாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினரிடத்தே வாதப் பிரதிவாதங்களை உருவாக்கிவிட்டுள்ளது. அது பற்றிய ஓர் சிறு அலசல் உங்களுடன்.**

பெருமாள் முருகன், இந்தியாவின் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர். நாமக்கல் அரசு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் எழுதிய, 'மாதொருபாகன்', நாவல் இப்போது சர்ச்சையில் சிக்கி, பற்றி எரிகிறது. பெருமாள் முருகனைக் கைதுசெய்யச்சொல்லி கடையடைப்பு போராட்டம் நடத்துகிறார்கள். ஓர் எழுத்தாளரை முன்வைத்து நடக்கும் சமீப காலத்திய மிகப்பெரிய போராட்டம் இது.

''2010 ஆம் ஆண்டு வெளிவந்த 'மாதொருபாகன்' நாவலில் வைகாசி விசாகத் தேர்த் திருவிழாவில் 14 ஆம் திகதியன்று நடக்கும் விழாவுக்கு திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் வருவார்கள். அதுவும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்தான் வருவார்கள் என்றும், அவர்கள் அன்று இரவு மட்டும் தான் விரும்பும் திருமணமாகாத எந்த இளைஞரோடு வேண்டுமானாலும் உறவில் ஈடுபட்டு குழந்தைப்பேறை அடைவார்கள். அந்த இளைஞர்கள் அன்று தெய்வமாக மதிக்கப்படுவார்கள். அந்த நாள் குழந்தை இல்லாத் பெண்களுக்குத் திருநாள். அந்த இரவில் எத்தனை பெண்களை ஈர்க்க முடியுமோ, அத்தனை பெண்களை இளைஞர்களால் ஈர்க்க இயலும். பல இளைஞர்கள் அங்குதான் உறவின் முதல் சுவையை அறிவார்கள். கற்றுக்கொடுப்பவர்களாகப் பெண்கள் உள்ளார்கள் என அவரது நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 100 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கதை என நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பெருமாள் முருகன்

இக்கருத்துக்கள் குறித்தே தற்போது போராட்டங்கள் வெடித்துள்ளன. எங்கள் ஊரில் அப்படி ஒரு நடைமுறை இல்லை. நினைக்கவே அருவருப்பாக உள்ளது. அவரைக் கைதுசெய்யச் சொல்லி கடையடைப்பு நடத்தி எங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்திருக்கிறோம் என ஓர் போராட்டகாரர் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் மிகவும் சக்தி வாய்ந்த கோயில். இங்கு நடக்கும் வைகாசி விசாகத்

தேர்த் திருவிழா மிகப் பிரசித்தமான திருவிழா. இந்த விழாவுக்கு திருச்செங்கோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் கூடுவார்கள். தேர்த் திருவிழாவில் 4 ஆம் நாள் மலையில் இருந்து இறங்கும் உற்சவர், ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, 14 ஆம் நாள் மீண்டும் உற்சவர் மலைக்குச் செல்வார். குழந்தை இல்லாதவர்கள் அர்த்தநாரீஸ்வரரை வணங்கினால், குழந்தைப்பேறு கிடைக்கும் என்பது இந்தக் கோயிலின் சிறப்பு என்கின்றனர் அந்த ஊர்காரர்களும் இந்து சமய அமைப்புக்களும்.

இந்தக் கருத்துகள் குறித்து பெருமாள் முருகனிடம் கருத்து கேட்டபோது மாதொருபாகனில் ''நான் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் யாவும் ஒரு காலத்தில் நடைமுறையில் இருந்ததே. இதை நான் கள ஆய்வு செய்துதான் எழுதியிருக்கிறேன். இப்போது அந்த முறை வழக்கில் இல்லை. நான் அவர்களின் இன மாண்பைக் கெடுப்பதற்காக எழுதியுள்ளதாக நூல் வெளியாகி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பிரச்சினை செய்கிறார்கள். இது மதவாத அமைப்புகளின் தூண்டுதலின் பேரினால் நடந்துவரும் ஒரு செயல்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

> ''எழுத்தாளன் பெருமாள் முருகன் செத்துவிட்டான். அவன் கடவுள் அல்ல. ஆகவே, உயிர்த்தெழப் போவதில்லை.''

'மாதொருபாகன்' எனும் நாவல், திருச்செங்கோடு பகுதி மக்களின் உணர்வுகளைப் புண்படுத்திவிட்டதாக சர்ச்சை எழ, அந்த நாவலுக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. கடை அடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் என்று அடுத்தடுத்து போராட்டங்கள் வெடிக்க, நாமக்கல் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு சமாதானக் கூட்டம் நடத்திய பிறகு, 'மாதொருபாகன்' நூலை மீளப்பெறுவதாக பெருமாள் முருகன் அறிவித்ததாக கூறப்பட்டது.

இதற்கிடையில் ''எழுத்தாளன் பெருமாள் முருகன் செத்துவிட்டான். அவன் கடவுள் அல்ல. ஆகவே, உயிர்த்தெழப் போவதில்லை. மறுபிறவியில் அவனுக்கு நம்பிக்கையும் இல்லை. இனி, அற்ப ஆசிரியனாகிய பெ.முருகன் என்பவன் மட்டுமே உயிர் வாழ்வான்.

பெருமாள் முருகன் தொகுத்த, பதிப்பித்த நூல்கள் தவிர அவன் எழுதிய நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகிய அனைத்து நூல்களையும் அவன் திரும்பப் பெற்றுக்கொள்கிறான். இனி எந்த நூல்களும் விற்பனையில் இருக்காது என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறான். பெருமாள் முருகனின் நூல்களை வெளியிட்டுள்ள காலச்சுவடு, நற்றிணை, அடையாளம், மலைகள், கயல்கவின் ஆகிய பதிப்பகத்தார் அவன் நூல்களை விற்பனை செய்யவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறான். உரிய நஷ்டஈட்டை அவர்களுக்கு பெ.முருகன் வழங்கிவிடுவான். பெருமாள் முருகனின் நூல்களை இதுவரை வாங்கியோர் தாராளமாக அவற்றைத் தீயிட்டுக் கொளுத்திவிடலாம். யாருக்கேனும் நஷ்டம் எனக் கருதி அணுகினால், உரிய தொகையை அவருக்கு வழங்கிவிடத் தயாராக உள்ளான். இனி எந்த இலக்கிய நிகழ்வுகளுக்கும் பெருமாள் முருகனை அழைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறான் என தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி' மக்கள் மீது ஒரு படைப்பாளி உமிழ்ந்த எச்சில் இது. யாரும் பார்த்துவிடக்கூடாது என்ற பதற்றத்தில் அந்த எச்சில் துடைக்கப்படலாம். ஆனால் அதன் நாற்றம், தலைமுறை தாண்டியும் அடிக்கும். ஏனென்றால், படைப்பின் சூட்சுமமே அதுதான். 1600 களில், 1700 களில், 1800 களில் தொடங்கப்பட்ட எந்த அமைப்பும், அரசியல் கட்சியும், சாதிச் சங்கமும் இப்போது இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் உருளத் தொடங்கிய முதல் அச்சு இயந்திரம் வெளியிட்ட புத்தகங்கள் இன்றும் இருக்கின்றன. பெருமாள் முருகன் உயிர்த்தெழப் போவதில்லை. ஆனால், 'மாதொருபாகன்' நாவலுக்கு மரணமில்லை என்பதே உலகியல் யதார்த்தம். ▲

ரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்து கொள்ள தடை இருந்தது. திருமணம் செய்து கொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்து விடும் என்பது அரசரின் எண்ணம். திருமணம் செய்துகொள்ளவேண்டும் என துடித்த ஆண்களுக்கு உதவினார் வேலண்டைன். அரச கட்டளையை மீறி திருமணங்கள் நடத்திவைத்தார். மன்னனுக்கு விஷயம் தெரியவந்தபோது வேலண்டைனைப் பிடித்து மரண தண்டனை விதித்தார். அவர் கொல்லப்பட்ட நாள் தான் பெப்ரவரி 14. இது நடந்தது கி.பி 270. 'வேலண்டைன்ஸ் டே' குறித்து உலவும் கதைகளில் பெரும்பாலானவர்கள் நம்பும் கதை இது.

சீனர்களின் காதலர் தின கதை சுவாரஸ்யமானது. சுவர்க்கத்தின் சக்கரவர்த்திக்கு ஏழு மகள்கள். ஏழாவது மகளான ஸி நூ அழகிகளுக்கெல்லாம் அழகி! பேரழகி. ஒரு நாள் ஏழு சகோதரிகளும் நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நுவூ எனும் இளைஞன் அவர்களைப் பார்த்தான். குறும்புத்தனமாக எல்லாருடைய ஆடைகளையும் எடுத்துப் போய் விட்டான். ஆடைகளை வாங்க ஈரம் சொட்டச்சொட்ட பிறந்த மேனியாய் வந்து நின்ற ஸி நூவை பார்த்து, கண்டதும் காதல் கொண்டு, பின்னர் கல்யாணமும் செய்துகொள்கிறான் அவன். விஷயம் தெரிந்த மன்னருக்கு வந்ததே கோபம். இருவரையும் வானத்தின் இரண்டு மூலைகளில் கொண்டு போய் விட்டார். அவர்கள் ஏழாவது மாதத்தின், ஏழாவது நாளில் சந்திக்கும் நாள் தான் சீனர்களின் காதலர் தினம்.



இந்தியாவுக்கும் காதலுக்கும் நெருங்கிய பந்தம் உண்டு. இந்திய இலக்கியங்களில் காதல் மைய இடம் பிடிக்கின்றது. உலகையே பிரமிக்கவைக்கும் காதல் சின்னமான தாஜ்மஹால் இந்தியாவில் இருக்கிறது. உலகத்தின் முதல் பாலியல் கல்வி நூலான காமசூத்ரா'வின் பிறப்பிடமும் இந்தியாவே தான். 'காதலர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இருக்கிறது. குறிப்பாக ஆசியாவில் காதலர் தின பொருட்கள் சந்தைப்படுத்தும் இடங்களில் முக்கிய இடம் இந்தியாவுக்கு.

பிரான்ஸ் நாட்டில் வேலண்டைன்ஸ் தினத்தை சிம்பிளாக புனித. வேலண்டைன் என்று அழைக்கிறார்கள். ஆனால், கொண்டாடுவதென்னவோ மற்ற நாடுகளைப் போலத்தான். ஸ்பெயினில் இந்த நாளை 'சேன் வேலன்டின்' என்கின்றனர். ஸ்வீடனில் இந்த நாளை எல்லா இதயங்களின் தினம் என்று அழைக்கின்றனர். போர்த்துக்கல் நாட்டில் இந்த நாளின் பெயர் டயா டாஸ் நமோரேராடோஸ்.



சவுதி அரேபியாவில் காதலர் தினம் மத அமைப்புகளால் தடை செய்யப்பட்டிருக்கிறது. இது இஸ்லாமிய சட்டங்களுக்கு விரோதமான விழா என்பது அவர்களுடைய நம்பிக்கை. இந்த விழா ஆண்களும் பெண்களும் சந்தித்து சில்மிசங்களில் ஈடுபட வழி வகுத்துவிடும். ஏற்கனவே திருமணமான பெண்கள் சபலமடைய வழி வகுத்துவிடும் போன்றவையெல்லாம் அவர்கள் சொல்லும் காரணங்களில் சில. இருந்தாலும் திருட்டுத்தனமாக அங்கே காதலர் தினத்தைப் பலர் கொண்டாடுகின்றனர். இரகசியமாய் பூங்கொத்துகள் ஆர்டர் செய்து, அதை நள்ளிரவிலேயே மனசுக்குப் பிடித்தவர்களுக்கு கொண்டு சேர்த்து விடுகிறார்கள். பலர் வெளிநாடுகளில் வேலண்டைன்ஸ் டே கொண்டாடி விட்டு திரும்பி விடுவதும் உண்டு.

ஜப்பானின் வேலண்டைன்ஸ் டே என்றாலே நினைவுக்கு வருவது சாக்லேட்! ஜப்பான் கடைகளெல்லாம் வேலண்டைன்ஸ் டேக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே சாக்லேட்களால் குவியும். வித விதமான வகைகளில், பாக்கெட்களில் விற்பனையாகும் சாக்லேட்களை வாங்குவது பெண்கள் தான். ஜப்பானில் பெண்கள் தங்கள் மனதுக்குப் பிடித்த எல்லா ஆண்களுக்கும் சாக்லேட் கொடுப்பார்கள். அதனால் யாராவது சாக்லேட் தந்தால் உடனே காதல் என்று டூயட் பாட முடியாது! காதலர்களுக்குக் கொடுக்க பெண்கள் கடைகளிலிருந்து சாக்லேட் வாங்கமாட்டார்களாம். ஸ்பெஷலாக வீட்டிலேயே எக்ஸ்குளூசிவ் ஆக தயாராக்கி கையோடு ஊட்டியும் விடுவார்களாம்.

பின்லாந்தில் வேலண்டைன்ஸ் டே மிக வித்தியாசமானது. இது காதலர் ஸ்பெஷல் தினம் அல்ல. இந்த நாளை அவர்கள் ஸ்டேவான்பாவியா என்று அழைக்கின்றனர். இதற்கு நண்பர்கள் தினம் என்பது பொருள். நண்பர்களாய் இருப்பவர்கள் இந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். பரிசுகள், வாழ்த்து அட்டைகள் என எல்லாம் உண்டு. வேறு வேறு இடங்களில் இருக்கும் நண்பர்களெல்லாம் ஒரே இடத்தில் கூடி கும்மாளமடிப்பர்.

கொரியாவில் பெப்ரவரி 14 தான் காதலர் தினம். காதலியர் தங்கள் காதலர்களுக்குச் சாக்லேட் பரிசளிப்பது தான் இந்த நாளின் விசேஷம். ஆனால், காதலர்கள் அந்த நாளில் காதலியருக்கு சாக்லேட் கொடுக்க மாட்டார்கள். என்ன கொடுமை இது என புலம்பிய கொரியா மார்ச் 14ம் திகதியை வயிட் டே, வெள்ளை தினம் எனக் கொண்டாடுகிறது. இந்த நாளில் காதலர்கள் காதலியருக்கு சாக்லேட்களை வட்டியும் முதலுமாக வாங்கிக் கொடுக்க வேண்டும்

# குழந்தைத் தொழிலாளர்

இன்று இலங்கையைப் பொறுத்தளவில் சுமார் 10 ஆயிரம் பாடசாலைகளில் கிட்டத் தட்ட 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இருப்பினும் வருடந்தோறும் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் கல்வி கற்கின்றார்களா? என்றால் அதுதான் இல்லை. காரணம் பல இருந்தாலும் தரம் ஒன்றில் கற்ற பிள்ளைகள் அனைவரும் க.பொ.த.சாதாரண தரத்திலாவது கற்று பரீட்சை எழுதவேண்டும். தரம் ஒன்றில் சேர்ந்தவர்கள் பின்னர் ஒவ்வொரு காலகட்டங்களிலும் பாடசாலைக் கல்வியை விட்டு வெளியேறிவிடுகின்றார்கள். இவ் வாறு விலகியவர்களில் அதிகமானோர் குழந்தைத் தொழிலாளியாக உருமாற்றம் பெறுவதை நம்மில் எத்தனைபேர் கண்டும் காணாததுபோல் இருக்கின்றோம்.

இன்று கொழும்பில் மாத்திரமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் குழந்தைகள் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். குறைந்த கொடுப்பனவில் இவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக பல முதலாளிகள் மாத்திரமன்றி, தனிப்பட்டவர்களும் தங்களுடைய வயல், வீடு, தோட்டங்கள் போன்றவற்றில் வேலை செய்வதற்கு வழிசமைத்துக் கொடுத்திருப்பதையும் பார்த்திருக்கின்றோம். சிறுவர்களது கல்வியில் கவனம் செலுத்தவேண்டிய சிறுவர் அமைப்புக்களும், கல்வித்துறை சார்ந்த அமைப்புக்களும், பாடசாலைகளும், ஏனைய துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்களும் இது தொடர்பில் பல்வேறு எத்தனங்களை மேற்கொண்டிருந்தாலும் முழுமையாக அதனை மேற்கொள்வதில் பல்வேறு தடைகள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இன்று கிராம மட்டத்திலான சிறுவர் அமைப்புக்கள் என்கிற பேரில் கிராம மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த குழுக்கள் ஊடாக கட்டாய கல்வி வயதில் கற்க வேண்டிய மாணவர்கள் வீட்டில் வெறுமனே கூலிகளாக இருப்பதைக் கண்டறிந்து பாடசாலையுடன் இணைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்தாலும் சில பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளையின் கற்றலில் கவனம் செலுத்துவதிலிருந்து விலகி ''இவர்கள் படிக்க மாட்டார்கள், இவனைக் கொண்டு வயலில் வேலை செய்வதற்கு பழக்கப்போகின்றேன்'' என்கிற விடைகளுடன் தன்னுடைய பிள்ளையை கற்பதிலிருந்து விடுவித்து வேலைக்குள்



ஈடுபடுத்தப்படுவதையும் காண்கிறோம். இது நமது நாட்டில் நடைபெறுகின்ற விடயமாக இருக்கின்றது.

இதேபோன்று உலகெங்கும் இந்நிலை காணப்பட்டாலும் நமது அண்டை நாடான இந்தியாவில் குழந்தைத் தொழிலார்களின் நிலமை மிக மோசமாக காணப்படுகிறது. இந்தியாவில் உள்ள குழந்தை தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டுழைத்த கைலாஷ் சத்யார்த்த என்பவருக்கு இவ்வாண்டுக்கான நோபல்பரிசு கிடைத்திருக்கிறது. இந்தியாவில் பல அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடித்துத் தொடர்ந்து குழந்தைகள் நலத்துக்காக, குழந்தைகள் கூலிகளாக்கப்படுவதைத் தடுப்பதற்காகப் போராடியவர் இந்த சத்யாத்திரியாவார்.

சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக, குழந்தைகளின் உரிமைகளுக்காகப் போராடிவரும் இவர் 78000க்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளிகளான குழந்தைகளை மீட்டிருக்கின்றார். சத்யாத்திரி UNISEF அமைப்பின் முயற்சிகளுக்குத் தேவையான பிரசாரம் மற்றும் பங்களிப்பை இந்தியாவில் வழங்கியிருந்தார்.

ஏழாம் உலகம் என்னும் ஜெயமோகனின் நாவல் பிச்சை எடுக்கும் குழந்தைகளின் இருண்ட உலகை நமக்கு உணர்த்துகிறது. இவ்வாறான விடயங்கள் நமது நாட்டில் குறைவானதாக குழந்தை தொழிலாளர்கள் பிரச்சினை காணப்படவே செய்கிறது. அதேவேளை கல்வியறிவிலிருந்து பிரித்தெடுத்து அவர்களை வேலைக்கமர்த்துவது என்பது மலையகம் மட்டுமன்றி கடந்த காலங்களில் யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களிலிருந்தும் குழந்தைகள் உரிய வயதினை அடையுமுன்னர் வேலைக் கமர்த்திவிடும் சந்தர்பங்கள் இருந்தது. இப்போது சற்றுக் குறைந்திருந்தாலும் இன்று வாழ்க்கையோடு போராடுகின்ற குடும்பத்து பிள்ளைகள் இவ்வாறு குழந்தைத் தொழிலாளராக வேலை செய்வதை சிறுவர் உரிமை மீறலாக பார்ப்பதோடு அவர்களை கட்டாயம் கல்வியினைக் கற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியும் உள்ளது. இவர்களுக்கு வேலை கொடுப்பவர்களையும் சட்டத்தின் முன்நிறுத்துவதற்கும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் தயங்கவும் கூடாது.

அதேவேளை கீழை நாடுகளில் குழந்தைத் தொழிலாளி என்பது ஒரு மிகவும் ஏற்கப்பட்ட நடைமுறை விடயமாகிவிட்டது. கோடிக்கணக்கில் குழந்தைத் தொழிலாளிகள் பெருகுவது அவர்களின் மனித உரிமைக்கு எதிரானது மட்டுமன்றி வருங்காலத்தில் ஆரோக்கியமும், அறிவு வளர்ச்சியும் அவர்களுக்கு இல்லாமல் போவதால் இது தேசத்துக்கும் மிகவும் கனதியான கெடுதியான விடயமாகும். மேலும், விவசாயத்திலும் குழந்தைகள் மிகுந்த அளவு ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதையும் அறிந்திருக்கின்றோம். தேசத்தின் மிகப் பெரிய பலம் மனித வளமே. பிஞ்சுக் குழந்தைகளை கூலிகளாக்கி நாம் தேசத்துக்குப் பின்னடைவானதும் அவர்களது உரிமைக்கு எதிரானதுமான சுரண்டலையே செய்கிறோம் என்பதை எம்மில் எத்தனைபேர் கண்டுள்ளனர். அல்லது உண்மையானவகையில் குரல் கொடுத்திருக்கின்றோமா?

இன்று பாடசாலையில் சிறந்தவகையில் கற்றலை மேற்கொள்ளாமல் விடுவதானது அவர்களை (மாணவர்கள்) இடைவிலகலை மேற்கொள்வதற்கு உவப்பான செய்தியாக அமைந்துவிடுகின்றது. சோம்பேறித்தனமான கற்றல், ஆசிரியர்களின் ஏனோதானோ என்கிற நிலைமை, ஒழுங்கற்ற வகுப்பறைச் சூழல், ஏனைய மாணவர்களினது பழிச்சொற்கள் போன்ற விடயங்களுடன், தன்னுடைய பிள்ளையில் அதிக அக்கறை கொண்டு கற்றலில் கவனம் செலுத்தாமை போன்றவைகளின் ஊடாக இடைவிலகல் நடைபெறுகின்றது. அந்த நடவடிக்கையானது இவ்வாறு கற்றலை இழந்து பிள்ளைகளைத் தொழிலாளியாக்கும் அளவுக்கு இட்டுச் செல்லுமாக இருந்தால் எதிர்காலத்தில் எமது நாடு, எமது வளம், எமது பிற்சந்தியின் வாழ்க்கைமுறை, நவீன உலகில் காணப்படும் சவாலை வெற்றிகொள்ள முடியாமல் தத்தளிக்க வேண்டிவரும். இன்று ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் நீண்டகால யுத்தம், வறுமை போன்றவற்றின் மூலம் பின்னடைவு கொடுத்திருப்பதைக் காண்கிறோம். அந்த நிலைக்கு எமது நாடு தள்ளப்படக்கூடாது என்பதை உறுதியான வகையில் ஏற்றுக்கொண்டு எதிர்காலத்திற்கான வேலைத் திட்டங்களை ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் வெற்றிக் கொள்வோமாக இருந்தால் அதுவே நாம் செய்யும் சிறந்த திட்டமாக அமையும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை.

▲

# நீங்கள் நலமா?

## டாக்டர் சாருலதா பதிலளிக்கிறார்

**திருமதி அமுதா, மன்னார்.**

**கேள்வி :** இரண்டு வருடங்களாக கடுமையான ஒற்றைத் தலைவலியால் அவதிப்படுகிறேன். வலி மாத்திரைகளால் நிரந்தரமான தீர்வு ஏதும் கிடைக்கவில்லை. ஒற்றைத் தலைவலி எதனால் ஏற்படுகிறது? இதை குணமாக்க என்னதான் வழி?

**பதில் :** 'பொதுவாக உடல்நலக் குறைபாடு, சளி, இருமல், ஜலதோஷம், காய்ச்சல் என உடல்நலம் குறையும்போது தலைவலி ஏற்படும். இதுபோன்ற தலைவலி ஓரிரு நாட்களில் சரியாகிவிடும்.

ஒற்றைத் தலைவலி இதனால்தான் வருகிறதென குறிப்பாக எந்தக் காரணத்தையும் சுட்டிக்காட்ட முடியாது. இருந்தும், மரபியல் காரணங்கள், அதிக வெளிச்சம், இரைச்சல், மன அழுத்தம் என நம் சூழலாலும் இந்த பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது. எப்போதும் ஏதேனும் யோசித்துக்கொண்டே இருப்பதும், அதிகம் வெயிலில் அலைவதும், தேவையற்ற பிரச்சினைகளை மனதில் போட்டு உழட்டிக்கொள்வதும் மன அழுத்தத்தை ஏற்படுத்தி தலைவலிக்கு காரணமாகலாம்.

சாக்லெட் ஐஸ்கிறீம், சாக்லெட் க்ரீம் பிஸ்கெட் என சாக்லெட் கலந்த பண்டங்களில் சேர்க்கப்படும் செயற்கை இரசாயனப் பொருட்களாலும் தலைவலி அதிகரிக்கும். இவற்றைத் தவிர்ப்பது நல்லது. மேலும், சிட்ரஸ் உள்ள பழங்களான தோடம்பழம், எலுமிச்சை, சாத்துக்குடி மற்றும் காபி, டீ, குளிர்பானங்கள், சீஸ், பீட்ஸா, ஜங்க் ஃபுட் போன்றவற்றையும் அறவே தவிர்க்க வேண்டும். தினமும் தியானம் செய்யலாம். வாக்கிங், ஜாகிங் போவதும் பலனைக் கொடுக்கும். இவற்றுடன், நிம்மதியான தூக்கம் ஒற்றைத் தலைவலிக்கு நிரந்தரத் தீர்வைத் தரும். தொடர்ந்து ஒற்றைத் தலைவலி நீடிக்குமானால் நரம்பியல் நிபுணரைக் கலந்து ஆலோசித்து சிகிச்சை பெறுவது நல்லது.'

**ரதன், மட்டக்களப்பு.**

**கேள்வி :** பொதுவாகவே எனக்குப் பெரிய அளவில் பசி எடுப்பதே இல்லை. காலையில் சுத்தமாகப் பசி உணர்வு இல்லை. இதனால் நான் காலை உணவைத் தவிர்த்துவிடுகிறேன். ஆனால், ஆரோக்கியமாக இருப்பது போலவே உணர்கிறேன். எனது நண்பன் பசி எடுக்கவில்லை என்றால், அது நோய் என்கிறான், இது உண்மையா?

**பதில் :** 'பசி எடுக்காததற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால், தொடர்ந்து ஒருவருக்குப் பசி எடுக்கவில்லை என்றால், அது ஏதாவது ஒரு நோயின் அறிகுறியாக இருக்கலாம். மன அழுத்தத்தின் காரணமாகவும் பசி உணர்வு தோன்றாமல் இருக்கலாம். ஆனால், உங்களுக்குக் காலையில் மட்டும் பசிக்கவில்லை என்கிறீர்கள். இதைச் சரிசெய்ய உங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டால் போதுமானது. இரவு நேரங்களில் அரை வயிறு நிரம்பும் அளவு மட்டும் சாப்பிடுங்கள். செரிமானத்திற்கு அதிக நேரம் தேவைப்படும் பரோட்டா போன்ற உணவுகளைத் தவிர்த்து, ஆவியில் வேகவைத்த உணவுகள், பழங்கள் சாப்பிடுங்கள். இரவுத் தூக்கத்தை முறைப்படுத்தி, சரியான நேரத்திற்கு உறங்கி எழுங்கள். பழங்களில் ஏதாவது ஒரு பழத்தைத் தினமும் சாப்பிடுங்கள். காலை உணவைத் தவிர்த்தால், சர்க்கரை நோய் வர வாய்ப்பு உள்ளது. நீங்கள் உடனே உணவு மற்றும் ஊட்டச்சத்து நிபுணரை சந்தித்து, உங்கள் உணவுப்பழக்கம் பற்றித் தெரிவித்து, அவரின் ஆலோசனை பெறுவது நலம்.'

**செல்வி சாந்தினி, நெல்லியடி.**

**கேள்வி :** எனக்கு 25 வயதாகிறது. அடிக்கடி இடது மார்பில் வலிக்கிறது. சிறிது நேரத்தில், வலி சரியாகிவிடுகிறது. இது மாரடைப்புக்கான அறிகுறி என்கிறார்கள். இது உண்மையா? மாரடைப்பினால் வரக்கூடிய நெஞ்சு வலியினையும், வாயுக்கோளாறுகளால் வரும் வலியினையும் எப்படி அறிந்துகொள்வது?

**பதில் :** 25 வயதில் மாரடைப்பு வருவது மிகவும் அரிது. உங்களுக்கு அடிக்கடி வருகிற நெஞ்சு வலி, மாரடைப்புக்கான வலியாக இருக்க அநேகமாக வாய்ப்பு இல்லை. உங்களுக்கு நெஞ்சு எரிச்சல் பிரச்சினையாக இருக்கலாம். இரைப்பைக்குள் அடர் அமிலங்கள் சுரந்து, நாம் உண்ணும் உணவை செரிக்கவைக்கின்றன. உணவு மற்றும் அமிலம் உணவுக் குழாய்க்குள் வருவதை எதுக்களிப்பு (GERD) என்போம். இவ்வாறு ஏற்படாமல் எல்.இ.எஸ் (LES) என்ற வால்வு தடுக்கிறது. இந்த வால்வு தளர்வுறும்போது, அமிலம் மற்றும் அமிலம் கலந்த உணவுகள், உணவுக் குழாய்க்குள் வந்து புண்களை ஏற்படுத்திவிடும். இதனால் இடது பக்கம் நெஞ்சு வலி போன்ற உணர்வு ஏற்படும்.

காலை உணவை எடுத்துக்கொள்ளாதது, நேரம் தவறி உண்பது, அடிக்கடி டீ, காபி அருந்துவது, அதிகப்படியாக உணர்ச்சிவசப்படுதல், மது அருந்துவது, புகைபிடிப்பது மற்றும் மனஅழுத்தம் போன்றவை இதற்கு முக்கியக் காரணங்கள். இதைத் தவிர்க்க நேரத்துக்கு ஆரோக்கியமான உணவு எடுத்துக்கொள்ள வேண்டும். மனஅழுத்தத்தைக் குறைக்க, தியானம் செய்யலாம். மேலும், வலி நிவாரண மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்றி எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கவேண்டும். பாதிப்பு ஏன் என அறிய, வயிறு குடல் நோய் சிகிச்சை நிபுணரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

**சீலன், யாழ்ப்பாணம்.**


**கேள்வி :** எனக்கு 41 வயது. என்னுடைய வாய் எப்போதும் உலர்ந்தே இருக்கிறது. அதிக அளவு தண்ணீர் அருந்தினாலும்கூட, நாக்கும் தொண்டையும் வறண்ட நிலையிலேயே இருக்கிறது. எனக்கு என்ன பிரச்சினை? இதற்கு என்ன தீர்வு?



**பதில் :** ''உமிழ்நீரானது பாக்டீரியா மற்றும் பூஞ்சை தொற்றைத் தவிர்க்க உதவுகிறது. உமிழ்நீர் போதுமான அளவுக்குச் சுரக்காமல் போவதற்கு, பல்வேறு காரணங்கள் இருக்கலாம். பெரும்பாலும் உடலில் நீர்ச்சத்து குறைவாக இருந்தால், வாய் உலரும். புகை பிடித்தல், மருந்துகள் ஒவ்வாமை, உமிழ்நீர் சுரப்பியில் பிரச்சினை, நுரையீரல் பிரச்சினை, நரம்பியல் பிரச்சினைகள், வயிற்றுப்போக்கு, வாந்தி ஆகியவற்றால் நீர் இழப்பு நேரலாம். அதிகம் பேசுவது, சர்க்கரை நோய் பாதிப்பு இருந்தாலும் வாய் உலரலாம். 40 வயதைக் கடந்து விட்டதால், நீங்கள் அவசியம் சர்க்கரைப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். பரிசோதனை முடிவுக்குப் பின்னர்தான் என்ன காரணம் எனக் கண்டுபிடிக்க முடியும். பொதுவாக வாய் உலர்ந்து இருப்பது நல்லது அல்ல. எனவே, நீங்கள் விரைவாகப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். நாக்கு உலராமல் இருக்க, வாய் வழியாக சுவாசிப்பதை நிறுத்தி, மூக்கு வழியாக சுவாசியுங்கள். ஃப்ளூரைடு பற்பசை உபயோகியுங்கள். ▲

# "ஒளி அரசி" குறுக்கெழுத்துப்போட்டி

## "ஒளி அரசிசு" குறுக்கெழுத்துப்போட்டி
## இல. 15




**போட்டி முடிவு திகதி 25.02.2015**

### இடமிருந்து வலம்

1. வாய்மையை வென்றவன்
3. நிலவு
4. விசுவாமித்திரருக்கு மேனகையிடம் உண்டானது
5. சமாதிகளின் உறைவிடம்
8. அரிச்சந்திரனின் மகன்
9. தன்மைப் பெயாச்சோல் ஒன்று (திரும்பியுள்ளது)
10. அழகு (குழம்பியுள்ளது)
11. இணை
15. ஆட்டின் ஆணினம்.
16. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பிரதேசம்
18. இலத்திரனியல் வரப்பிரசாதம்
19. யாழ்ப்பாணத்தின ஒரு வளம்
20 கைத்தொலைபேசி தொடாபாடலின் முக்கிய சாதனம்
21. மேன்மை
22. குழந்தையை தூங்கவைக்க பாடுவுது

### மேலிருந்து கீழ்

1. கார்த்திக் நாயகனாக நடித்த ஒரு படம்
2. சாஜகான் படத்தின் நாயகி
3. சந்தாப்பம் அல்லது வேளை
6. நாள்
7. திருமண அடையாளமாய் இதனை மாற்றுவா (குழம்பியுள்ளது)
11. வயோதிபகாலத்தில் முதுகில் விழுவது
12. இராசிகளில் ஒன்று
13. இங்கு பிதிர்கடன் கழித்தால் சிறப்பு என்பா
14. ஒற்றாவாவை தலைநகராகக் கொண்ட நாடு (குழம்பியுள்ளது)
15. இராமாயணத்தை இயற்றியவா
16. மிளகாய் கன்று இந்தவகை
17. மனைவியின் சகோதாயின் கணவன்
18. மனதை மகிழ்விப்பது
19. இஸ்லாமியப் பெண்கள் அணிவது

**இல.13 இல் 500/= பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்**


திருமதி. சறோஜா இராசையா
கும்புறுமூலை,
வேம்பு,
கிரான்

என்.கே.வேணி
இல.25/10, சேச் வீதி,
பலாங்கொடை

ஏ.வீ.எப்.ஸபா
209, கல்பொக்கை
வலிகாமம்

**சரியான விடைகளை எழுதி பாராட்டு பெறுபவர்கள்**

1. திருமதி. எஸ்.கிருஸ்ணவேணி
   கொக்குவில்
2. எம்.எஸ்.சித்தியும்மா
   திருகோணமலை
3. வி.தவமணிதேவி
   திருகோணமலை
4. எஸ்.ஏச்.எப். இன்ஸிரா
   பதுளை
5. திருமதி.ச.லிங்கமூர்த்தி
   வல்வெட்டித்துறை
6. திருமதி.பகீரதி மோகனராசு,
   காரைதீவு-11
7. ஆர்.மாணிக்கம்
   கொழும்பு-15
8. எஜ்.திருஞானலோசனி
   கொழும்பு-6
9. தெ.நர்மதா
   சாவகச்சேரி
10. என்.ரி.எப்.ராசிதா
   அக்கரைபற்று -01




அனுசரணை

**Be Es En Traders**
அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்
Tel : +94 11 2348418

# பனம்பொருள் தயார் செய்யும் சுயதொழிலாளர்களுடன் ஒரு சந்திப்பு

அல்வாய் வடக்கு இளங்கோ வாசிக சாலையின் வெண்ணிலா குழு என்ற பெயரில் சில பெண்கள் ஒன்றிணைந்து பனைசார் உற்பத்திப் பொருட்களைத் தயார் செய்யும் ஓர் சுயதொழில் முயற்சியில் வெற்றகரமாக மேற்கொண்டு வருகின்றார்கள். அவ்வெற்றிப் பெண்மணிகளின் அனுபவங்களை ஒளி அரசியில் வாசகர்களுக்காக பகிர்ந்துகொண்டபோது.

எமது இம் முயற்சி 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் செறிந்த வளமான பனை மரத்தில் இருந்து எண்ணற்ற பயன்களைப் பெறுகின்றோம். இவற்றின் சிறந்த பயன்களின் ஒன்றாகவே எமது பனைசார் உற்பத்திப்பொருட்கள் விளங்குகின்றன.

ஆரம்பத்தில் மிகக் குறைந்த அளவில் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சி காலப்போக்கில் பெருமளவு வளர்ச்சியினை அடைந்துள்ளது. எமது பொருளாதார தேவையினை பூர்த்தி செய்யவும், மேலதிக நேரத்தை சரியான முறையில் எமக்கு வழங்கப்பட்ட பணத்தை தொகையை இப்பொருட்களை விற்பதன் மூலம் நிறைவுசெய்கின்றோம்.

பிள்ளைகளின் கல்வித் தேவையினை பூர்த்தி செய்வதற்கு இவ்வருவாய் பெருதும் உதவியாக உள்ளது. எமது குடும்பங்களின் தன்னிறைவான பொருளாதாரமாக இருப்பதற்கு இந்த வருவாய் காரணமாக இருக்கின்றது.

பனை அபிவிருத்திச் சபையின் தரமான விலையில் எமது பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவது எமக்கு மிகச் சிறந்த சந்தை வாய்ப்பு வசதியாக உள்ளது. தனிநபர் தேவைக்காகவும் சந்தை விற்பனைக்காகவும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் விற்பனைக்காகவும் எமது பொருட்கள் கோரப்படுகின்றன.

வெளிநாடுகளில் எமது பொருட்களுக்கு பெருமளவில் வரவேற்பு இருப்பதால் பனை அபிவிருத்தி சபையினர் எமது பொருட்களை கொள்வனவுசெய்து அவற்றை வெளிநாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்கின்றனர். இதனால் எமது கைவினைப்பொருட்களை இன்னும் தரமாகவும் கலைநுணுக்க வேலைப்பாடுகளுடன் புதிய வடிவங்களில் பொருட்களை செய்வதற்கும் இவை எமக்கு இன்னும் ஊக்கத்தை அளிப்பவையாகவும் உள்ளன. ▲



# அவளும் அப்படித்தான்!!!



என்ன? நீங்க சொல்லறது உண்மை தானா...? என்னால நம்பவே முடியலைங்க... கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க மாணிக்கம் வந்தவர் சொன்னதை நம்ப முடியாமல் கேட்டான்.

என்னப்பா... என்னத்தை விளக்கமா சொல்லுறது? உனக்கு தெரிஞ்சிருக்கும்ன்னு தான் நெனச்சேன். உன் தங்கச்சிய அவ புருஷன் போட்டு அடிக்கிறதை எத்தனை முறை நான்மாடியிலே இருந்து பார்த்திருக் கேன் தெரியுமா? அந்தப் பொண்ணு எல்லாத் தையும் மறைச்சிட்டு எங்கக் கிட்ட சிரிச்சி பேசும். என் மனைவி கேட்டாகூட அதெல் லாம் ஒன்னுமில்லையேன்னு மழுப்பிடும். ஏதோ புருஷன் பொண்டாட்டி சண்டைன்னு விட்டுட்டாக்கூட அந்த மனுஷனுக்கு வேலை போனதிலிருந்து ரொம்பதான் அவளைப் போட்டு வதைக்கிறான்.

எனக்கே மனசு தாங்கலை. அதுதான் உன்கிட்ட சொல்லுறேன். நான் அந்நியன். அந்த வீட்டு மாடியில குடியிருக்கிறவன். நான் கேட்டா அது தப்பாயிடும். நாளைக்கு ஏதாவது ஒன்னுன்னா நீங்க சொல்லவே இல்லை யேன்னு என்மேல வருத்தப்படக் கூடாதுன்னு

தான் உன் காதிலே போட்டேன். இனி உன் பாடு. உன் தங்கச்சி பாடு. நான் கிளம்புறேன்...

வந்தவர் கிளம்பிவிட்டார்.

அவர் பாரம் குறைந்துவிட்டது. ஆனால், மாணிக்கத்தால் இந்த பாரத்தைச் சுமக்க முடியவில்லை. ஆத்திரத்தில் கண்கள் சிவந்தன. கன்னமும் மீசையும் துடித்தன. அவனைப் பார்க்கும் போது அவன் மனைவி சுந்தரிக்குப் பயமாக இருந்தது.

என்ன திமிர் இருந்தால் என் தங்கச்சிய அடிப்பான் அவன்... கேட்க ஆளில்லைன்னு நெனச்சிட்டானா? அவ்வளவு திமிர் அவனுக்கு எப்படி வந்தது. கேட்க மாட்டேன்னு நெனச்சிட்டானா... வர்றேன். காலையிலேயே கிளம்பி வர்றேன். அவன் சட்டையைப் பிடிச்சி இழுத்து நடு ரோட்டுல போட்டு உதைக்கிறேன். அவனைச் சும்மா விட போறதில்லை நான்...

ஏய்... என்ன திரு திருன்னு முழிக்கிறே. நாளைக்கிக் காலையிலேயே ஊருக்குப் போகனும். என் டிரெசை அயர்ன் பண்ணி வை...

தன் மனைவியைப் பார்த்து அதட்டினான். அவள் அங்கிருந்து நகரவே இல்லை.

என்ன? சொல்றேனில்ல... காதுல விழலையா? போய் செய்... என்றான்.

ஆத்திரத்தில் கண்கள் சிவந்தன. கன்னமும் மீசையும் துடித்தன. அவனைப் பார்க்கும்போது அவன் மனைவி சுந்தரிக்குப் பயமாக இருந்தது.

ஏங்க... நீங்க போவறது அவசியம் தானா...? மெதுவாகக் கேட்டாள்.

என்ன...? என்ன...? அவசியமில்லைன்னு சொல்லுறியா? என் கண்ணுக்குக் கண்ணா வளர்த்த தங்கச்சிய அவன் அடிப்பான்... என்னைக் கேட்டுக்கினு சும்மா இருக்க சொல்லுறியா...?

நான் கேட்க வேணான்னு சொல்லலைங்க. அவளே வந்து சொன்னாள்ன்னா நாம கேட்கலாம். சாதாரண புருஷன் பொண்டாட்டி சண்டையில நாம தலையிடுறது நல்லதில்லைங்க...

எது சாதாரண சண்டை? அடுத்தவன் பார்த்துட்டு வந்து சொல்ற அளவுக்கு இருக்குது. நான் போய் கேக்கலைன்னா என்ன நினைப்பாங்க...?

அவங்க எதையாவது நெனச்சிட்டுப் போவட்டும். ஆனால், நீங்க இப்போ போவறது நல்லதா படலைங்க...

ஏய்... இதுக்கு மேல உன் அட்வைசைக் கேக்க நான் தயராயில்லை. என்னுடைய தங்கச்சிய பத்தி எனக்குத்தான் தெரியும். இதுக்கு மேல நீ வாயைத் திறந்தால் உன் வாயில ஒரு பல்லும் இருக்காது... ஆமா...

கோபமாக எழுந்து போய்விட்டான் மாணிக்கம். இதற்கு மேல் அவனிடம் எதையும் பேச முடியாது. பெருமூச்சுடன் தன் வேலையைக் கவனித்தாள்.

மறுநாள் காலையில் தங்கையின் வீட்டில் கால் எடுத்து வைத்தவுடன் முகம்மலர வரவேற்றது தங்கையின் கணவன் தான். ஏதோ வேலையாக வெளியே கிளம்ப ஆயுத்தமாக இருந்தான்.

வாங்க மாமா... என்ன திடீர்ன்னு வந்திருக்கிறீங்க? ஆச்சர்யமா இருக்குது! ஏதாவது முக்கிய விசயமா?

ஆவலுடன் கேட்ட மாப்பிள்ளையிடம் ''ஏன்டா என் தங்கையை அடித்தாய்'' என்று கேட்க மனம் வரவில்லை மாணிக்கத்திற்கு.

சும்மா தான். உங்களை எல்லாம் பார்த்துட்டு போகலாம்ன்னு வந்தேன் முழப்பிவிட்டான்.

அப்படியா மாமா. என்னை ஒரு வேலைக்கிக் கூப்பிட்டு இருக்காங்க. நான் போயிட்டு வந்திடுறேன். வந்த பிறகு சாவகாசமா பேசலாம் மாமா... சரசு... உன் அண்ணனை நல்லா கவனி. நான் போற வழியில அவருக்குப் பிடிச்ச புரி மசாலாவை வாங்கி யாருகிட்டேயாவது கொடுத்து அனுப்புறேன். என்ன...

வரட்டுமா...?

பதிலுக்குக் காத்திருக்காமல் கிளம்பி விட்டான்.

சரஸ்வதி மாணிக்கத்திற்குக் காபி கலந்து கொடுத்து விட்டு அண்ணி, குழந்தைகளின் நலன் விசாரித்தாள். ஊர் விசயங்களைக் கலகலப்பாக பேசினாள்.

அவள் முகத்தில் இருந்த மகிழ்ச்சி அவள் மனத்தில் இல்லையே என்று வருத்தமாக இருந்தது மாணிக்கத்திற்கு. பேசிக்கொண்டு இருந்தபோதே புரி மசாலா வர அண்ணனுக்குப் பரிமாறிவிட்டு அருகில் அமர்ந்த தங்கையிடம் கேட்டான்.

என்ன சரசு... நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா...?

என்ன கேள்வி பட்டிங்க...?

உன்புருஷன் உன்னை எப்போ பார்த்தாலும் அடிக்கிறானாமே...

இல்லையே... யார் சொன்னது உனக்கு...?

யார் சொன்னால் என்ன... மறைக்காமல் சொல்லு. அவனைக் கேட்க ஆளில்லைன்னு நெனச்சிட்டானா...? சற்றுக் கோபமாகக் கேட்டான்.

அப்படியெல்லாம் இல்லைண்ணா. எப்பவாவது கோபம் அதிகமானால் அதைக் கட்டுபடுத்த முடியாமல் அடிச்சிடுறார். அதுவும் எப்போவாவது தான்... சற்று தயங்கியே சொன்னாள்.

என்னம்மா இப்படி சொல்லுற? அவனுக்கு எதுக்காவது கோபம் வந்தா அதுக்காக உன்னை போட்டு அடிப்பானா...?

அப்படியில்லையண்ணா. அவருக்கு தன் மேலேயே கோபம். தான் குறைவா சம்பாதிக்கிறோமே என்ற ஆத்திரம். வீட்டுச் செலவுக்கு அது பத்தவில்லையே என்ற ஆத்திரம். தன் தங்கையை கல்யாணம் செஞ்சி கொடுக்கணுமே என்ற ஆத்திரம். அவர் மேல இருக்கிற இந்த ஆத்திரத்தால அவரையே அவரால அடிச்சிக்க முடியலை. நான் ஏதாவது கேட்கப் போய் அந்த ஆத்திரத்தை என் மேல திருப்பி விடுறார். அவ்வளவு தான்...

அதுக்காக நீ தான் கிடைச்சியா? அவன் அம்மாவை அடிக்க வேண்டியது தானே? அவன் தங்கச்சிய உதைக்கிறது தானே.. அவனால கட்டிக்கொடுக்க முடியலைன்னா ஒரு கூலி வேலை செய்யிறவனுக்குக் கட்டிக்கொடுக்கிறது தானே... இவன் இருக்கிற லட்சணத்தில் தங்கைக்கு பணக்கார இடமா பார்த்தால் முடியுமா...?

என்னண்ணா சொல்லுற? நீ மட்டும் உன் தங்கச்சிக்கு நல்ல இடமா... சம்பாதிப்பவனா பார்த்து தானே கட்டிக்கொடுத்த. உன் வருமானத்துல எனக்கு ஒரு கூலிவேலை மாப்பிள்ளையை ஏண்ணா பார்க்கலை. என் மேல நீ வச்ச பாசத்தால தானே வரவுக்கு மீறி கடன் வாங்கி கல்யாணம் செய்து வச்சே. அப்போ உனக்கு எவ்வளவு ஆத்திரம் வந்தது. எத்தனை முறை என் கண்ணெதிரிலேயே அண்ணியை அடிச்சிருப்ப. அவங்க நிலையையில தான் இப்போ நான் இருக்கிறேன். விடுங்கண்ணா என்றாள்.

மாணிக்கம் யோசித்தபடி பேசாமல் இருந்தான். சரஸ்வதி சொல்வது முற்றிலும் உண்மை. ஆனால் அதற்காக...

இல்லை சரசு... என் மனசு கேட்கலை. நான் அவன் வந்ததும் இதைக் கேட்கத்தான் போறேன்... என்றான்.

வேண்டாம்ண்ணா. நீ இதை கேட்டால் உங்களுக்குள்ள இருக்கிற மதிப்பு போயிடும். நீ எப்படி அண்ணி வீட்டுக்காரர்களை மதிக்கலையோ... அதே மாதிரி இவரும் நடந்துக்குவார். எனக்கும் உன் வீட்டுக்கு வர போற உறவும் போயிடும். எனக்கு அண்ணியோட வாழ்க்கையே பாடமாயிடுச்சி. அதனால் நீ இதை கண்டும் காணாமல் இருந்திடு. அது தான் நமக்கு நல்லது... என்றாள் சரஸ்வதி.

மாணிக்கம் தன் தங்கையைக் கண்கலங்க பார்த்தபடி கிளம்பினான்.

அண்ணா... போகும்போது கூப்பிட்டாள்.

என்னம்மா...?

நீ... அண்ணிய அடிச்சிட்டு ரெண்டு நாள் கழிச்சி பூ வாங்கிக்கினு வந்து சமாதானப் படுத்துவியே... அது மாதிரி இல்லையண்ணா இவர். அன்னைக்கி ராத்திரியே சமாதானப் படுத்திடுவார்... சொல்லிவிட்டு வெட்கத்துடன் சிரித்தாள்.

குறும்பக்கார பொண்ணு... சொல்லிய படியே கிளம்பினான்.

நாம் நடந்து வந்த பாதையைத் தான் நம் சந்ததியனரும் தொடருவார்கள். நாம் நேரான பாதையில் நடந்துச் செல்ல முயலுவோம். ▲

# விவாத மேடை 01




ஒளி அரசியின் வாசகர்களுக்கிடையிலான தர்க்க ரீதியான சிந்தனைத் திறனை உயர்த்தும் முகமாகவும் சில சர்ச்சைக்குரிய விடயப்பரப்புக்களை விவாதத்துக்கு உட்படுத்தும் நோக்குடனும் இவ் விவாத மேடை போட்டித் தொடர் ஆரம்பிக்கப்படுகின்றது. வாசகர்களாகிய உங்களது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்கக்கூடிய ஓர் கள மேடையே ஒளி அரசி உங்களுக்கு அமைத்து தந்துள்ளாள். விவாதிப்போம்; தெளிவுபெறுவோம்.

## போட்டிக்கான நிபந்தனைகள்

01) ஒவ்வொரு விவாத மேடையிலும் குறித்த ஒரு தலைப்பு தரப்படும். குறித்த தலைப்பை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ உங்களது விவாதங்களை முன்வைக்கலாம்.

02) இவ்வாறு அனுப்பப்படும் உங்களது வாதம் 200 சொற்களுக்கு மேற்படாதவாறும் அழகு தமிழிலும் கட்டமைக்கப்படுதல் அவசியம்.

03) இவ்வாறு அனுப்பப்படும் ஆக்கங்களில் மிகச்சிறந்த இரண்டு ஆக்கங்கள் பரிசுக்காக தெரிவு செய்யப்படுவதுடன் தலா ரூ. 750/= பரிசாக வழங்கப்படும்.

04) விவாதங்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் போட்டிக்காக தெரிவு செய்யப்படமாட்டது.

05) உங்கள் விவாதங்களை அனுப்பும்போது ஒளி அரசியுடன் இணைக்கப்பட்டுள்ள போட்டிக்குரிய கூப்பன்களை இணைத்து **இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

### விவாத மேடை 01 இற்கான தலைப்பு

''இன்றைய சூழலில் பெண்கள் வேலைக்கு செல்வது எமது குடும்பக் கட்டமைப்பை சீரழிக்கிறது? சீரழிக்க வில்லை?''

**உங்கள் விவாதங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 25.02.2015**

### விவாத மேடை - 01

முழுப்பெயர் : ..............................................

..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

தொலைபேசி இல.: ..............................................

ஒப்பம் : ..............................................

# சிரிப்பில் ஒரு நெருப்பு...

அவளிடம்தான்
என்னை
அடகு வைத்தேன்!
கடைக்கண் பார்வைக்கும்
கண நேரப் புன்னகைக்கும்
அவளிடம்தான்
என்னை
அடகு வைத்தேன்!

இரண்டாம் நாளே
ஏலம் போட்டு விட்டாளே!
அவளுடைய வீட்டில்
என் பெயர்
அடிபடவேண்டுமென்று
ஆசைப்பட்டேன்...
நானே தெருவில்
அடிபடும்படி
செய்து விட்டாளே!
வீதியில் தடுமாறி
விழுந்தபோது கேட்டார்கள்
'எது உன்னை இடறியது?'

எப்படி சொல்ல முடியும்...
எதிரே வந்த
ஒரு பெண்ணின்
புன்னகைதான் என்னை
புரட்டி விட்டதென்று!

தீக்குச்சிகளைத்
தேடிக் கொண்டிருக்காதீர்கள்
அவளிடம் கேளுங்கள்...
சிரிப்பிலிருந்து
நெருப்பை உண்டாக்குவது
எப்படி என்று!

என் கல்லறைக்கு
வரும்போதாவது
அவளைப் பார்த்து
யாராவது கேளுங்கள்...
அந்தப் புன்னகைக்கு
அர்த்தம் என்னவென்று!



# கூகுள் கிளாஸ்க்கு போட்டியாய் வருகிறது புதிய ஓடிஜி கிளாஸ்!

சான்பிரான்சிஸ்கோ-வை தலைமையக மாகக் கொண்டு இயங்கும் ஆஸ்டர்ஹட் டிசைன் குரூப் (Osterhout Design Group) ராணுவ வீரர்களுக்காக கடினமான எந்த சூழல்களிலும் தாக்குப்பிடிக்கக்கூடிய ஸ்மார்ட் கிளாஸ்-ஐ தயாரித்து வந்தது. இந்நிறுவனம் தற்போது சாதாரண மக்கள் பயன்படுத்தும் ஸ்மார்ட் கிளாஸ்-ஐயும் இந்த வருடம் முதல் அறிமுகப்படுத்த உள்ளதாக பிரபல போர்ப்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த கிளாஸ் மூலம் ஹை-டெஃபனிஷன் வீடியோக்களைக் காணலாம். புதிதாக வீடியோவையும் பதிவுசெய்யலாம்.

இந்த கிளாஸ் சுருக்கமாக ஓடிஜி கிளாஸ் என அழைக்கப்படுகிறது.

இந்த ஓடிஜி கிளாஸ் Qualcomm Snapdragon 805 பிராசசரை கொண்டு இயங்கும். இதில் வைஃபை, ப்ளூடூத், சாட்டிலைட் நேவிகேஷன் போன்ற இணைப்பு சேவைகள் உள்ளது. அதுமட்டுமின்றி நாம் எங்கே, எதை பார்க்கிறோம் என்பதை அறிய சென்சார்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் நமது தலை அசைவுகளை 3டி படமாகக் காணலாம்.

இது சற்றே மாற்றியமைக்கப்பட்ட ஆண்டிராய்டு செயற்பட்டு முறை மூலம் இயங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஒருமுறை சார்ஜ் செய்தால் ஒரு மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை மட்டுமே தாங்கும்.


இதனை அறிமுகப்படுத்த உள்ள ஓடிஜி நிறுவனம் கூடிய விரைவில் இந்த கிளாஸ்க்கு எனப் பிரத்தியேகமாக ஆப்ஸ்களை உருவாக்கி வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் இந்நிறுவனம் வெளியிட்ட கிளாஸ் கடினமாகவும், அடிபுடிகளுக்கு தாங்கும் வகையிலும் ராணுவ பயன்பாட்டிற்கு தாங்கும் வகையிலும் இருந்தது. ஆனால், இதன் விலை 5,000 அமெரிக்க டாலர்கள் ஆகும்.

தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனம் இந்த கிளாஸ்க்கான காப்புரிமையை சுமார் 150 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கொடுத்து வாங்கவுள்ளது.

கூகுள் கிளாஸ்க்கு போட்டியாக அறிமுகமாகும் இந்த ஓடிஜி கிளாஸ்-ன் அதிகபட்ச விலை 1,000 அமெரிக்க டாலர்கள் இருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

ஆனால், கூகுள் கிளாஸ்-ன் விலை 1,500 அமெரிக்க டாலர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெப்ரவரி



**மேடம் :** எட்டில் சனீஸ்வரன் இருப்பதால் புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பொறுப்பில்லாமல் பொருட்களைக் கொடுத்து திருப்பிப் பெறமுடியாத நிலை தக்கவைக்கும். திசாபுத்தி நன்றாக இருந்தால் மட்டுமே பயண முயற்சிகளில் கால்பதிக்கவும். மக்களின் செயல்கள் பெருமையைக் கொண்டுவரும். 'ஈகோ' மனப்பாங்கைக் கைவிட்டு கவின் நிலையைத் தோற்றுவிக்கவும். விவாக முயற்சிகள் ஸ்தம்பித்து விடலாம். தாயாரின் தேக நலன் பாதிக்கப்படலாம். பரீட்சை முடிவுகள் உயர் கல்விக்கு வழி திறக்கும்.



**இடபம் :** அரச மற்றும் தனியார் துறைகளில் பணி ஏற்படும். கைவிட்டிருந்த பயணம் மீண்டும் செயற்பட சகோதரர் உதவி நல்குவர். ஓய்வுக்குப் பின்னரும் மீள் நியமனம் பெற விண்ணப்பிக்க மனம் நாடும். தற்காலிக பிரிவு மீண்டும் ஏற்படும். கடனை அடைக்க ஆபரணங்களை அடகுவைத்தல், சுபகாரியம் எதிர்பாராது ஏற்படல், காதலில் ஏற்பட்டிருந்த சந்தேகம் நீங்கிவிடல், சத்திரசிகிச்சைக்கு தினம் குறித்தல் மாமன்மாருடன் சுமுக நிலையைக் கடைப்பிடிப்பது நன்மையைத் தரும். இடைத்தங்கல் நாட்டினின்றும் சிலர் தாயகம் வருவார்கள்.



**மிதுனம் :** தடைப்பட்டிருந்த விவாகம்/பயணம் என்பன வெற்றி இலக்கை ஏற்படுத்தும். புதிய ஜீவன் ஏற்பட்ட அறிகுறியால் மகிழ்வடைதல், சொத்துப் பிரச்சினை சுமுக நிலைக்குவரும், வாகன யோகங்கிட்ட மூத்த சகோதரி உதவி கிட்டும், புதிய மனை கோல ஏற்ற நிலையத்தைத் தெரிவுசெய்தல், போலி நகை, கள்ள நோட்டுகளில் எச்சரிக்கை நன்று. குடியுரிமை பெறும் நோக்கில் 'பேப்பர்' திருமணம் மேற்கொள்ளல், பிதாவின் நோய்நிலை மனதை வாட்டும். சுவீப் அதிர்ஷ்டமுண்டு. வெற்றுக் காசோலையில் கையொப்பம் வைத்து பின் அவதி நிலையை ஏற்படுத்தாதீர்.



**கடகம் :** ஜென்ம குரு உள்ளதால் சோகத்தால் உடல், உள பாதிப்பு ஏற்படலாம். பயணம் பற்றி இரண்டுங் கெட்டான் நிலையில் இருத்தல், ஆவணக் குறைப் பாட்டால் தண்டம் ஏற்படலாம். வாய்ச்சொல் மூலம் கொடுத்தகடன் மீண்டும் கைக்கு வரல், சக ஊழியர்களின் ஒத்துழைப்புக்கிட்டி பணியின் தேக்கம் அகலும். கணக்கில் சந்தேகம் ஏற்பட்டதால் வாடிக்கையை முறித்துக்கொள்ளல், 'லீசிங்' வாகனம் பறிபோக லாம். வங்கிக் கடன் கிட்டும் அதிர்ஷ்டம் உண்டு. மனைவியின் நோய் குணமடைதல், விஷ ஜந்துக்கள் பற்றி எச்சரிக்கையாக இருத்தல், பாதுகாப்பில் கவனம் எடுக்கவும்.



**சிங்கம் :** கொடுத்தவற்றைப் பெறமுடியாது முறைப்பாட்டில் இறங்குதல், பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்துவிடல், கௌரவப் பதவிகள் கிடைத்தல், அரசியல் விமர்சனம் பகையைத் தருதல், மனைவியின் சொற்கேட்டதால் மோசடி ஏற்படாமை. அநாமதேய தொலைபேசி மிரட்டல் பதகளிப்பைத் தருதல், பிள்ளைகளின் செய்கைகள் மானபங்கத்தை ஏற்படுத்தும். சரியாகக் கணக்கிட்டுப் பணத்தைப் பெறுங்கள். காணி உறுதியில் மோசடி ஏற்படலாம்.கன்னியர் தொடர்பில் விழிப்பாகச் செயற்படுக. பரீட்சை சித்தியால் வெளியூர் யோகம் தக்கவைக்கும். பழைய பகைமை மீண்டும் துளிர்விடலாம்.



**கன்னி :** ஏழரைச் சனி முடிந்தமையால் புதியனவற்றில் நாட்டம் பிறக்கும். விவாகத்துக்காகத் தாயகம் வருதல், பரீட்சைப் பெறுபேறு, உத்தியோகம், உயர் கல்வி, புலமைப்பரிசிலுக்கும் வழியேற்படுத்தும். சமாந்தரப் பிரயாணம், அசாதாரண வேகம் விபத்தைக் கொண்டுவரும். சொத்துப் பங்கீட்டால் உறவு கெடுதல், கௌரவக் குறைவால் தனித்தியங்க முற்படல், ஆலய பரிபாலனத்தில் பதவிகள் கிடைக்கும். நிலுவை கூடியதால் தொடர்புகள் துண்டிக்கப்படல், உணவில் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் நீரிழிவு குணமடைதல். அனுமதி கிடைப்பதில் தடையும், மனக்கவலையும் ஏற்படும்.

# மாத இராசிபலன்



**துலாம் :** ஏழரைச் சனி கடைக்கூறினால் துயர வெள்ளம் வடிய ஆரம்பிக்கும். நிலுவைகள் பெற தொலைபேசி சம்பாஷணைகள் பேருதவியாக இருத்தல், கடனை அடைக்க மீண்டும் கடன் பெறுதல், பிதாவின் தேக நலம் மேம்படையும். பொருட் கொள்வ னவுக்காக அடிக்கடி உள்ளூர் பயணம் ஏற்படல், கனடா மற்றும் ஆஸ்திரேலியா செல்லும் யோகம் ஏற்படும். நண்பரின் தொடர்பு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரல், தனிவழி செல்வதையும், கொடுத்ததைப் பெற தனித்தும் போகவேண்டாம். எதிர்பாராது இடமாற்றம் பதகளிப்பை தக்கவைக்கலாம், கலைஞர்கள் விளையாட்டுத்துறையினர் கௌரவிக்கப்படுவர்.



**விருச்சிகம் :** வியாழ சுகம் உண்டெனினும் ஏழரைச் சனி இருப்பதால் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். வெளியூர்ப் பயணம் தடைப்பட்டு இறுதியில் வெற்றியைத் தரும். புதியன கொள்வனவு செய்கையில் நம்பகத்தில் கவனமெடுக்கவும். நோய்நீங்க மருந்தில்லா மருத்துவத்தையும்/தெய்வத் தலங்களையும் நாட முற்படுதல், பாலியல் துன்புறுத்தலில் இளசுகள் தப்பிய பொருட்கள் வரலாம். வாகன யோகங்கிட்ட பிதா உதவுவார். இயற்கைச் சீற்றத்தால் பொருட்கள்/உயிர்கள் பாதிக்கப்படலாம். மேலதி காரிகளுடன் சுமுகமான உறவைப் பேணுங்கள். திருடர் எதிரியில் கவனமெடுங்கள்.



**தனு :** அட்டமத்துக் குருவுடன் ஏழரைச் சனியும் இருப்பதால் புதிய முயற்சிகளைக் கைவிடுங்கள். எதிரியைக் கண்ட வேளை முரண்படவேண்டாம். வெற்றுக் காசோலை களில் கையொப்பம் இடாது தவிர்த்துவிடுங்கள். அதி உச்சக் கவனத்தை செய்தொழிலில் வைத்துவிடுங்கள். குடும்பத்தில் ஏற்பட்ட சந்தேகம் சந்தோஷத்தைக் கெடுத்துவிடலாம். பிணைக்கும், துணைக்கும் செல்ல வேண்டாம். தெய்வ நம்பிக்கை மூலம் காரிய சித்திகள் ஏற்படும். மடிக்கணினி மூலம் கன்னியர் ஏற்ற வரன்களைத் தேட முற்படுதல். பெற்றோர் நிச்சயித்தவரையே மணம் முடிக்க நிர்ப்பந்தம் ஏற்படும். கலப்படப் பொருட்களில் எச்சரிக்கை தேவை.



**மகரம் :** இலாபச்சனியும் ஏழில் குருவும் இருப்பதால் ஈடுபடும் நிகழ்வுகளில் முத்திரை யைப் பொறிப்பீர்கள். குழந்தைப் பாக்கியமுண்டு. பயணம் எதிர்பார்த்த இலக்கைத் தந்து விடும். கொடுத்த கடன் தெய்வ செயலாக வந்துவிடும். தேடிவருகின்ற அதிர்ஷ்டத் தைப் பற்றிப்பிடியுங்கள். புதிய ஒப்பந்தம் இலாபமீட்டும். விபத்துப் பற்றி விழிப்பாக இருங்கள். பதவிகள் தேடிவரும். மனையாளுடன் ஏற்பட்ட முரண்பாடு நீங்கிவிடும். மக்களின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் யோகமுண்டு. அதிர்ஷ்ட இலாபச் சீட்டு பணத்தை அள்ளித்தரும். அரசதுறையில் தொழில்கிட்டும்.



**கும்பம் :** எதிர்பாராத நிகழ்வுகளால் மனம் சங்கடப்படும். பத்தில் சனி இருப்பதால் செய் தொழிலில் நட்ட நிலை ஏற்படலாம். போட்டா போட்டியால் அயல் உறவுகள் பாதிக் கப்படும். திருடரின் கன்னக் கோலில் விழிப்பாக இருங்கள். பழையதை மெருகூட்டி தலை மேல் கட்டியடிக்கலாம். பணமுடையால் விவாகம் இழுபடும். கைவஞ்சத்தால் தொழிலுக்கு ஆப்புவைப்பார்கள். டெங்கு நோய்த் தாக்கம் ஏற்படலாம். கௌரவக் குறைவால் நிகழ்ச்சி களைப் புறக்கணித்தல், பேஸ் புத்தகத்தால் மானங்கப்பலேறலாம். தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய அதிரடி முடிவு மேற்கொள்ளல், புண்கள் மாறாது சிரமப்படுத்தும்.



**மீனம் :** அட்டமத்துச் சனி விலகியது நொந்த உள்ளத்துக்கு ஆறுதலாகும். காணாமல் போனவர் பற்றிய தகவல் கசியும். சளி நோய் குணமடைதல். பதவியேற்றம் அதிகாரிகளின் கருணையால் தக்கவைக்கும். வெளியூர்ப்பயணத்தில் தடம்பதிக்கலாம். கடனை அடைக்க நண்பரின் கருணை கிட்டும். விழாக்களில் கலந்து சிறப்பித்தல், பெற்றோரின் முரண்பாடு தீர்க்க பிள்ளைகள் நடுவராகச் செயற்படல், விவாகம் அந்த மாதிரி கைகூடும். வெளியீடுகளில் ஆர்வங்காட்டுதல், முதியோர் தனித்திருக்கவேண்டாம். ஆசிரிய, மாணவ உறவு சிறப்பாக இருக்கும்.

# ஜாதக பொருத்தங்களின் முக்கியத்துவம்!



பல இந்து திருமணங்களில் பின்பற்றப் படும் முதல் படியே, மணப்பெண்ணுக்கும் மணமகனுக்கும் ஜாதக பொருத்தம் பார்ப்பது தான். எந்த ஒரு பிரச்சினையுமின்றி இரண்டு பேர்களின் ஜாதகமும் பொருந்திவிட்டால், அந்த தம்பதியினர் சந்தோஷமான திருமண வாழ்க்கையை வாழ்ந்திடுவார்கள் என நம்பப்படுகிறது. ஜாதக பொருத்தம் பார்க்கும் சடங்கை பல பேர் நம்பி வந்தாலும்கூட, இந்த செயல் முறைக்கு பின்னணியில் இருக்கும் சரியான காரணத்தைப் பற்றி பலருக்கும் தெரிவதில்லை. அதனால் நாங்கள் சில ஜோசியக்காரர்களை சந்தித்து, இதனைப் பற்றி விரிவாக விளக்கவும், திருமணங்களில் ஜாதகங்களின் உண்மையான முக்கியத்துவத்தைப் பற்றியும் கேட்டுக்கொண்டோம். அதன் முக்கியத்துவத்தை சொன்னதோடு நிற்காமல், ஜாதக பொருத்தம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அவர்கள் கூறினார்கள்.

**ஜாதக பொருத்தம் ஏன் பார்க்கப்படுகிறது ?**

கிரகங்கள் சுழற்சியின் கண்ணோட்டத்தில் இருந்தே ஜோசியக்காரர்கள் ஜாதகத்தை பார்க்கின்றனர். கிரகங்களின் சுழற்சியை பொறுத்தே ஒவ்வொருவருடைய தனிப்பட்ட ஆளுமை அமையும் என அவர்கள் கூறுகிறார்கள். தம்பதிகள் ஒன்றாக வாழப்போவதால், அவர்களின் நட்சத்திரங்களும், கிரகங்களும் தங்களுடைய செல்வாக்கை தங்கள் துணையின் விதி மீதும் செலுத்தும். அதனால் இரண்டு பேர்களின் நட்சத்திர பொருத்தங்களை ஜோசியக்காரர்கள் சரிபார்ப்பார்கள். இதுப்போக, இருவருடைய குணங்களுக்கு இடையே பொருத்தம் இருக்குமா என்பதையும் ஜாதகத்தைப் பார்த்து கூறிவிடுவார்கள்.

தம்பதிகள் இருவரும் சந்தோஷமான மற்றும் நிம்மதியான வாழ்க்கையை வாழவேண்டும் என்ற காரணத்தினாலேயே அவர்களின் ஜாதக பொருத்தம் பார்க்கப்படுகிறது. உங்கள் திருமணம் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமானால், ஜாதக பொருத்தம் பார்க்க வேண்டிய முக்கியத்துவம் கண்டிப்பாக உங்கள் வாழ்க்கைக்கு தேவைப்படும். அதற்கு காரணம், ஒருவருடைய தன்மையை அவருடைய ஜாதகத்தை வைத்து கணித்துவிடலாம். உங்கள் துணை அந்த திருமணத்தில் நேர்மையானவராக இருப்பாரா; உங்கள் இருவருக்கும் இடையேயான உறவுமுறை எப்படி அமையும்; உங்கள் மாமியாருடனான உறவு எப்படி இருக்கும் போன்றவற்றை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். மிக முக்கியமாக உங்கள் செக்ஸ் வாழ்க்கையைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம், அதில் எந்தளவுக்கு

நீங்கள் திருப்தியடைவீர்கள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இவையெல்லாம் முன்பே தெரிந்துகொண்டால், சந்தோஷமான திருமண வாழ்க்கையை உங்களால் பெற முடியும்.

**ஜாதகத்தில் உள்ள குணங்கள்:** ஜாதக பொருத்தம் பார்க்கும்போது, குணங்கள் என அழைக்கப்படும் 8 புள்ளிகள் கருத்தில்கொள்ளப் படும். ஒவ்வொரு குணங்களுக்கும் குறிப்பிட்ட மதிப்பு உள்ளது. இந்த 8 குணங்களின் கூட்டு தொகை 36 ஆக வரும். ஒரு தம்பதி சந்தோஷ மாக இணைந்து வாழ்ந்திட குறைந்தது 18 புள்ளிகளாவது பொருந்தியிருக்க வேண்டும். ஒரு வேளை, பொருந்திய புள்ளிகள் 27-க்கு மேலாக இருந்தால், அது தான் சிறந்த பொருத்தமாக இருக்கும். ஒரு வேளை, 18 புள்ளிகளுக்கு குறைவான பொருத்தம் இருந்தால், அந்த திருமணம் நடக்க அறிவுறுத்தப்படமாட்டாது.

அவ் எட்டு குணங்களும் வர்ணா வஷ்யா தாரா யோனி க்ரஹ மைத்ரி கன் பகூட் நாடி என்று அழைக்கப்படுகின்றது. இதுபோக, மாங்கல்ய தோஷம் (செவ்வாய் கிரகத்தின் தீய தாக்கங்கள்), கால சர்ப்ப தோஷம் (அனைத்து கிரகங்களும் ராகு மற்றும் கேதுவிற்கு நடுவே இருக்கும்) போன்றவைகளையும் சரியாக கவனிக்க வேண்டும். அப்போது தான் சந்தோஷமான சம்பந்தம் ஏற்பட்டு வெற்றி கரமான திருமணம் முடியும்.''

காதல் திருமணங்கள் அதிகரித்து வரும் இன்றைய காலகட்டத்தில், பல இளைஞர்கள் ஜாதக பொருத்தத்தின் மீதெல்லாம் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றனர். ஜாதக பொருத்தத் தின் முக்கியத்துவத்தை கருதியும், அதன் மீது நம் பெரியவர்கள் வைத்துள்ள திடமான நம்பிக்கையினாலும், நம் மனதில் வரும் ஒரே கேள்வி ''நம் வாழ்க்கையில் ஜாதக பொருத் தத்தை நம்ப வேண்டுமா?'' ஜோசிய வல்லு னர்களின் கருத்துப்படி, ''வாழ்க்கையில் மிக முக்கியமானது நல்ல மனிதனாக இருப்பது. தனிப்பட்ட முயற்சி, நேர்மை, அனுசரிப்பு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை மற்றும் ஈகோவை விட்டெறிதல் போன்றவைகள் உங்கள் திருமணத்தை வெற்றியடையச் செய்யும். ஜோசியக்காரர்களான எங்களால் உங்களுக்கு அறிவுரை மட்டுமே வழங்க முடியும். அதனை நீங்கள் நம்புவதோ, பின்பற்றுவதோ உங்களை பொருத்ததாகும். ஜாதக பொறுத்தம் மேற்கொள்ளப்படுவது, முன்கூட்டியே அந்த தம்பதிகள் சந்திக்க போகும் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வ தற்கே.'' திருமணம் என்பது முடிவு பெறாத பந்தமாகும். அதில் கணவனும் மனைவியும் சந்தோஷமாக வாழவே ஆசைப்படுவார்கள். அது நடப்பதற்கு ஜோசியம் சிறந்த முறை யில் கைகொடுக்கிறது.

**பொருத்தமில்லாத ஜாதகங்களுக்கு தீர்வுகள்:** ஒரு திருமணம் வெற்றியடை வதற்கு அனைத்து கிரகங்களும், ஜாதகமும் முக்கிய பங்கை வகிக்கிறது. அதனால் ஜாதக பொருத்தம் இல்லையென்றால், அனுப வப்பட்ட ஜோசியக்காரரை சந்தித்து கலந்தா லோசிப்பது பரிந்துரைக்கப்படுகிறது. அவர்கள் தோஷங்களுக்கு பரிகாரங்களை அளிப்பார்கள். அதனால் இரு நபர்களின் ஜாதகம் பொருந்தவில்லை என்றாலும் கூட அவர்களின் திருமணம் நடக்க ஜோதிடம் வழிவகுக்கும்.

ஜாதக பொருத்தம் எல்லாம் சிறப்பாக இருந்தாலும் கூட, ஒரு திருமணம் வெற்றி யடைவது, 70% மனிதர்களின் கையில்தான் உள்ளது. ஒவ்வொரு தம்பதிகளும் இஷ்ட தெய்வங்கள் படம் போட்ட டாலரை அணிந்துகொள்ளுதல் நல்லது. திருமண நாளின்போது மணமகனோ அல்லது மணமகளோ அல்லது நெருங்கிய உறவினர் களோ கறுப்பு நிறத்திலோ அல்லது பழுப்பு நிறத்திலோ ஆடை அணியாத மாதிரி பார்த்துக்கொள்ளுங்கள். மணப்பெண் சிகப்பு அல்லது பிங்க் நிற ஆடையை அணிந்து கொள்ளலாம். அதற்கு காரணம், அந்த நிறங்கள் திருமண வாழ்க்கையில் அதிர்ஷ் டத்தை உண்டாக்கும். ஏதேனும் பிரச்சி னையை சந்தித்தால், நீங்கள் இஷ்ட தெய்வங் களை வழிபட வேண்டும். அவர் உங்கள் வாழ்க்கையில் அனைத்து கட்டத்திலும் உங்களுக்கு கைக்கொடுப்பார். ▲

ஊட்டியில் அரசியல் கட்சிகளுக்கு ஆட்கள் சேர்த்துவிடும் வேலையை செய்துவருகிறார் விஷால். இதே ஊரில் உள்ள கல்லூரியில் படித்து வரும் ஹன்சிகாவை பார்த்தவுடன் காதல் வயப்படுகிறார். விஷாலுக்கு போட்டியாக இன்ஸ்பெக்டரான சந்தானம், ஹன்சிகாவை காதலிக்கிறார். இதனால்தான் விஷால், ஹன்சிகா காதலில் பிரிவு ஏற்படும் வேளையில் தனது அம்மா, அப்பாவுடன் சண்டையிட்டுக்கொண்டு பிரிந்து வாழும் செய்தியை கேள்விப்படுகிறார். இதன்பிறகு தன் அப்பாவை தேடி மதுரைக்கு செல்கிறார் விஷால். தன் தந்தையை சந்திக்கும் விஷால், அவருடன் தன் தம்பிகளான வைபவும், சதீஷும் சேர்கிறார்கள். அதன்பின் சொத்துக்களையும் மீட்டு, பிரிந்த குடும்பத்தையும் ஒன்றுசேர்க்க தமது அத்தை மகள்களைக் காதலித்து திருமணம் செய்ய தீர்மானிக்கிறார்கள்.

இறுதியில் விஷாலும் தம்பியர் இருவரும் தன் அத்தை மகள்களை காதலித்து திருமணம் செய்தார்களா? குடும்பம் ஒன்று சேர்ந்ததா? என்பதே மீதிக்கதை.

படத்தில் வழக்கமான விஷாலையே பார்க்க முடிகிறது. சண்டை மற்றும் காதல் காட்சிகளில் சிறப்பாக நடித்திருந்தாலும் நகைச்சுவை படம் என்பதால் நகைச்சுவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். படம் முழுக்க கவர்ச்சியால் ரசிகர்களை கவர்கிறார் ஹன்சிகா. பாடல் காட்சிகளிலும் தாராளம் காண்பித்திருக்கிறார்.




சந்தானம், படத்திற்கு தூணாக நின்று நகைச்சுவையில் களைகட்டுகிறார். இவர் இல்லாத இடைவெளியில் சதீஷின் நகைச்சுவை கைகொடுக்கிறது. பிரபு, வைபவ், ஸ்ரீமன் ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

அத்தைகளாக வரும் ரம்யா கிருஷ்ணன், கிரண், ஐஸ்வர்யா இவர்களுக்கு மகள்களாக வரும் மதுரிமா, மாதவி ஆகியோர் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இதில் ரம்யா கிருஷ்ணன் நடிப்பில் நீலாம்பரி சாயல் தெரிகிறது.

இயக்குனர் சுந்தர்.சி அவருக்கே உரிய பாணியில் வழக்கமான குடும்பபாங்கான படத்தை இயக்கியிருக்கிறார். நகைச்சுவையில் சிறிதளவும் ரசிகர்களை ஏமாற்றாமல் திருப்திபடுத்தியிருக்கிறார் என்றே சொல்லலாம். விஷால் படம் என்பதால் சண்டைக் காட்சிகளில் கார்கள் பறப்பது போன்ற காட்சிகளை வைத்திருக்கிறார். முந்தைய படத்தில் திகில் கலந்த நகைச்சுவை படத்தை கொடுத்த சுந்தர்.சி, இப்படத்தில் சண்டைக்காட்சிகள் கலந்த நகைச்சுவைப் படமாக உருவாக்கியிருக்கிறார். ▲

நட்சத்திர ஜோக்

# ஐந்து முட்டாள்கள்!



நாட்டை ஆண்டுகொண்டிருந்த மன்னருக்குத் திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. உடனடியாக அமைச்சரை வரவழைத்தார்.

''நான் இந்த நாட்டை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன், ஆனால், இந்த நாட்டிலும் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா?''

''ஆம் மன்னா!''

''அப்படியானால் அவர்களில் முதல் ஐந்து முட்டாள்கள் யார்?? அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டிக்கொண்டு வருவது உம் பொறுப்பு'' என்றார்.

அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை, புத்திசாலியைக் கொண்டுவரச் சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றியாளரைக் கொண்டு வரலாம். முட்டாளைக் கொண்டுவரச் சொன்னால்?? என்ன செய்வது சொன்னது மன்னராயிற்றே, சரி மன்னா என்று ஒத்துக்கொண்டார்.

ஒரு மாதம் நாடு முழுவதும் பயணம் செய்து இரண்டுபேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மன்னர், ''அமைச்சரே உமக்குக் கணிதம் மறந்து விட்டதோ?''

''இல்லை மன்னா! முதலில் நடந்ததை விளக்க அனுமதிக்க வேண்டும்!'' என்றார் அமைச்சர்.

தொடரும் என்றார் மன்னர்.

''மன்னா! நான் நாடு முழுவதும் சுற்றும்போது, இவன் மாட்டு வண்டியின்மேல் அமர்ந்துகொண்டு தன் துணி மூட்டையைத் தலைமேல் வைத்து, பயணம் செய்து கொண்டிருந்தான், ஏன் அவ்வாறு செய்கிறாய்? எனக் கேட்டதற்கு என்னைச் சுமந்து செல்லும் மாடுகளுக்கு வலிக்கக்கூடாதல்லவா? அதற்குத்தான் என்றான் - இவன்தான் நம் நாட்டின் ஐந்தாவது மிகப் பெரிய முட்டாள்.'' என்றார் அமைச்சர்.

சரி அடுத்து

''இதோ இவன் தன் வீட்டுக் கூரை மேல் வளர்ந்த புல்லை மேய்க்க, எருமையைக் கூரைமேல் இழுத்துக் கொண்டிருந்தான், இவன்தான் நம் நாட்டின் நான்காவது மிகப் பெரிய முட்டாள்.''

களிப்படைந்தோம் அமைச்சரே! களிப்படைந்தோம்! சரி, எங்கே அடுத்த முட்டாள்?

''அரசவையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும் போது, அதையெல்லாம் விட்டுவிட்டு முட்டாள்களைத் தேடி, கடந்த ஒரு மாதமாய் அலைந்துகொண்டிருந்த நான் தான் மூன்றாவது முட்டாள்'' என்றான்.

மன்னருக்குச் சிரிப்பு தாங்கவில்லை, விழுந்து விழுந்து சிரித்தார். பின்னர் அடுத்தது என்றார்.

''நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது அதைக் கவனிக்காமல் முட்டாள்களைத் தேடிக் கொண்டிருக்கும் நீங்கள்தான் இரண்டாவது'' என்றார் அமைச்சர்.

ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவும் பேசவில்லை.

''உமது கருத்திலும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான்'' என ஒத்துக் கொண்டார் மன்னர்.

''சரி, எங்கே முதலாவது முட்டாள்?''

அமைச்சர் சொன்னார். மன்னா! அலுவலகத்திலும், வீட்டிலும் எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் அதையெல்லாம் விட்டுவிட்டு இந்த மொக்கையான கதைக்கு வந்து நாட்டின் மிகப் பெரிய முட்டாள் யாரென்று தேடிக் படித்துகொண்டிருக்கிறாரே இவர்தான் அந்த முதல் முட்டாள்!

ஆத்தீ, கடைசியில் நம்மளையே முட்டாளாக்கிட்டாங்களே!!!



# கடல் கொள்ளையர்கள்

## இது கடலை ஆள்பவர்களின் கதை

### வரலாறு - 02

பணயக் கைதியோடு தப்பிக்க முயன்ற கொள்ளையர்களது படகை மடக்கியும் விட்டது பெயின்ஸ் பிரிட்ஜ் போர்க் கப்பல். ஆனால், அவர்களை நெருங்குவது அத்தனை சுலபமானதாக இல்லை. தங்களைக் கைது செய்ய முயன்றால், கேப்டனைக் கொன்று விடுவோம் என்று கொள்ளையர்கள் மிரட்டி னார்கள்.

மூன்று நாட்கள் கொள்ளையர்களை அந்தப் பக்கம், இந்தப் பக்கம் நகரவிடாமல் மடக்கிவைத்திருந்தது போர்க் கப்பல். கொள்ளையர் படகில் பெட்ரோல் தீர்ந்து போயிருந்தது. அதை பெயின்ஸ் பிரிட்ஜ் கயிறுகட்டி இழுத்தபடி சுற்றிவந்தது. அதே சமயம், கொள்ளையர் படகை விமானியில் லாத தானியங்கி விமானங்கள் மூலமாக அமெரிக்க கடற்படை இடைவிடாது கண் காணித்து வந்தது.

கேப்டனை விடுவிக்க, கொள்ளையர் களிடம் அமெரிக்க அதிகாரிகள் பேச்சு நடத்தி னர். கொள்ளையர்கள் முப்பது இலட்சம் அமெரிக்க டொலர்கள் (சுமார் பதினைந்து கோடி ரூபா) பணயத் தொகையாகக் கேட்டார்கள்.

இந்தப் பேச்சுகள் நடந்துகொண்டிருந்த போதே கொள்ளைச் சம்பவத்தைப் பற்றிய செய்தி பன்னாட்டு தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உலக மக்களின் பார்வை இந்தி யப் பெருடங்கடலில் மிதந்த அந்தச் சிறிய கொள்ளையர் படகை நோக்கித் திரும்பியது.

நாலு நாட்கள் ஆகியும் கொள்ளையர் களுக்கும், அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சில் எந்த முன்னேற்ற மும் இல்லை. கேப்டனின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டால், கொள்ளையர்களை சுட்டுக்கொன்றாவது கேப்டனைக் காப்பாற் றும்படி அமெரிக்கா அதிபர் உத்தரவிட்டார். அமெரிக்க கப்பல் படையின் கமாண்டோ வீரர்கள் கொள்ளையர் படகைத் தாக்கத் தயாரானார்கள்.

ஏப்ரல் 12ஆம் திகதி இரவு கொள்ளையர் படகைக் கண்காணித்துக்கொண்டிருந்த அமெரிக்க கமாண்டோ துப்பாக்கி வீரர்கள் (snipers) கொள்ளையர்களது நடவடிக்கை யில் மாற்றங்கள் இருந்ததைக் கண்டனர். நாலு நாட்கள் தொடர்ந்து கடலில் இருந்ததால்

கொள்ளையர்கள் சோர்வடைந்தது நன்றாகத் தெரிந்தது.

இந்த இழுபறிநிலை மேலும் நீடித்தால் கொள்ளையர்கள் கேப்டனைக் கொலை செய்துவிடுவார்கள் என்பதும் தெரிந்தது. கொள்ளையரைக் கொல்ல உத்தரவிடப் பட்டது. கணநேரத்துக்குள் மூன்று கொள் ளையர்களின் தலைகள் வெடித்துச் சிதறின. நான்காவது கொள்ளையன் குண்டடிபட்டு உயிர்தப்பினான். கேப்டன் ஃபிலிப்ஸ் காப் பாற்றப்பட்டார்.

நான்கு நாட்களாக நடந்துவந்த கடத்தல் நாடகம் ஒருவழியாக முடிவுக்கு வந்தது. பிடிபட்ட கொள்ளையனுக்கு பதினெட்டு வயதுகூட ஆகவில்லை. இந்தச் சின்னப் பையன்தான், ஒரு பரபரப்பான கடத்தலுக்குக் காரணம் என்பதை யாராலும் நம்பமுடிய வில்லை.

> கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே கடல் கொள்ளையர்கள் தோன்றிவிட்டார்கள். இவர்கள் வீழ்த்தாத கப்பலில்லை; எதிர் கொள்ளாத இராணுவம் இல்லை.

இது போல பல கொள்ளைச் சம்பவங்கள் இன்றும் சோமலியாவின் கடற்கரையோரமாக நடந்துகொண்டிருக்கின்றன. தாக்கப்பட்ட கப்பல்கள், கடத்தப்பட்ட மாலுமிகள் பற்றிய செய்திகள் நாள்தோறும் செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சி களிலும் வந்துகொண்டிருக்கின்றன.

யார் இவர்கள்? எங்கிருந்து வந்தார்கள்? இப்போதுதான் கடல் கொள்ளையர்களின் அட்டகாசம் ஆரம்பித்திருக்கிறதா? இல்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர் கள் தோன்றிவிட்டனர். உலகெங்கும் அவர் களால் பாதிக்கப்படாத நாடோ, நாகரிகமோ இருந்ததில்லை என்றுகூடச் சொல்லலாம்.

கடல் கொள்ளையர்கள் எப்படி உருவா னார்கள்? அவர்களை எதிர்கொள்ள சமூகம் என்ன செய்தது?... இப்படி எத்தனையோ கேள்விகளும், அதற்கான பதில்களும் சுவரசியமானது.

கடலில் கப்பல் போகத் தொடங்கிய காலத் திலேயே கடல் கொள்ளையும் தொடங்கி விட்டது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு பல நாகரீகங்களால் தழைத்து செழித்திருந்த பண்டைய தேசங்கள் கூட கடல் கொள்ளை யரால் பாதிக்கப்பட்டிருந்தது.

எகிப்தில் கொள்ளையர்கள் தாக்குதல் பற்றிய முதல் செய்தி கி.மு 1350 - இல் பேரரசர் அக்னாடென் ஆட்சிக்காலத்தில் களிமண் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கடல் மக்கள்' (Sea people) என்று எகிப்து அதி காரிகளால் அழைக்கப்பட்ட இக்கொள்ளை யர்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் ஒரு புதிய கூட்டமைப்பை உருவாக்கி அருகி லுள்ள நாடுகளை தாக்கத் தொடங்கினர்.

இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று இன்னும் வரலாற்றாளர்களால் உறுதியாகக் கூற முடியவில்லை. அடுத்த இருநூறு ஆண்டுகளுக்கு எகிப்து, கிரேக்கம், ஹிட்டைட், மைசீனியா, மிட்டானி ஆகிய தேசங்கள் இவர்களது தாக்குதலுக்கு உள்ளானது.

இவற்றில் பல அவர்களது அதிரடித்தாக்கு தலை தாங்க இயலாமல் நிலைகுலைந்து போயினர். ஏனென்றால், இவர்கள் கப்பல் களைக் கொள்ளையடிப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. நாடுகள் மீது படையெடுத்து நகரங்களையும் தாக்கத் தொடங்கினர்.

வரலாற்றில் பல வெண்கலக் கால நாகரீ கங்கள் அழிய இந்தக் கடற்கொள்ளையர்களின் படையெடுப்புக்களே காரணம் என்று வரலாற்றாளர்கள் கருதுகிறார்கள். அப்படி வீழ்த்தப்பட்ட பேரரசுகளுள் மிகப்பெரிய சாம்ராஜ்ஜியங்களான ஹிட்டைட், மைசீனியா, மிட்டானி ஆகியவை அடக்கம்.

(தொடரும்...)

# ஜூலியா பட்டர்ஃப்ளை ஹில்

உலகில் எத்தனையோ போராட்டங்களைப் பார்த்திருக்கிறோம். அவற்றில் ஜூலியா பட்டர்ஃப்ளை ஹில் நடத்திய போராட்டம் மிகவும் வித்தியாசமானது. அவர் போராடியது அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியச் செம்மரங்களுக்காக! லூனா என்ற மரத்தின் மீது 738 நாட்கள் தங்கி, நீண்ட போராட்டத்தை நடத்தினார்!

உலகிலேயே மிக உயரமான, மிக அதிக காலம் வாழக்கூடியவை செம்மரங்கள். அமெரிக்காவின் கலிஃபோர்னிய காடுகளில் இருந்த 97 சதவீத செம்மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 3 சதவீத மரங்களைக் காப்பாற்றுவதற்காக இயற்கை ஆர்வலர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள். சில நாட்கள், சில வாரங்கள் மரங்களில் அமர்ந்து புதுமையாகப் போராடினார்கள்.

ஆயிரம் ஆண்டுகளை எட்டிய செம்மரங்களை ''பசிபக் லம்பர்'' என்ற கம்பெனி வெட்டிக்கொண்டிருந்தது. அதை எதிர்த்து நடைபெற்ற போராட்டம் ஜூலியாவை மிகவும் உத்வேகப்படுத்தியது. 1997, அக்டோபர் மாத முழு பவுர்ணமி நாளில் ஆயிரம் வயது செம்மரத்தைத் தேர்ந்தெடுத்து, லூனா என்று பெயரிட்டார் ஜூலியா. நள்ளிரவில் அம்மரத்தின் உச்சியை அடைந்தவர், ஒரு சிறிய கூடாரத்தை அமைத்ததுடன் மரங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வரை தான் இறங்கப்போவதில்லை என்று உறுதியாகச் சொல்லிவிட்டார் ஜூலியா.

அடுப்பு, சோலார் விளக்கு, போன், காகிதங்கள், பேனா, வாளி வைத்துக்கொண்டார். உயிர் வாழத் தேவையான அளவுக்குக் குறைவான உணவுகளைச் சாப்பிட்டார். கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தினார். மழை வரும்போது தண்ணீரைப் பிடித்துக் கொண்டார். ஸ்லீபிங் பேக் உள்ளே சென்று தூங்கினார்.



ஆரம்பத்தில் ''பசிபக் லம்பர்'' கம்பெனி ஜூலியாவைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. தனியாக ஒரு பெண்ணால் காட்டில் வாழ முடியாது என்று நினைத்தது. நாட்கள் செல்லச் செல்ல ஏமாற்றம் அடைந்தது. ஜூலியாவுக்குப் பல வகைகளில் தொல்லைகொடுத்தது. மிரட்டிப் பார்த்தது. எதுவும் ஜூலியாவின் உறுதியைச் சற்றும் தளர்த்தவில்லை. இரண்டு ஆண்டுகளைக் கடந்த பிறகு ஜூலியாவின் போராட்டம் தேசிய அளவில் பேசப்பட்டது. செய்தித்தாள்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் ஜூலியாவும் லூனாவும் முக்கியச் செய்தியாக மாறினார்கள்.


பசிபக் லம்பர் கம்பெனிக்கு வேறு வழியில்லை. ஜூலியாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அனுமதியின்றி எந்தவகை மரத்தையும் வெட்டுவதில்லை, செம்மரங்களுக்குத் தங்களால் ஆபத்து நேராது, லூனா மரத்துக்குத் தனிப் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று ஒப்பந்தம் கையெழுத்தானது.

738 நாட்களுக்குப் பிறகு பூமியில் கால் பதித்தார் ஜூலியா. கடினமான போராட்டக் குணம் கைவந்தது எப்படி என்று கேட்கிறவர்களுக்கு, போராட்டம் கடினமானதுதான்; அந்தப் போராட்டத்தால் கிடைக்கும் பலன் அற்புதமானது. இன்று செம்மரங்களைப் பார்க்கும்போது வரும் சந்தோஷத்துக்கு இணை ஏதுமில்லை!'' என்கிறார் ஜூலியா பட்டர்ஃப்ளை. எமது நாட்டில் இடம்பெற்று வருகின்ற காடுகளின் அழிவைத் தடுக்க ஒரு ஜூலியா பட்டர்ஃப்ளை ஹில் வருவாரா? ▲


# பாடசாலைச் சீருடை


**(4 - 8 வயதுடைய சிறுவர்களுக்கு)**

முற்காலத்தில் எத்தனை வயது சென்றாலும் அம்மா தைக்கும் மேலங்கி (Shirt) ஐ ஆண்கள் போடுவார்கள். ஆனால், இன்றைய காலத்தில் 8 வயதுக்கு உட்பட்டவர்கள் தான் போடுவார்கள். ஆனால், பாடசாலை செல்லும் மாணவர்கள் white shirt தான் போட வேண்டும். இதனால் சிலர் பொருளாதார நிலை காரணமாக வீடுகளில் தைத்து போடுகிறார்கள். இதனையே இப்போது பார்ப்போம்.




முன் பக்கத்துக்கு பொத்தான் (L)
முன் பக்கத்துக்கு Holeம் தைக்க வேண்டும் (L)




தோள் மூட்டு - 4''

தோள் இடுப்பு - 22'' + 6 = 28/4 = 7

மார்பளவு - 24'' + 4 = 28/4 = 7

தோளில் இருந்து தோள் - 12''

shirt நீளம் - 21''

கை நீளம் - 6''

கைக்குடைவு - 12'' + 2 = 14/2 = 7

கீழ் கைச் சுற்றளவு - 13'' + 2 = 15/2 = 7.5

முன் கழுத்து - 3''

பின் கழுத்து - 2''

இந்த அளவைக் கொண்டு சதுரபெட்டி வரைந்து அடையாளமிட்டு Block ஐ வரைந்து வெட்டி துணியில் வைத்து வெட்டி தைக்க வேண்டும். shirt தைக்கும் போது நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்ன வெனில், துணியை பொருத்தும்போது இரண்டையும் சேர்த்து தைக்கவேண்டும். தைத்த பின் அந்த தைத்த துணியை மடித்து மெல்லியதாக தைக்கவேண்டும்.

எங்கெங்கே தைக்கின்றோமோ அங்கங்கே ஒழுங்காக தைக்கவேண்டும். shirt தைக்கும்போது தைத்த துணி வெளியில் தெரியக் கூடாது. கை வடிவாக வெட்டி அழகாக தைக்கவேண்டும். நீளமான கை, கட்டையான கை என்று இரு விதமாக shirt உள்ளது. இதில் கட்டைக்கையைப் பற்றிதான் குறிப்பிட்டுள்ளேன். ▲



# மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி


## போட்டி இல.13

முன்பள்ளி மாணவர்களுக்கு மட்டும்

பெயர் : ........................................................ தரம் :.......

முகவரி : ..........................................................................

தொலைபேசி இல : ..................................................................



அனுசரணை
COLORCRAFT LANKA (Pvt)
#119, BANKSHALL, COLOMBO 11.

**முக்கிய குறிப்பு :** இப்போட்டியில் நாடளாவியரீதியில் 12 முன்பள்ளி சிறார்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய பரிசில்கள் உரிய முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

**ஆசிரியர் உறுதிப்படுத்தல்**

இவ் ஓவியத்திற்கு இம் மாணவர் சுயமாக வர்ணம் தீட்டினார் என்பதை உறுதிசெய்கிறேன்.

-----------------------------

(ஆசிரியர் ஒப்பம்)

## போட்டி 10 இல் வெற்றி பெற்ற பாராட்டுக்குரியவர்கள்

| முன்பள்ளி | தரம் - 01 | தரம் - 02 | தரம் - 03 |
|---|---|---|---|
| **01 ஆம் இடம்**<br>**ச.கவிப்பிரியா**<br>நோர்வுட்<br>ஹற்றன். | **01 ஆம் இடம்**<br>**ஏ.வி.எம்.உமைர்**<br>209, கல்பொக்கை,<br>வெலிகாமம். | **01 ஆம் இடம்**<br>**எம்.ஐ.சரா**<br>85, மல்கமன்தேனியா<br>அலவத்தகொட. | **01 ஆம் இடம்**<br>**இ.டெனிஸியா**<br>20/1 பீச் ரோட்,<br>ஈச்சமோட்டை. |
| **02 ஆம் இடம்**<br>**எம்.கவின்**<br>பள்ளிவாசல் வீதி,<br>பொத்துவில். | **02 ஆம் இடம்**<br>**பி.ஆர்மிதன்**<br>கரணவாய் வடக்கு,<br>கரவெட்டி, நவிண்டில். | **02 ஆம் இடம்**<br>**சா.கிருத்திகா**<br>V.C லேன், நீதிமன்ற வீதி,<br>மல்லாகம். | **02 ஆம் இடம்**<br>**ந.தக்சாயினி**<br>67B டச்சு வீதி,<br>உடுவில். |
| **03 ஆம் இடம்**<br>**ஏ.எம்.பாத்திமா ரிஷ்னா**<br>கற்பிட்டி புத்தளம். | **03 ஆம் இடம்**<br>**ஹரிஸ் தியாகராஜா**<br>காக்கை தீவு,<br>கொழும்பு-15. | **03 ஆம் இடம்**<br>**மகேந்திரம் அபிவாசினி**<br>யா/கோப்பாய், நாவலர் பாடசாலை. | **03 ஆம் இடம்**<br>**ஏ.எம்.எச்.ரிஸ்வான்**<br>அலுத்கம் வீதிய,<br>தர்காநகர். |

# நம்புங்கள் நிழலை அல்ல நிஜத்தை!

இலத்திரனியல்துறையின் வளர்ச்சி எமது வாழ்வில் எத்தனையோ மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன. அது வாழ்வியலையும் அது சார்ந்த அனுபவங்களையும் இலகுவாக்கினாலும்கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் இவை வாழ்வியல் சம்பவங்களை இல்லாமல் செய்துவிடுகின்றன. இயற்கையின் அழகுகளையும், சமூகத்தின் மாற்றங்களையும், சுற்றியிருக்கும் சூழலின் நிஜத்தையும் புரியவைக்காமல் செய்துவிடுகின்றன. கைத்தொலைபேசியினது அதனோடு ஹாம் இணைத்த கமராவின் கையடக்கமும் எமது வாழ்வின் நிஜங்களைத் தொலைப்பதற்கு காரணமாக அமைந்துவிட்டதுதான் முகத்தில் அறையவைக்கின்ற உண்மைகள்.

மேற்கு நாடுகளில் வேகமாகப் பரவிவருகின்ற செல்ஃவி எனப்படுகின்ற தங்களைத் தாங்களே புகைப்படம் எடுத்துக் கொள்கின்ற கலாசாரம் இளைய தலைமுறையை பைத்தியமாக்கி பாடா படுத்தியெடுக்கின்றது. இந்தக் கலாசாரம் எமது நாடுகளையும் சீரழித்துவருகின்றது என எண்ணத்தோன்றும் அளவுக்கு புகைப்பட மோகம் வியாபித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் காலி முகத்திடலில் நடைபெற்ற சம்பமொன்று பார்ப்பவர்களை முகம்சுழிக்க வைத்தது. புனித பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது ஓர் இளைஞர் அவருக்கு கைலாகு கொடுப்பதற்காக காலி முகத்திடல் கட்டுக்காவல்களையும் மீறி அவரை அணுகிச் சென்று பல தடவைகள் முயற்சித்த பின்னர் பாப்பரசருக்கு கைலாகு கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அவர் தன் கமராவுக்குள் அடக்கிவிட வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டினாரே தவிர, அந்த மதப்பெரியாருக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டுமென எண்ணவில்லை. அதேபோலத்தான் இந்து ஆலயங்களில்கூட சுவாமி தரிசனத்தின்போது இறைவனை வழிபடுவதில் இருக்கும் அக்கறையைவிட கமராவுக்குள் அடக்கிவிடுவதை பலரும் அக்கறை காட்டுகின்றனர்.

இதைவிட வேடிக்கை என்னவென்றால், மரண அவஸ்தையின்போதுகூட படமெடுத்துக் காட்டுவதில் அக்கறை காட்டுகின்றனரே என்றார். அண்மையில் ஒரு தாய்க்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. ஒரு பெண்ணின் பிரசவ வலி என்பது என்னவென எல்லாருக்கும் தெரியும். அத்தனை வலிகள் மிகுந்த தருணமிது. எந்த நெருக்குதல் எதுவும் நடக்கலாம். என்கின்ற நேரமிது. மனைவியின் அந்த அவஸ்தை தருணத்தை விடியோ எடுத்த கணவனை என்னவென்று சொல்வது.




மனைவியின் பிரசவ வேதனையை கணவனால் புரிந்துகொள்ள முடியவில்லையா? அல்லது புகைப்படமோகம் அவரை அப்படி செய்யவைத்ததா என்று தெரியவில்லை.

பிள்ளைகளோடு பூங்காவுக்கும், மைதானத்துக்கும் வருகின்ற பெற்றோர்களில் பலர் அந்தப் பிள்ளைகளோடு சிரித்து விளையாடுவதைக் காட்டிலும் அல்லது அந்த மழலைகள் விளையாடும் அழகை காட்டிலும் அதை புகைப்படம் எடுத்து சமூக வளைத்தளங்களில் போடுவதிலேயே அக்கறை காட்டுபவர்களாக உள்ளனர். இதுவும் விளையாட்டாய் ஒரு செய்தியை உருவாக்கி வருகிறது. அல்லது நிஜத்தை நிறைவாக அனுபவிப்பதைத் தடுத்துவிடுகின்றது. பிள்ளைகளின் ஒவ்வொரு தருணங்களையும் ஆவணப்படுத்துவது நல்லதுதானே என வாதிடுவோரும் உள்ளனர். ஆனால், அவ்வாறு நிழல்களை ஆவணப்படுத்துவதற்காக நிஜங்களை தொலைத்துவிடாதீர்கள் மானிடரே. ▲




**தயானி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி :** அதிக கதைப் புத்தகங்களை வாசித்தல்; அதிகம் கார்டூன் பார்த்தல் என்பவற்றால் ஏதாவது பிரச்சினை உண்டா?

**பதில் :** கத்தியானது தீட்டத் தீட்டத்தான் கூர் ஆகின்றது அதுபோல ஓர் மனிதன் வாசிக்க வாசிக்கத்தான் அறிவாளி ஆகிக் கொண்டு செல்வான். ஆனால், நீங்கள் வாசிக்கின்ற புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாசிக்கப் பழக வேண்டும் நல்ல புத்தகங்கள் உங்களை மேன்மையடையச் செய்யும்.

**ரவி, வட்டவளை.**

**கேள்வி :** ''அன்னியன்'' விக்ரம், ''ஐ'' விக்ரம் இதில் உங்களுக்கு பிடித்தது யார்?

**பதில் :** எனக்கு இரண்டு விக்ரமும் பிடித்துள்ளது. அன்னியனில் அசத்துகின்றார் என்றால் ''ஐ''யில் மிரட்டுகின்றார். விக்ரமின் நடிப்பில் என்றுமே ஓர் ஈடுபாடு காணப்படும் அது எனக்கு பிடித்திருக்கிறது. அது சரி ரவி உங்களுக்கு எந்த விக்ரமை பிடித்திருக்கென்று சொல்லவேயில்லை?



**மதுரா, ஏழாலை.**

**கேள்வி :** அம்மு, காதலில் அதிகம் சொதப்புவது ஆண்களா? அல்லது பெண்களா? தயவுசெய்து சொல்லுங்களேன்?

**பதில் :** காதலில் அதிகம் சொதப்புவது ஆண்களா? பெண்களா? என்பது எனக்கு தெரியாது. ஆனால், காதலிகும்போது அதிகம் சொதப்பி கவலைப்படுவது என்னவோ அப்பாவி ஆண்கள்தான் என்பது இவ் அம்முவின் அபிப்பிரயம். அது சரி மதுரா, இப்ப ஏன் உங்களுக்கு இப்படி ஒரு சந்தேகம் வந்தது?

**சங்கீதா, உடுப்பிட்டி.**

**கேள்வி :** உலகில் நிகழ்த்தப்படுகின்ற மிகப்பெரிய கொடுமை என்று எதைக் கூற முடியும்?

**பதில் :** உலகில் பல்வேறு கொடுமைகள் நிகழ்ந்துகொண்டிருந்தலும் மிகப்பெரிய கொடுமை என்பது நமக்குத் தெரியாமலே நமக்கு இழைக்கப்படும் கொடுமைதான். இது வேறு எங்கும் நிகழ்ந்துவிடப்போவதில்லை. நமது வீடுகளிலேயே இது இடம்பெற வாய்ப்




புண்டு. கணவனால் மனைவிக்கு, மனைவியால் கணவனுக்கு, பெற்றோரால் பிள்ளைகளுக்கு, பிள்ளைகளால் பெற்றோருக்கு இது நிகழ்வதுண்டு. இவற்றுள் வெளிவராத மிகப்பெரிய கொடுமைகளும் அடங்கும்.

**விதுரா, பாண்டியன்குளம்.**

**கேள்வி :** நம்ம திரிஷாவிற்கு திருமணமாமே உண்மையாகவா அம்மு?

**பதில் :** என்ன விதுரா இப்படிக் கேட்டுபிட்டீங்க. திரிஷாவிற்கு திருமணம் என்பது பழைய செய்தி. நிச்சயார்த்தமும் முடிந்துவிட்டது என்பது லேட்டஸ் செய்தி. திரிஷா ஆன்டிக்கு 30 வயதுக்கு மேலகிவிட்டது. இனியும் திருமணம் செய்யாமல் என்ன செய்வதென்று யோசித்திருப்பாங்களோ என்னவோ? திரிஷாவின் திருமணம் யாருக்கு சந்தோசமகிறதோ இல்லையோ சகநடிகைகளுக்கு ஏகசந்தோசம். வேறெதுக்கும் இல்லை; இனியாவது திரிஷாவின் இடத்தை பிடிக்கலாம் என்றுதான் அந்த சந்தோசம். ▲



## வாசகர் உள்ளங்கள்

"ஒளி அரசி" வெளியானது முதல் இன்றுவரை அதனை வாசித்துச் சுவைத்து, ருசித்து வருகிறேன். இது பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களும் படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த சஞ்சிகையாகும்.

**ஜெனீரா ஹைருல் அமன்,**
**கிண்ணியா.**




ஒளி அரசி சஞ்சிகை எனக்குப் புதிதாகத்தான் அறிமுகமானது. இருப்பினும் முதல் அறிமுகத்திலேயே மனதைப் பறிகொடுத்துவிட்டேன். ஒளி அரசியின் பக்க வடிவமைப்புக்கள் மற்றும் அதிலடங்கியுள்ள சுவாரஸ்யமான தகவல்களே இக்கடிதத்தை எழுதும்படி என்னைத் தூண்டியிருக்கின்றது. ஒளிஅரசி சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒளி அரசியின் தோழியும், வாசகியுமாகிய நான் ஒளி அரசி பற்றிய சில சந்தேகங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். ஒளிஅரசிச் சஞ்சிகையானது மாதமொருமுறை வெளிவருவதை நான் அறிவேன். அது மாதத்தின் நடுவிலோ அல்லது இறுதியிலோ வெளிவருகின்றது? என்பதை எனக்கு அறியத் தாருங்கள்.

**கே. ரசியா றிஷான்,**
**எளியகொட.**

**குறிப்பு :** ஒளிஅரசி சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி அன்று முகவர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

# டோனட்ஸ்



**தேவையான பொருட்கள் :**

கோதுமை மா - 1/2 கிலோகிராம்

சீனி - 1/2 கிலோகிராம்

முட்டை - 01

தேங்காய்ப் பால் - 1/4 கோப்பை


பேக்கிங் பவுடர், உப்பு - சிறிதளவு

**செய்முறை :**

அரித்தெடுத்த கோதுமை மாவினுள், பேக்கிங் பவுடரையும் சீனியையும் சேர்த்துப் பிசைய வேண்டும். முட்டையை நன்றாக அடித்துக்கொள்ளவும். தேங்காய்ப்பாலில் உப்பைக் கலக்கவும். பின் அடித்து வைத்த முட்டையையும் சேர்த்து மாவுடன் கலந்து நன்றாகப் பிசைந்தெடுத்து, ஏண்ணெய் பூசிய தட்டில் பரப்பி, வேண்டிய வடிவில் வெட்டியெடுத்து, எண்ணெயைக் கொதிக்க வைத்துப் பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும். காற்றுப்புகாத டின்னில் அடைத்து ஒரு வாரத்துக்குப் பயன்படுத்தலாம். சிறுவர்கள் மிக விரும்பி உண்ணுவார்கள்.




# கல்கண்டு சாதம்



**தேவையான பொருட்கள் :**

பச்சரிசி - 1 1/2 கோப்பை

பால் - 2 கோப்பை

முந்திரி - 15

கிஸ்மிஸ் - சிறிது

நெய் - 1/4 கோப்பை

ஏலக்காய் - 3

குங்குமப்பூ - சிறிது

சீனி - 3 கோப்பை

கல்கண்டு கிடைக்கும் இடத்தில் அதை உபயோகிக்கவும்.

**செய்முறை :**

2 கோப்பை பால், 2 கோப்பை தண்ணீர் சேர்த்து அரிசியை வேகவிடவும்; பின் நன்றாக வேகிய அரிசியை மசித்து விட்டு அதனுடன் சீனி சேர்க்கவும், அதன் பின்னர் ஏலம் போடவும். குங்குமப்பூவை சிறிது வெந்நீரில் போட்டு கரைத்து ஊற்றவும் நெய் சேர்க்கவும். முந்திரி, கிஸ்மிஸ் வறுத்து தூவவும்.


# பிறந்தநாள் வாழ்த்துக்கள் பெப்ரவரி 2015



மு. தேஸ்னா சஞ்சுஸ்மூ
1 ஆம் திகதி
180, [illegible]



மு. ஆபியா அக்தரி
2 ஆம் திகதி
14. பிரதான வீதி. ஏறாவூர் - 01




ரிஸானா
4 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



அபினயா
7 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



ஜெயந்தன் பிரகாஷ்
8 ஆம் திகதி
அல்வாய் மேற்கு அல்வாய், யாழ்ப்பாணம்



ஜெயந்தன் பிரதீப்
8 ஆம் திகதி
அல்வாய் மேற்கு அல்வாய், யாழ்ப்பாணம்




சஷீந்தன் கெளஷிகா
9 ஆம் திகதி
நெல்லியடி கரவெட்டி, யாழ்ப்பாணம்



சைந்தவி
11 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



எஸ்.யொஹான் ஈஷாக்
11 ஆம் திகதி
கெரவலப்பிட்டி, வத்தளை



எஸ்.துஷாரா
13 ஆம் திகதி
137. கதிரேசன் வீதி கொழும்பு -13



பிரகாஷ்
15 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



ஹவாஸ்கர்
20 ஆம் திகதி
யாழ்ப்பாணம்

## ஒளி அரசியின் பிறந்தநாள் வாழ்த்து கூப்பன்

முழுப்பெயர் : ..............................

..............................

பிறந்த திகதி : ..............................

புகைப்படம்

முகவரி : ..............................

..............................

தொலைபேசி இல. : ..............................

4ம் பக்கத்தில் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

## முக்கிய கவனத்திற்கு

Happy Birthday!

அன்பு மழலை செல்வங்களே !

உங்கள் பாடசாலை நண்பர்களின் பிறந்த நாள் வாழ்த்துக்களும் இப்பகுதியில் இடம்பெற விரும்பினால் இந்த அழகிய ஒளி அரசி சஞ்சிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து, எதிர்காலத்தில் அவர்களின் பிறந்த நாள் வாழ்த்துக்களும் வெளிவர உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


ஒளி அரசி

# தரம் 5 மாணவர்களை புலமைப் பரிசில் பரிட்சைக்குத் தயார்படுத்தும் சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்

வினாத்தாள் 1 **2015** நேரம் 45 நிமிடங்கள்

- **01 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

* **01 தொடக்கம் 03 வரையான வினாக்களுக்கு கீழ் காணும் உருக்களை அவதானித்து அடுத்து வர வேண்டிய உருவினை காண்க.**

01. 

02. 

03. 01 | 02 | 03 | ?     1. 02   2. 04   3. 05

04. 
இவ்வுருவுடன் மிகவும் தொடர்புடைய சொற்கூட்டத்தின் கீழ் கோடிடுக.
1. அழகு, மின்சாரம், தகவல்
2. அழகு, ஒளி, மின்சாரம்
3. தொழில், புத்தகம், அழகு

* **05ஆம், மற்றும் 06ஆம் வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்திற்கான கருத்தினை நன்கு விளக்கும் விடையினைத் தெரிவு செய்க.**

05. ராஜினி நன்றாக பாப்பா பாடலை பாடுவாள்.
1. ராஜினிநடனம்கற்றுக்கொண்டிருப்பவள்ஆவாள் 2. ராஜினி சங்கீதம் கற்றவள் ஆவாள்
3. ராஜினி ஒரு நல்ல பிள்ளையாவாள்

06. ராஜா பாடசாலைக்கு மிக அருகில் வசிக்கின்ற மாணவன் ஆவான். அவன் கடந்த வாரம் பாடசாலைக்கு வரவில்லை எனின், அவன் பாடசாலைக்கு வராதமைக்குக் காரணமாக அமையக்கூடிய கூற்று யாது?
1. பாடசாலை பேரூந்து வராதிருந்தமை 2. ராஜா சுகயீனமுற்று இருந்தமை
3. பாடசாலை விடுமுறை காலம் என்பதினால் ஆகும்

* **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

07. புத்தகமொன்றில் எப்போதும் காணப்படுபவை
1. படங்கள் 2. பக்கங்கள் 3. பாடல்கள்

08. பாடசாலை ஒன்றில் எப்போதும் காணக்கூடியது.
1. மாணவர் 2. அதிபர் 3. கட்டடங்கள்

09. ஒரு மரத்தில் எப்போதும் இருப்பது.
1. வேர் 2. பூ 3. காய்

* **10ஆம் 11ஆம் வினாக்களில் சரியான கருத்தினைத் தரும் விடையினை மட்டும் தெரிவு செய்க.**

10. 1. தபாலகத்தில் முத்திரை வாங்கி கடிதம் அனுப்பலாம்.
2. கடிதத்தில் முத்திரை வாங்கி தபாலகம் அனுப்பலாம்.
3. முத்திரையில் கடிதத்தை தபாலகத்திற்கு அனுப்பலாம்.

11. 1. சிறுவர்களாகிய நாம் பெரியோர்களை மதிக்க வேண்டும்.
2. பெரியோர்களாகிய நாம் சிறுவர்களை மதிக்கவேண்டும்.
3. மதிக்கவேண்டும் சிறுவர்கள் நாம் பெரியோரை

* **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

12. சதுர வடிவான காணித்துண்டினைச் சுற்றி வேலி அடிப்பதற்கு ஒரு பக்கத்திற்கு 04 தூண்கள் தேவைப்பட்டது, எனின் அக்காணியினைச் சுற்றி வேலி அடிப்பதற்கு தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?
1. 15 2. 16 3. 12

13. ராஜா, கவி, திவி, மது ஆகியோர் புதுவருட வாழ்த்து மடல்களை ஒருவருக்கொருவர் பரிமாற்றிக் கொண்டனர். எனின் அங்கு பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?
1. 12 2. 14 3. 10

14. எனது வயது 10ஆகக் காணப்பட்ட போது அப்பாவின் வயது 40 ஆகும். அப்போது அண்ணாவின் வயது 15 ஆகும். இதன் படி அண்ணாவின் வயது 22ஆக காணப்படும் போது அப்பாவின் வயது யாது?
1. 46 2. 47 3. 48

* **பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் பதிலாக முறையே இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 15, 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

| LIKE - 0432 | NIKE - 7432 | BOOKS - 15538 |
|---|---|---|

15. இதன்படி NOSE என்றச் சொல்லைக் குறிக்கும் இலக்கங்களைக் கொண்டமைந்துள்ளது?
1. 7581 2. 4780 3. 7582

16. 7482 என்ற இலக்கங்கள் குறித்து நிற்கும் சொற்பதம் யாது?
1. NISE 2. NOOS 3. NIKE

17. O, E ஆகிய எழுத்துகளுக்குப் பொருத்தமான எண்களை முறையே கொண்ட விடையினைத் தெரிக?
1. 0, 8 2. 5, 3 3. 5, 2

18. 400 இன் 1/4 மடங்குடன் 25ஐ கூட்டி 10ஐ கழிக்கும் போது கிடைக்கும் பெறுமதி யாது?
1. 125 2. 425 3. 115

19. 30 தொடக்கம் 39வரையான இலக்கங்களை எழுதும் போது இலக்கம் 3 எத்தனை முறை இடம்பெறுகின்றது

1. 10 2. 11 3. 09

* **20, 21 ஆகிய வினாக்களுக்கு கீழ்காணும் தகவலை நன்கு அவதானிக்குக. ஒரு வீதியில் இரு கம்பங்களுக்கிடையில் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறக் கொடிகள் முறையே தொங்கவிடப்பட்டிருந்தன. இதனை கருத்தில் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைத் தருக.**


20. மேலே கூறப்பட்ட தரவின்படி 34வதாக தொங்கவிடப்பட்டிருக்கும் கொடியின் நிறம் யாது?

1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை

21. இவ்விருக் கம்பங்களுக்கிடையில் 50 கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தால் எத்தனை நீலக் கொடிகள் காணப்படும்?

1. 15 2. 16 3. 17

* **22ஆம், 23ஆம் வினாக்களுக்குப் பின்வரும் உருக்களை அவதானித்து விடை தருக.**




22. A பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்குப் பாத்திரம் C இல் எத்தனை முறை நீரை எடுக்க வேண்டும்?

1. 08முறைகள் 2. 06முறைகள் 3. 04முறைகள்

23. 1 லீட்டர் நீரை பெறவேண்டுமானால் பாத்திரம் B இல் எத்தனை முறை நீரை எடுக்கவேண்டும்?

1. 04 முறைகள் 2. 05 முறைகள் 3. 10 முறைகள்

* **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

24. எல்லா பசுமையான மரங்களும் காற்றிற்கு அசைந்தன. இக்கூற்று

1. பெரும்பாலும் உண்மையானது 2. எப்போதும் உண்மையானது

3. கூறமுடியாது

25. அதிகாரம் கூடிச்செல்லும் வகையில் காணப்படும் விடையினைக் காண்க.

1. மாணவர், ஆசிரியர், அதிபர், உப அதிபர்

2.மாணவர்,மாணவத் தலைவர், ஆசிரியர், அதிபர்

3. மாணவர், ஆசிரியர், உப அதிபர், மாணவத் தலைவர்

26. தை மாதம் 04ஆம் திகதி புதன் கிழமை எனின் அம்மாதம் 28ஆம் திகதி என்ன கிழமையில் வரும்?

1. வியாழக்கிழமை 2. சனிக்கிழமை 3. ஞாயிற்றுக்கிழமை

27. ராஜினி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சந்தைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டவள். அவள் நேற்று முன்தினம் கூறினாள் நாளை மறுதினம் நான் சந்தைக்குச் செல்வேன் என. எனின் இன்றைய தினம் யாது?

1. ஞாயிற்றுக்கிழமை 2. சனிக்கிழமை 3. திங்கட்கிழமை

28. மாலையில் நான் வீட்டுக்குச் சென்றப்போது எனது நிழல் என்னை பின் தொடர்ந்தது எனின், வீடு எத்திசையில் அமைந்துள்ளது?

1. தெற்கு    2. கிழக்கு    3. மேற்கு

29. ஒரு பிள்ளைக்கு 100கிராம் சத்துணவுப் படி வழங்க தீர்மானிக்கப்பட்டு, 10 கிலோகிராம் சத்துணவுப் தயாரிக்கப்பட்டது. இச்சத்துணவினை எத்தனை பிள்ளைகளுக்கு பகிர்தளிக்கலாம்?

1. 100 பிள்ளைகளுக்கு    2. 10 பிள்ளைகளுக்கு    3.50 பிள்ளைகளுக்கு

30. நோயாளர் ஒருவருக்கு ஒரு வேளைக்கு 04 வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் மருந்து வில்லைகளை உட்கொள்ளுமாறு வைத்தியர் கூறினார். இதன்படி 25 நாட்களுக்குத் தேவையான மருந்து வில்லைகளின் எண்ணிக்கை யாது?

1. 100 வில்லைகள்    2. 150 வில்லைகள்    3. 300 வில்லைகள்

31. ஒரு கைப்பையினைத் தைப்பதற்கு 75cm துணி தேவைப்படுகின்றது இதன்படி 7m 50cm துணியில் எத்தனை கைப்பைகளைத் தயாரிக்கலாம்?

1. 10    2. 07    3. 09

32. ஒரு பத்திரிகை நிறுவனத்தில் 587 பத்திரிகைகள் வாங்கப்பட்டன. இதில் 309 பத்திரிகை விற்கப்பட்டன. எனின் மிகுதியான பத்திரிகை எத்தனை?

1. 265    2. 278    3. 268

33. ஒரு நெக்டோ மென்பானபோத்தல் மூலம் 03 பேரை உபசரிக்கலாம் எனின் 20 பேரை உபசரிக்க எத்தனை போத்தல் தேவை?

1. 6 போத்தல்    2. 7 போத்தல்    3. 8 போத்தல்

34. சீகிரியா ஓவியத்தை ஒத்த இன்னுமொரு ஓவியம் எது?

1. அஜந்தா ஓவியம்    2. சீகிரியா ஓவியம்    3.மோனாலிஸா ஓவியம்

35. பின்வருவனவற்றில் வல்லின மெய்யெழுத்துக்கள் எவை?

1. க், ச், ட், த், ப், ற்    2. ங், ஞ், ண், ந், ம், ன்    3. ய், ர், ல், வ், ழ், ள்

36. ஆசிய அபிவிருத்தி வங்கி என்பதின் சுருக்க குறியீடு யாது?

1. A. M    2. A. D. B    3. P. H. N

37. சமச்சீர் உள்ள ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட கூட்டம் எது?

1. A, E, H, O    2. L, O, V, W    3. M, H, V, P

38. பின்வரும் கோட்டுப்படத்தின் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்கு பொருத்தமான எண்ணை காண்க?

4820 — 8204    2048 — 0482    8204 — ?

1. 4802    2. 2048    3. 4028

39. ஒரு மாணவனிடம் 09 நாணயங்கள் உள்ளன. இவற்றின் பெறுமதி ரூ. 15.00 எனின் அந்த மாணவனிடம் எவ்வகையான நாணங்கள் காணப்படக் கூடும்?

1. ஐந்து ரூபாய் 02உம், இரண்டு ரூபா 02உம், ஒரு ரூபா 05உம்
2. ஐந்து ரூபாய் 02உம் , ஒரு ரூபாய் 03உம், ஐம்பது சதம் 04உம்
3. ஐந்து ரூபாய் 01உம், இரண்டு ரூபாய் 03உம் , ஒரு ரூபாய் 01உம், ஐம்பது சதம் 02உம்

40. 1/3 எனும் பின்னத்தின் சமவலுப்பின்னம் யாது?

1. 3/6    2. 3/8    3. 3/9



புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது மன்னார் மடுமாதா தேவாலயத்திற்கு சென்றவேளை எடுக்கப்பட்ட படம்



சுதந்திர தின
வாழ்த்துக்கள்
Edinborough®
In Every Cuisine
1973 - 2013
40 Years
தை பிறக்க நல்ல வழி பிறந்து உங்கள் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் பொங்கிட வாழ்த்துகிறோம்....
உலகம் முழுவதும் நம்பிக்கையை வெற்றி கொண்ட உயர் தர "எடின்பரோ" தயாரிப்புகள் அனைத்தையும் இப்பொழுது நீங்கள் சுவைத்திடலாம்.
40 வருட அனுபவத்தினூடாக அதிசிறந்த மூலப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் "எடின்பரோ" தயாரிப்புகளை சுப்பர்மார்க்கட்டுகள் உட்பட நாடுமுழுவதிலுமுள்ள விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
சுவையும் குணமும் நிறைந்த
தக்காளி சோஸ்,
சிலி சோஸ்,
ஒய்ஸ்ட்டர் சோஸ்,
சோயா சோஸ்,
மயோனைஸ் சோஸ்,
மஸ்ட்டட் கிரீம்,
மெங்கோ சட்னி
உட்பட பல்வேறு தயாரிப்புகள் உங்களுக்காக.
Tomato Sauce
Soy Sauce
Sweet Chilli Sauce
Oyster Sauce
Real Mayonnaise
Mustard Cream
Mango Chutney
amk-colombo
Edinborough Products (Pvt) Ltd. Tel: 0117 326 326 | Fax: 0114 617 655 | email: info@edinboroughfoods.com | web: www.edinborough.lk | # 12, New Kolonnawa Road, Moragasmulla, Rajagiriya, Sri Lanka



UBLIC LIBRARY
JAFFNA

UBLIC LIBRARY
JAFFNA

திருமண பந்தத்தில் இணைக்கும்
பாலமாக இருக்கும் உங்கள் முதல்தர
திருமணசேவையில் பதிய அழையுங்கள்.

0777 111786.

RealMatrimony
*Find your Life Partner.*

# 25-50 % OFF Voucher

***Condition Apply

For more details, Just type OFF and SMS to 0777111786

RealMatrimony
*Find your Life Partner.*
www.realmatrimony.com

Registered Address: RealMatrimony Pvt Ltd, 18, Mallika Lane, Colombo 06.